# ESSAYS ON
# THE RURAL ECONOMY
# OF INDIA

BY

J. S. PONNIAH, M.A., Dip. Econ., F.R.E.S.

*American College, Madura.*

PRICE] [RE. 1-0-0

FIRST PUBLISHED, 1934.

ALL RIGHTS RESERVED.

# உள்ளுறை.


| கட்டுரை | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை .... .... *Introductory* | 1 |
| 2. | நிலவளமும் நீர்வளமும் .... *Fertility of land and Irrigation Works* | 5 |
| 3. | விளைபொருள்கள்—I .... *Agricultural Products* | 11 |
| 4. | விளைபொருள்கள்—II .... *Agricultural Products* | 19 |
| 5. | வியவசாயிகளின் வருமானம் .... *Income of the Agriculturists* | 29 |
| 6. | நிலவரித் திட்டங்கள் .... *Land Revenue Systems* | 34 |
| 7. | புலங்களின் அமைப்பும் அளவும்—I *The Form and Size of Holdings* | 44 |
| 8. | புலங்களின் அமைப்பும் அளவும்—II *The Form and Size of Holdings* | 51 |

9. ஆடுமாடுகள் .... .... 59
*The Cattle Problem*

10. வியவசாயிகளின் கடன்கள்—I .... 69
*Agricultural Indebtedness*

11. கூட்டுறவு இயக்கம் .... 81
*The Co-operative Movement*

12. வியவசாயிகளின் கடன்கள்–II .... 89
*Agricultural Indebtedness*

13. புதிய பயிர்த்தொழில் முறைகள் .... 100
*Improved Methods of Agriculture*

14. விளைபொருள்களை விற்கும் முறைகள் 111
*Marketing of Agricultural Produce*

15. கிராமக் கைத்தொழில்கள் .... 120
*Rural Industries*

16. கல்வி .... .... 127
*Education*

17. கிராமச் சீரமைப்பு .... 134
*Rural Reconstruction*

# 1

## முன்னுரை.

## (Introductory.)

---

சென்னைமாநகரவீதிகளில் நீங்கள் சென்றால் நம் முன்னோர் பார்த்திராத அநேக அரும்பெருங் காட்சிகளைக் காணலாம். வீதிகளின் இருபக்கங் களிலும் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்கவித மாய் அலங்கரிக்கப்பட்டுப் பற்பலவிதமான விலை யுயர்ந்த சாமான்கள் விற்கப்படும் பலபல கடை கள் விளங்கும். ஒருபக்கத்தில் விரைந்துசெல்லும் சிறிதும் பெரிதுமான மோட்டார் வண்டிகளையும், இன்னுமோர் பக்கத்தில் இருப்புப்பாதைகளின் மேல் பெருங்கூச்சலிட்டு விரைந்துசெல்லும் புகை வண்டிகளையும் மின்சார வண்டிகளையும் கண்டு மகிழலாம். இவைமட்டுமா? ஆகாயத்திற் பற வைகள் பறந்துதிரிந்தாற்போல மனிதர் ஏறிச் செல்லும் ஆகாய விமானங்களும், ஆயிரக்கணக் கான மைலுக்கப்பாலுள்ள நாடுகளில் நடக்கும் வர்த்தமானங்களையெல்லாம் சில மணிநேரங்க ளில் தெரிந்துகொள்ளுவதற்காக அமைக்கப்பட்

டிருக்கும் ஆகாயவசனி (Wireless) ஸ்தாபனங்களும், நீராவியின் ஆற்றலால் பெருங்கடலையும் கடந்துசெல்லும் கப்பல்களும், அம்மம்ம! இவற்றை இயற்றியவர் மனிதரோ? பூதமோ? என அதிசயிக்கக்கூடிய இவைபோன்ற இன்னும் பல காட்சிகளும் அங்கே உண்டு. மேலும், மிகப் பெரிய நெசவுத்தொழிற்சாலைகளையும் வேறுபல தொழிற்சாலைகளையும் அங்கே காணலாம்.

2. இவ்விநோதங்களை யெல்லாம் சென்னையின்கண் மட்டுமன்று; பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களிலும், மதுரை, அலகபாத், பெஷாவார் முதலான சிறிய நகரங்களிலும் காணலாம். ஆயினும், இத்தகைய நகரங்கள் நமது தேசத்தில் மிகச் சிலவே. 1931-ம் வருட ஜனசங்கியைக் கணக்கின்படி இந்தியாவிலுள்ள நகரங்களின் மொத்த எண் 2575; அந்நகரங்களில் வசிக்கும் மக்கள் தொகை சுமார் 3 கோடி 89 லக்ஷம் (11%).

3. எனவே மேல்நாடுகளான இங்கிலாந்து, ஜெர்மனி முதலான தேசங்களின் நகரங்களுடனும் நகரமாந்தர் தொகைகளுடனும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இந்தியாவிலுள்ள நகரங்களின் தொகையும் நகரவாசிகள் தொகையும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுடையனவாகும்.

4. ஆனால் நமது இந்தியாதேசத்தில் தேனடையிலுள்ள சிற்றறைகள் போலச் சுமார் ஏழு லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன! அவற்றில் வசிப்போர் சுமார் 32 கோடி மாந்தர் ஆவர்; இந்தியமக்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கிராமவாசிகள் ஆவர். இந்தியாவிலுள்ள கிராமவாசிகளின் தொகை உலகமுழுதுமுள்ள மக்கட்டொகையில் ஐந்திலொரு பங்காகும்! கிராமங்களே இந்தியாவின் உயிர்நிலையெனவும் கிராமவாசிகளே இந்தியமக்கள் எனினும் மிகையாகாது. இக்கிராமங்களிற் காணக்கிடப்பன மின்சாரவண்டிகளும் ஆகாயவிமானங்களும் தொழிற்சாலைகளுமன்று; வயல்களும், தோட்டங்களும், ஆடுமாடுகளுமேயாம்.

5. இந்த ஏழு லக்ஷம் கிராமங்களின் நிலை என்ன? இந்த முப்பத்திரண்டு கோடி கிராம மக்களின் வாழ்க்கை எத்தன்மையது? வயல்களையும், துரவுகளையும்,ஆடுமாடுகளையுமே நம்பி உயிர் வாழும் இம்மக்கள் செழித்தோங்கி வளர்ச்சியுறுகின்றனரா? அன்றி வறுமையாற் பிணிக்கப்பட்டுத் துயர்க்கடலில் ஆழ்ந்துகிடக்கின்றனரா? அன்னவரின் வாழ்க்கைநலனுக்கும் பொருள் வளர்ச்சிக்கும் இடர்ப்பாடாக நிற்பவை யாவை? அவற்றைக் களைவதெங்ஙனம்? இவ்வினாக்களும் இவைபோன்ற பிறவும் ஒவ்வொரு இந்தியனின்

உள்ளத்திலும் உதிக்கவேண்டுவனவன்றோ? இவ் வினக்களுக்குரிய விடைகளை எவரும் விளக்க வேண்டுவ தில்லை; அவை உள்ளங்கை நெல்லிக் கனிபோல எல்லாராலும் எளிதில் அறியற்பாலன.

6. இன்று நமது கிராம வாழ்க்கை சிதைந்து, வேளாண்மை தாழ்வுற்று, மக்களின் பொருளாதாரநிலை எவ்விதத்திலும் இரங்கத் தக்கதா யிருந்துவருகிறது.

7. "இந்த ஏழு லக்ஷம் கிராமங்களின் நிலை யையும் நேர்படுத்துவதே இந்தியரின் முதற் கடமை. அதுவே நமது அழியாத பாக்கியம். ஆதலால் இப்பொழுது நம் நாட்டிலேற்பட்டுள்ள புதியகிளர்ச்சியின் முக்கியமான வேலை யென்ன வென்றால் முதலில் சீர்குலைந்துள்ள இந்த லக்ஷக் கணக்கான கிராமங்களைத் திருத்தியமைப்ப தாகும். அவ்வாறு செய்வதில் மேல்நாட்டு நாகரி கத்தின் நல்ல அம்சங்களையும் சுகாதார முறை களையும் கைக்கொண்டு, பழைய முறைகளோடு கலந்து மேன்மைப்படுத்தவேண்டும். அப்படிச் செய்யின் நம் நாட்டில்மட்டுமன்று உலகமுழு துமே கிராமவாழ்வின் சிறப்பை நாம் பரவச் செய்தவர்களாவோம்." *

---

* கே. எஸ். வேங்கடாமணி, "நமது கிராம வாழ்க்கை" கலைமகள் தொகுதி 1, பகுதி 4, பக்கம் 360.

# 2

## நிலவளமும் நீர்வளமும்.

## (Fertility of Land and Irrigation Works.)

---

நமது தேசத்தில் நூற்றுக்கு எழுபத்தொன்பது பேர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஏன் இம்முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனரென்று ஆராயுங்கால், நமது தேசம் பயிர்த்தொழில் செய்தற்கு ஏற்ற இயற்கை வளங்களுடன் நன்கமைந்திருப்பதே முக்கிய காரணம் என விளங்கும்.

### சிந்து-கங்கை நதிகளின் சமவெளி.

2. வருஷத்தில் ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து நாளும் இருகரையும் புரண்டோடும் சில பெரிய நதிகளும் மற்றும் அநேக சிறிய நதிகளும் நம் நாட்டில் உண்டு. வட இந்தியாவில் சிந்து, கங்கை, பிரமபுத்திரா என்னும் பெரிய நதிகளும் அவற்றின் எண்ணிறந்த கிளைநதிகளும் ஆயிரக்கணக்கான மைல் பரப்புள்ள நிலங்களுக்கு நீர்வளம் அளிக்கின்றன. கங்கை, சிந்து

நதிகளின் நடுவே இருக்கும் சமவெளி இரண்டாயிரம் மைல் நீளமும் இருநூறு மைல் முதல் ஐந்நூறு மைல் வரை அகலமும் உள்ளது. இப்பெரிய சமவெளி முழுவதிலும் ஒரு சிறு மலையேனும் குன்றேனும் காண்பதரிது. இங்கே வருஷத்தில் சராசரி 80 அங்குலத்திற்குமேல் மழை பெய்கிறது. ஆகையால் இச்சமவெளிப் பிரதேசம் முழுவதிலும் சிறுபான்மை கோதுமையும் பெரும்பான்மை நெல்லும் விளைகின்றன.

### பர்மா நாட்டு வளம்.

3. இந்தியாவிற்குக் கிழக்கேயிருக்கும் பர்மா நாடு நிலவளமும் நீர்வளமும் நிரம்பியது. உலகத்தின் மற்றெல்லாப் பாகங்களைக்காட்டிலும் அங்கு மழை அதிகம். வருஷத்தில் சுமார் 400 அங்குலம் வரையும் அங்கு மழை பெய்கிறது. எனவே நெடுந்தூரம்வரைக்கும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல அழகாய்க் காணப்படும் நெல்வயல்கள் பல அங்குள்ளன. இந்தியாவின் நெல்விளைவில் 100க்கு 71 பாகம் பர்மாவில் விளைவதெனின் அந்நாட்டின் வளத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

### தென் இந்தியாவிலுள்ள நதிகள்.

4. தென் இந்தியாவிலும் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி என்னும் பெரிய நதி

களும், பாலாறு, தாம்பிரபர்ணி முதலான சிறிய நதிகளும் பாயும் தீரங்களும் நெற்பயிருக்கேற்ற வளங்கள் நிறைந்துள்ளன.

## நீர்ப்பாய்ச்சல் ஸ்தாபனங்கள்.

**5.** இயற்கையிலேயே அமைந்துள்ள இந் நதிகளைத்தவிர வேளாண்மைக்கு அநுகூலமாக மனிதர் வெட்டியுள்ள கால்வாய்களும் (**canals**) பலவுள. அவற்றுள் முக்கியமானவை பின்வருவனவாம்: 'ஷெர்ஷா' (**Sher Shah**) என்னும் மகமதிய அரசன் வட இந்தியாவில் வெட்டியுள்ள 'சீனுப்' (**Chenab**) கால்வாய் அநேக மைல் நீளமுள்ளது. அது பாயும் தீரத்தில் ஆறுகோடி ரூபாய் மதிப்புள்ள கோதுமை வருஷந்தோறும் விளைகிறது. 'பிரோஸ்ஷா' (**Feroz Shah**) என்னும் அரசன் வெட்டிய 'ஜம்னு' (**Jumna**) கால்வாயும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது. அங்ஙனமே தென்னிந்தியாவில் விஜயநகர அரசரான கிருஷ்ணதேவ ராயர் கட்டிய 'துங்கபத்திரா' (**Tungabadra**) என்னும் கால்வாயையும், ராஜராஜசோழன் காவிரிநதியில் அணைகட்டி உண்டுபண்ணியிருக்கும் கால்வாயையும் கண்டு வியவாதவர் இல்லை. நாம் இங்குக் கூறியன பெருங் கால்வாய்கள்; தேசத்தின் நாலு திசைகளிலும் பரவிக்கிடக்கின்ற சிறு கால்வாய்களோ எண்ணிறந்தன.

6. இவையன்றி, நமது தேசத்தை இப்பொழுது ஆண்டுவரும் ஆங்கிலேயர் அரியனவும் பெரியனவுமாகிய பல நீர்ப்பாய்ச்சல் ஸ்தாபனங்களை (irrigation works) ஆங்காங்கே அமைத்துள்ளார்கள். காவிரிநதியிற் கட்டப்பட்டுள்ள மேல்அணைக்கட்டும் (Upper Anicut) கீழ்அணைக்கட்டும் (Lower Anicut) வியக்கத்தக்கன. மேட்டூர் என்னும் ஊருக்கருகில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு (Mettur Dam) சுமார் 7 கோடி ரூபாய் செலவில் முடிவானது; அதனால் நீர்ப்பாய்ச்சலுக்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் நிலம் 3 லக்ஷம் ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வட இந்தியாவில் 1933-ம் வருடத்திற் கட்டிமுடித்த 'சுக்கூர் பாரேஜ்' (Sukkur Barrage) என்னும் நீர்த்தேக்கம் (Storage works) உலகத்திலுள்ள எல்லா நீர்த்தேக்கங்களிலும் பெரியது; அது 18 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டது; 80 லக்ஷம் ஏக்கர் நிலத்திற்கு நீர்வளம் அளிக்கிறது ; இதுகாறும் வெறு நிலமாகவிருந்து இந்நீர்த் தேக்கத்தால் வளம் பெறும் நிலையிலுள்ள 'சிந்து' (Sind) நாடு இனி 'நீல' நதி (the Nile) பாய்வதினால் வளம்பெற்றிலங்கும் எகிப்துதேசம் (Egypt) போலாகும் எனக் கருதப்படுகிறது. மேலும் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் ஆங்கிலேயரால்

அமைக்கப்பட்ட சின்னஞ் சிறிய எண்ணிறந்த நீர்ப்பாய்ச்சல் ஸ்தாபனங்கள் வேறு பல உள்ளன.

7. நதிகளும் கால்வாய்களும் பாயாத மேட்டுப் பிரதேசங்களிலும் உள்நாட்டிலும் கணக்கற்ற ஏரிகளும் குளங்களும் கிணறுகளும் வெட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இயல்பில் வேளாண்மை செய்வதற்குதவாத நிலங்கள் இத்தகைய செயன்முறைகளால் திருத்தப்பட்டுச் சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களும், எள், வேர்க்கடலை போன்ற எண்ணெவித்துக்களும், கரும்பு, பருத்தி போன்ற விலையேறப் பெற்ற விளைபொருள்களும் விளைவிக்கத்தக்க சிறந்த நிலங்களாக மாறியிருக்கின்றன.

## வளங்குன்றிய பிரதேசங்கள்.

8. இயற்கையிலேயே வளம்நிரம்பிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று எனப் பூகோளசாஸ்திரிகள் கூறுவதற்கு நாம் மேற்காட்டியஉதாரணங்களே தக்க சான்றாகும். எனினும் நமது தேசத்திற் சிற்சில பாகங்கள் வளங்குன்றியனவாகக் காணப்படுகின்றன. வட இந்தியாவில் இராஜபுதனமும் (Rajputana) சிந்து நாட்டின் ஒரு பாகமும் அத்தகையன; அங்கு வருஷத்தில் ஐந்து

அங்குலம் மழைகூடப் பெய்வதில்லை. பர்மாவின் மத்திய பாகமாகிய 'அரக்கான் யோமா' (Arakan Yoma) என்ற பிரதேசத்திலும் மழை மிகக் குறைவே. தக்ஷிண பீடபூமியிலுள்ள ஹைதராபாத், மைசூர் முதலான பிரதேசங்களின் சில பாகங்கள் பெருங்கற்காடானவை. மேலும் சிந்து-கங்கை நதிகளின் சமவெளிப் பிரதேசத்தைத் தவிர மற்றெல்லாப் பாகங்களின் செழிப்பும் பருவக்காற்றுக்களின் (Monsoons) மூலமாகப் பெய்யும் மழையைச் சார்ந்துதான் இருக்கிறது. எந்த வருடத்திலேனும் மழை குறையின் அந்த வருடத்தில் வேளாண்மை மட்டுப்படும்; இரண்டு மூன்று வருடங்களாகத் தொடர்ந்து மழை பெய்யாவிடின் நாட்டிற் பஞ்சமேற்பட்டுவிடும். இவ்வாறு அனவிருஷ்டியால் ஏற்படக்கூடிய இடைஞ்சல்களைத் தடுப்பதற்காகவே நீர்ப்பாசன ஸ்தாபனங்கள் பெருஞ்செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

---

# 3

## விளைபொருள்கள்—1.

## (Agricultural Products.)

---

இயற்கைவளம் நிரம்பியிருப்பதால் நமது தேசம் பயிர்த்தொழில் செய்வதற்கு மிகவும் தகுதியுள்ளதென நாம் முற்கூறினோம். ஆயினும் நம் தேசமக்கள் தமக்கு வேண்டிய உணவுப்பொருள்களையுங்கூடப் போதிய அளவில் விளைவிக்க இயலாதவராய் இருக்கின்றனர். இவ்வுண்மையைக் கீழ்வரும் உதாரணங்களால் விளக்கிக் காட்டுவோம்.

### பண்படும் நிலம்.

2. நமது தேசத்தின் மொத்த விஸ்தீரணம் 18 லக்ஷம் சதுர மைல். ஆனால் மேற்பரப்பில் மலைகள், குன்றுகள், நதிகள், காடுகள் நீங்கலாகப் பயிர்த்தொழிலுக்குத் தகுதியான நிலம் நூற்றுக்கு 35 பாகந்தான். இதில் 34 பாகம் இப்பொழுது பண்படுத்தப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய ஒருபாகமே எவ்வித வேளாண்மைக்குந் தகுதியற்

றிருப்பதாகவுங் கூறுகின்றனர்.* பண்பட்ட நிலப்பரப்புக் கணக்கின்படி இந்நாட்டை வேளாண்மையிற் சிறந்ததெனக் கொள்ளலாம்.

## உணவுப்பொருள்களே முக்கிய விளைவு.

3. பண்படும் நிலத்தின் மொத்தப் பரப்பு சுமார் 25 கோடி ஏக்கர் ஆகும். ஆயினும் இம் மொத்த நிலத்தின் சுமார் 20 கோடி ஏக்கரில் (நூற்றுக்கு எண்பது பாகம் 80%) நாம் விளைவிப்பது உணவுப்பொருள்களே! எனினும் நாம் விளைவிக்கிற உணவுப்பொருள்கள் நமது முப்பத்தைந்துகோடி மக்களுக்கும் போதுமான அளவில் இல்லை. நமது தேசத்திற் பெருபான்மையான ஏழை மக்களுக்கு வயிறார உண்ணக் கூழ் கூடக் கிடைப்பதில்லை. ஐந்திலொரு பகுதியினருக்கு ஒரு வேளைஉணவே வயிறாரக் கிடைக்கின்றதெனச் சிலர் கூறுவர். இவ்வளவு நிலவளமும் நீர்வளமும் நிரம்பிய இந்நாட்டில் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் தேசமக்களுக்கேனும் போதிய அளவில் நாம் உணவுப்பொருள்

---

* ***Abridged Report of the Royal Commission on Agriculture in India,*** P 76. "Actually there is little, if any, room for extension of the area under cultivation" (Vera Anstey–*The Economic Development of India*–P. 17.)

களை விளைவிக்க முடியாவிட்டால் இத்தேசத்தை வேளாண்மையிற் சிறந்ததெனக் கூறுவது பொருந்துமோ?

நெல்.

4. நமது உணவுப் பொருள்களாகிய விளைபொருள்களில் தலைசிறந்து விளங்குவது நெல். ஏனெனில் நமதுதேசவாசிகளுக்கு முக்கியஉணவு அரிசியே. பயிர்த்தொழில் செய்தற்கேற்ற நிலத்தில் மூன்றில் ஒரு பங்கில் (82 கோடி ஏக்கர்) நாம் நெல் விளைவிக்கிறோம். மாகாணவாரியாக நெல் விளைவிக்கப்படும் நிலப்பரப்பின் இலக்கக்கணக்கு **(statistics)** பின்வருமாறு *:— வங்காளத்தில் நூற்றுக்கு 78 பாகத்திலும், பர்மாவில் நூற்றுக்கு 71 பாகத்திலும் அஸாமில் நூற்றுக்கு 70 பாகத்திலும், பீகாரில் நூற்றுக்கு 46 பாகத்திலும், சென்னையில் நூற்றுக்கு 32 பாகத்திலும் (இதர மாகாணங்களில் சிறிது சிறிது குறைவாகவும்) நெல் விளைவிக்கப்படுகிறது. நெல் விளைவின் மொத்த அளவு சுமார் மூன்றரைக்கோடி டன்கள். இவற்றுள் சுமார் பத்தில் ஒன்பது பாகம் உள்நாட்டிற் செலவழிந்துவிடுகிறது; எஞ்சிய ஒரு

* Press Note of the Imperial Council of Agricultural Research.

பாகம்மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்படுகிறது. ஆனால் 1929ம் வருடத்திலிருந்து நெல் விளைவு குறைந்ததனால் நமது நெல் ஏற்றுமதி குறைந்துகொண்டுவருகிறது.* அன்றியும் பிறநாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு நெல் மிகுதியான அளவில் இறக்குமதியுஞ் செய்யப்படுகிறது.

5. மேலும் நாம் ஒரு ஏக்கரில் விளைவிக்கும் அளவைக்காட்டிலும் ஜப்பானியர் இரண்டரை மடங்கு அதிகமாக நெல் விளைவிக்கின்றனர். 1933-ல் ஜப்பானில் நெற்பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதம் குறைக்கப்பட்டது; ஆயினும் விளைவோ நூற்றுக்குப் பதினன்கு

---

* ஏற்றுமதி இலக்கக்கணக்கு. (டன்கள்)

| | யுத்தத்திற்குமுன் வருட சராசரி | யுத்தத்திற்குப் பின் வருட சராசரி | 1931—1932 | 1932—1933 |
|---|---|---|---|---|
| பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கு ... | 1044,000 | 835,000 | 810,000 | 861,000 |
| வேறு அயல் நாடுகளுக்கு ... | 1354,000 | 627,000 | 1491,000 | 967,000 |
| மொத்தம் ... | 2398,000 | 1462,000 | 2301,000 | 1828,000 |

வீதம் அதிகப்பட்டது. 1933-ம் ஞு நொவம்பர் மாதத்திலிருந்து 1934-ம் ஞு அக்டோபர்மீ வரை 6½ கோடி ஜப்பானியரும் தாம் தலைக்கு சுமார் 21 படி அரிசி அதிகமாக உண்டதுபோக சுமார் 5 கோடி படி அரிசியை ஏற்றுமதி செய்வர் என்பதாக ஜப்பானிய அரசாங்கத்தார் கணக்கிட்டிருக்கிறார்கள்.§ நமது விளைவு குன்றியும் பிறநாட்டார் விளைவு மிகுந்தும் இருப்பதால் ஜப்பானிலிருந்தும், சயாம் (Siam), இந்து-சீனு (Indo-China) முதலிய நாடுகளிலிருந்தும் கப்பல் கப்பலாக நெல் எல்லாத் தேசங்களுக்கும்—நமது தேசத்திற்கும்—ஏற்றுமதியாகிறது. வளம் நிரம்பிய ஏழை இந்தியாவில் நெல்விளைவு ஓங்கும் நாள் எந்நாள்?

### வேறு தானியங்கள்.

6. நெல்லுக்குப்பின் எண்ணப்படும் முக்கிய உணவுப் பொருள்கள் சோளம், கேழ்வரகு, பயறு வகைகள் (pulses) முதலானவை. இந்தத் தானியங்கள் சுமார் 12½ கோடி ஏக்கர் நிலங்களில் (பண்படும் மொத்த நிலத்தில் நேர்பாதி) எல்லா மாகாணங்களிலும் விளைவிக்கப்படுகின்

---

§ "During the period, November 1933 to the end of October 1934, the 66 million inhabitants of Japan will eat rather more than a bushel of rice each…… leaving an excess supply of 19 million bushels".

றன. இவை ஏழை மக்களின் உணவாக உள்நாட்டிலேயே செலவழிந்துவிடுகின்றன; இவற்றில் எவ்விதமான ஏற்றுமதியுங் கிடையாது.

### கோதுமை.

7. சோளம், கேழ்வரகு நெல் போன்ற வேறொரு முக்கிய உணவுப்பொருள் கோதுமை. இது பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணங்களிலும், பீரார் மாகாணத்திலும் பெரும்பான்மையாக உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் சாகுபடியாகும் மொத்த நிலத்தில் எட்டிலொரு பங்கில் (3.2 கோடி ஏக்கர்) கோதுமை பயிராகிறது. மொத்தவிளைவு ஒருகோடி டன்நிறை; இதில் ஏற்றுமதியாக்கப்படுவது ஏழில் ஒருபாகம். கோதுமை விளைவிக்கும் தேசங்களில் ருஷியா முதன்மையாகவும், அமெரிக்கா இரண்டாவதாகவும், இந்தியா மூன்றாவதாகவும், கானடா நான்காவதாகவும் விளங்குகின்றன. கோதுமை விளைவிப்பதில் இந்தியா மூன்றாவதாக நிற்பதுபற்றி நாம் இறுமாந்துவிட நிமித்தம் இல்லை. ஏனெனில் வருடாவருடம் நமது தேசத்திற்குள் அந்நியநாட்டுக் கோதுமை இறக்குமதி அதிகரித்துக்கொண்டுவருகிறது.

### சர்க்கரை.

8. இனி, நெல், கோதுமை என்பவற்றைப் போல முக்கியப் பொருளான சர்க்கரையைப்

பற்றிச் சிறிது கூறவேண்டுவது அவசியம். உலக முழுவதிலும் கரும்பு சாகுபடியாகும் நிலத்தில் நேர்பாதி இந்தியாவில் உண்டு; எனினும் நாம் விளைவிக்கும் சர்க்கரையின் அளவோ உலக உற்பத்தியில் நாலில் ஒருபங்குதான்; ஏனெனில் நாம் ஒரு ஏக்கர் நிலத்தில் விளைவிப்பதைவிட கியூபாவில் (Cuba) மும்மடங்கும், ஜாவாவில் (Java) அறுமடங்கும், ஹாவோயில் (Hawaii) எழுமடங்கும் ஆக விளைவிக்கின்றனர். அன்றியும், 1928-ல் இந்தியாவிற்குள் 15 கோடி ரூபாய் மதிப்புடைய சர்க்கரை இறக்குமதிசெய்யப்பட்டது. சர்க்கரைக்கும், நெல்லுக்கும், உப்புக்கும், அந்நியநாடுகளைச் சார்ந்துவாழும் தேசத்தை வேளாண்மையிற் சிறந்தது எனச் சொல்வது எங்ஙனம்?

### சில இறக்குமதி உணவுப் பொருள்கள்.

9. இன்னும் சற்று உற்றுராய்ந்தால் மற்ற நாட்டினரைப்போல நாம் ஆடுமாடுகளை வளர்த்து அவைகளின் பாலையாவது, இறைச்சியையாவது வயிறார உண்பதில்லை; அவற்றில் ஏற்றுமதி வர்த்தகஞ்செய்வதும் இல்லை. ஆனல் நாம் அந்நியநாடுகளிலிருந்து மிகுதியான அளவில் பாற்கட்டிகளையும், புட்டிப்பாலையும், இறக்குமதிசெய்கின்றோம். நமது தேசத்தில் எல்லாவிதமான பழங்களையும்

எந்த அளவிலும் உற்பத்தி செய்யலாம்; ஆனல் நமது பயிர்த்தொழிலாளிகளோ அங்ஙனம் செய்கின்ருரில்லை. பொதுஜனங்களுக்குப் பழஉணவே கிடைப்பதரிது; ஆனல் ஆஸ்திரேலியாவிலிருந்து பழங்களும் (fresh fruits) இங்கிலாந்து முதலான தேசங்களிலிருந்து பழமுறப்பாவும் (jam) இத்தேசத்திற்குள் இறக்குமதியாகின்றன. வேளாண்மையிற் பெரிய தேசம் இந்தியா என நாம் வீம்பு பாராட்டுவதற்கு இடமுண்டோ?

# 4

## விளைபொருள்கள்—II.
## (Agricultural Products.)

உணவுப்பொருள்களை விளைவிப்பதிலுங்கூட நமது தேசம் கேவலநிலையிலிருக்கிறதென்று முந்தின கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இனி, கைத்தொழில்களுக் காதாரமான மூலப்பொருள்களை (raw materials) உற்பத்தியாக்குவதில் நமது தாளாண்மையின் இயல்பு எவ்வாறெனெ ஆராய்வாம்.

2. நாம் முற்கூறியபடி உணவுப்பொருள்களல்லாத பிற விளைபொருள்களை (non-food crops) விளைவிக்கும் நிலம் மிகக்குறைவே. பண்படும் மொத்த நிலம் 25 கோடி ஏக்கரில் 21 கோடி ஏக்கரில் உணவுப்பொருள்களையும், எஞ்சிய 4 கோடி ஏக்கரில்மட்டுமே பிற விளைபொருள்களையும் நாம் விளைவிக்கிறோம். பனிநீரிற் கப்பலோட்ட இயலுமா? இவ்வளவு குறைந்த நிலத்திற் பிற விளைபொருள்களை விளைவித்து நமது தேச

வியவசாயிகள் எங்ஙனம் பெருத்த இலாபத்தை அடைவர்?

பருத்தி.

3. கைத்தொழிலுக்கடிப்படையான மூலப் பொருள்களில் பருத்தி முதன்மை படைத்திருக்கிறது. நமது தேசத்தில் சாகுபடியான நிலத்தில் ஆறிலொரு பாகத்தில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. அதில் பாதிப்பாகம் பம்பாய் மாகாணத்திலும், பீரார் மாகாணத்திலும் அடங்கியிருக்கிறது; எஞ்சிய பாகம் சென்னை, பஞ்சாப், சிந்து, மத்திய, ஐக்கிய மாகாணங்களில் இருக்கிறது.

4. நாம் விளைவிப்பதின் மொத்த அளவு சுமார் 65லக்ஷம் கட்டுகள் (bales of 400 lbs. each). அதில் ஏறக்குறையப் பாதி உள்நாட்டிற் செலவாகிறது; பாதி வெளிநாட்டிற்கு (முக்கியமாக ஜப்பான் தேசத்திற்கு) அனுப்பப்படுகிறது. 1929-ல் ஏற்றுமதியாக்கப்பட்ட பருத்தியின் மதிப்பு 65 கோடி ரூபாய்; ஆனால் விலைத்தாழ்ச்சியினால் அதன் மதிப்பு 1931-ல் $23\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குக் குறைந்துவிட்டது. 1932-ல் ஏற்றுமதியாக்கப்பட்ட பருத்தியின் அளவு நூற்றுக்கு 40 வீதங் குறைந்ததோடு விலைமதிப்பும் $20\frac{1}{3}$ கோடியாகக் குறைந்துவிட்டது. இந்தியாவின் மொத்தப் பருத்தி விளைவு அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இருந்தபோதி

லும், பருத்தி ஏற்றுமதியினால் ஏழைக்குடிகளுக்குச் சிறிது பொருள்வருவாய் இருந்தபோதிலும் நமது நாட்டில் பருத்தி விளைவு இன்னும் மத்திமமே. ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் பருத்தி எகிப்தில் (Egypt) 300 முதல் 400 பவுண்டு (lbs) நிறையும், அமெரிக்காவில் 200முதல் 300பவுண்டு நிறையும் ஆக இருக்கிறது; ஆனால் இந்தியாவிலோ அது 100 பவுண்டு நிறைதான். நல்ல வித்துக்களை உபயோகிப்பதனாலும், நிலங்களுக்கு மிகுதியாக எருவிடுவதனாலும், பருத்தி விளைவை நாம் இன்னும் அதிகப்படுத்தலாம். நமது தேசத்தின் ஆலை நெசவுத்தொழிலும் (weaving industry) விருத்தியாகுமேல் நாம் இப்பொழுது ஏற்றுமதி செய்கிற பருத்தியை நமது நாட்டிலேயே உபயோகிக்கலாம்.

## சணல்.

5. பருத்தி போன்ற வேறொரு பொருள் சணல். சணல்நூலைத் திரித்துக் கோணிகளும் பைகளும் கயிறுகளும் செய்யலாம். சணற்செடி கங்கை நதித்தீரங்களிலும், அஸாம் மாகாணத்திலும் அதிகமாகப் பயிராகிறது. மொத்த விளைவிற் பாதிப்பாகம் கல்கத்தாவில் நிறுவப்பட்டிருக்கும் சணல்நூற்றொழிற்சாலைகளில் உபயோகிக்கப்படுகிறது. அத்தொழிற்சாலைகளின் தொகை 97;

அவைகளில் வேலைசெய்யும் கூலிஜனங்கள் $3\frac{1}{2}$ லக்ஷம் பேர்; உற்பத்தி செய்யப்படும் சணல் நூலின் மதிப்பு 30 கோடி ரூபாய்; மேலும் 30 கோடிரூபாய் பெறுமான சணலும் **(raw jute)** சணல்நூலாற் செய்யப்பட்ட பொருள்களும் **(jute manufactures)** ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதியாக்கப்படுகின்றன. இந்தியாவைத் தவிர வேறெந்தத் தேசத்திலும் சணல் விளைவதில்லை; எனவே நமது வியவசாயிகளுக்கு (வங்காள, அஸாம் மாகாணத்தினருக்குமட்டும்) இது மிகவும் இலாபகரமான விளைபொருளாகும்.*

6. ஆனால் சணல்விளையும் இடங்களில் நளிர்சுரம் **(malaria)** பரவுகிறதென்றும், சணற்பயிரிடுவது நிலத்தின் உரத்தையும் வளத்தையும் கெடுக்கிறதென்றும், நெல் விளையும் இடத்தைக் குறைக்கிறதென்றும், இக்காரணங்களினால் சணல் விளைவிப்பது முடிவில் நஷ்டமே எனவுஞ் சிலர் கூறுவர். இது முழுவதும் உண்மையல்ல.

* 'உயர்ந்தவிலை விற்ற வருடத்திற் கிடைக்கும் சணல் விளைவின் வருமானத்தை வங்காள மாகாணவாசிகளுட் சிறுவர் முதற் பெரியோர் ஈறாக ஆண் பெண் இருபாலார்க்கும் தலைக்கு ரூ. 30 ஆகப் பகிர்ந்து கொடுக்கலாம்'. *Press Note of the Imperial Council of Agricultural Research.*

ஏனெனில் இப்பொழுதுள்ள நிலையில் நமது வேளாண்மையின் பெருங்குறை நமது நிலத்தின் மிச்சமான பாகத்தை உணவுப்பொருள்களை விளைவிக்க உபயோகப்படுத்துவதே; கைத்தொழில்களுக்காதாரமான பிற விளைபொருள்களை விளைவிப்பதே இலாபகரமாக இருக்கும். நெல் விளையும் இடத்தை இன்னுங்குறைத்து (ஆனால் விளைவை அதிகப்படுத்தி) அதில் வேறு விளைபொருள்களை விளைவிப்பதே உசிதமான கொள்கையாம். எனவே சணற் பயிரிடுவதனால் நமது தேசத்தினருக்கு நஷ்டமன்றென்று கொள்க.

7. ஆயினும் இப்பொழுது நிறுவப்பட்டுள்ள சணல்நூற்றொழிற்சாலைகளெல்லாம் ஆங்கிலேய முதலாளிகள் கையில் இருக்கின்றன; மூலதனமும் அவர்களுடையது; சணல், சணல்நூற் செய்பொருள்கள் ஆகிய இவற்றின் வர்த்தகத்தினாற் கிடைக்கும் இலாபத்திற் பெரும்பாகத்தையும் அவர்களே அடைகின்றனர். இவை வருந்தத்தக்க விஷயங்களாம். சணல்நூற்றொழிற்சாலைகளை இந்தியர் தம் அதீனத்திற்குக் கொண்டுவந்து அவற்றைத் திறமையுடன் நடத்தி, அவற்றால் வியவசாயிகளுக்கு உயர்ந்தவிலை கிடைக்கச் செய்வதே உயரிய கொள்கையாம்.

## எண்ணெய் வித்துக்கள்.

8. பருத்தியுஞ் சணலும்போல இலாபமான வேறு விளைபொருள்களில், எள், நிலக்கடலை, யாளி விதை, ஆமணக்கு விதை, முதலான எண்ணெய் வித்துக்கள் (oil seeds) மிக்வும் விசேஷமானவை. பெரும்பாலும் விளக்கெரிப்பதற்கும் கறி சமைப்பதற்கும், மருந்து, வாசனைத்திரவியங்கள் செய்வதற்குமே எண்ணெய் வித்துக்கள் நமது தேசத்தில் உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் மேனாட்டார் நமது எண்ணெய்வித்துக்களை வாங்கிப் பற்பலவிதமான கைத்தொழில்களில் உபயோகித்துவருகின்றனர். தேங்காய், நிலக்கடலை முதலானவற்றின் எண்ணெய் 'சோப்பு' (soap) செய்வதற்கும், ஆமணக்கெண்ணெய் ஆகாயவிமானம் முதலான இயந்திரவண்டிகளுக்குக் குழைவிடுவதற்கும் (lubricating) உபயோகப்படுகின்றன. இப்பொழுது 41 கோடி ரூபாய்* மதிப்புள்ள எண்ணெய்வித்துக்கள் நமது தேசத்திலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

9. மேற்காட்டிய எண்ணெய் வித்துக்கள் சாதாரணமான நிலங்களில் மிகச் செழிப்பச்

* *Press Note of the Imperial Council of Agricultural Research.*

செலவில் விளைவதனால் அவை விவசாயிகளுக்கு நல்ல இலாபத்தை அளிக்கின்றன. சென்னை மாகாணத்தில் நிலக்கடலையினால் இலாபம் அடைந்தவர் பலர். ஆனால் இவ்வித்துக்களை நமது நாட்டிலே உபயோகித்தாற்றான் நமக்கு இலாபம்; நிலத்தின் கொழுமையுங் குன்றாது. எண்ணெய் எடுக்கும்படியான ஆலைகளை நிறுவிப் பிண்ணாக்கை மாடுகளுக்கு ஊணாகவும், நிலங்களுக்கு எருவாகவும் ஆக்கி, எண்ணெயை 'சோப்பு' முதலிய வாசனைப் பொருள்களைச் செய்வதற்கு உபயோகிக்கவேண்டும். ஆலைத்தொழில்களினாற் பலருக்கு வேலையுமகப்படும். சென்னை மாகாணத்தில் தற்சமயம் சிறிதும் பெரிதுமான 13 எண்ணெய் ஆலைகள் (oil pressing factories) நிறுவப்பட்டுள்ளன. இவை இன்னும் விருத்தியடைவதற்கும் இடமுண்டு.

### தேயிலை, காப்பிக்கோட்டை, ரப்பர்.

9. நமது தேசத்தில் மலைப்பிரதேசங்களிற் பயிரிடப்படும் வேறுசில விளைபொருள்களும் உள்ளன. அஸாம், திருவாங்கூர், நீலகிரி, இலங்கை ஆகிய இந்நாடுகளிலுள்ள மலைகளில் தேயிலைச் செடி பயிரிடப்படுகிறது. நாம் உற்பத்தியாக்கும் தேயிலையிற் பாதிப்பாகம் அஸாம் மாகாணம் ஒன்றிலிருந்துமட்டுமே விளைவிக்கப்படுகிறது.

மொத்தவிளைவு 39 கோடி பவுண்டுநிறை. 1931-ல் ஏற்றுமதியான தேயிலையின் அளவு சுமார் 35 கோடி பவுண்டு நிறை; அதன் மதிப்பு 26 கோடி ரூபாய்.

10. தேயிலையை விளைவிப்பது இலாபமே; அதனை ஏற்றுமதி செய்வதால் நிலத்திற்கு யாதொரு நஷ்டமுமில்லை; விளைவிக்கப்படும் தேயிலையெல்லாம் உள்நாட்டிற் செலவிடவும் முடியாது. எனவே தேயிலையால் இந்தியாவுக்கு எவ்விதத்திலும் இலாபமே. ஆனால் தேயிலைத் தோட்டங்களிற் பெரும்பான்மையானவை ஆங்கிலேய முதலாளிகளுக்குச் சொந்தமானவை; அங்கு வேலைசெய்யும் கூலிஜனங்களும் (சுமார் 6 லக்ஷம்) சிப்பந்திகளுமே இந்தியர்.

11. மலைப்பிரதேசங்களிற் பயிராகும் வேறு விளைபொருள்கள், காப்பிக்கொட்டையும், ரப்பரும் (Rubber) ஆம். இவ்விரண்டிலும் நமது விளைவு மிகச் சொற்பம்; ஏற்றுமதியாக்கப்படும் காப்பிக் கொட்டையிலும் ரப்பரிலுமிருந்து வந்த வருமானம் இரண்டுகோடிரூபாய்தான்.

### தோல்.

12. நமது தேசத்திலிருந்து ஏற்றுமதியாக்கப்படும் வேறொரு பொருள் தோல். (hides and

skins) பதனிடப்படாத தோலாக ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்கும் பதனிடப்பட்டதாக இங்கிலாந்துக்கும் இப்பொழுது நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். 1931-ல் தோல் ஏற்றுமதியினால் இந்தியாவுக்குக் கிடைத்த வருமானம் $14\frac{1}{2}$ கோடி ரூபாய். பதனிடப்படாத தோலைப் பிறநாடுகளுக்கனுப்பிப் பின்னர் அந்நாடுகளிலிருந்தே அதைச் செய்பொருள்களாகத் திரும்பப்பெற்றுக் கொள்ளுகிறோம். இஃது வெண்ணெயை விற்றுவிட்டு நெய்யை விலைக்கு வாங்குவதுபோலாம். ஆனால் வெண்ணெயை உருக்கி நெய்யாக்கத்தெரியாதவர்கள் பின்னை என்னதான் செய்யக்கூடும்?

13. நாம் இதுகாறும் கூறிவந்ததிலிருந்து நமது பயிர்த்தொழிலைப் பிறதேசப் பயிர்த்தொழிலுடன் ஒப்பிடும்போது பயிரிடப்படும் நிலப்பரப்பிலும், விளைபொருள்களின் மொத்த அளவிலுமே நாம் உயர்ந்தவர்களாகத் தோற்றத்தாற் காணப்படுகின்றோமேயன்றி நன்கு ஆராயுமிடத்து மிகக் கேவலநிலையில் இருந்துவருகிறோம் என்ற உண்மை விளக்கமாகின்றது. பண்படும் நிலத்தில் நூற்றுக்கு 80 பாகத்தில் தேசமக்களுக்கு வேண்டும் அளவுக்கும் மிகக் குறைவாக உணவுப்பொருள்களைமட்டுமே விளைவிக்கும் நாம் வேளாண்மையிற் சிறந்தோராவது எங்ஙனம்? அன்றி ஏக்கர் வீதா

சார விளைவில் எவ்விளைபொருளில் பிறதேசங்களை விட அதிகவிளைவு காட்டுகிறோம்? மேலும் 1925-ல் நமது விளைபொருள்களின் ஏற்றுமதியால் சுமார் 150 கோடி ரூபாய் கிடைத்தது ; அவ்வருமானங் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, 1933-ல் ரூ $132\frac{1}{2}$ கோடியாக நிற்கிறது; இனியேனும் நம் விளைபொருள்களை மிகுதியான அளவிற் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யலாம் என்ற நம்பிக்கைக்கும் இடமில்லை. ஏனெனில் பிறநாட்டுப் பயிர்த்தொழிலில் யுத்தத்திற்குப்பின் மிக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. எனவே நம் விளைபொருள்களை மிகுந்த அளவில் இனி ஏற்றுமதி செய்யவும் இயலாது.* வியவசாயத்தில் முன் மணிமகுடமாய் விளங்கிய நமது தேசம் இப்பொழுது இக்கேவல நிலையை எய்தியிருப்பது மிகவும் இரங்கத்தக்கதன்றோ ?

---

* "The decine in the demand for our exports is due to causes of more or less a permanent nature" Prof. Brij Narain, *India Analysed*, Vol. ii.

# 5

## வியவசாயிகளின் வருமானம்.

## (Income of the Agriculturists.)

---

வீதாசார வருமானக் கணக்கு.

நம் தேசவாசிகளின் வீதாசார வருமானம் (per capita income) 1870-ல் தலைக்கு ரூ 20 ஆக இருந்ததென தாதாபாய் நவரோஜி என்ற ஒரு பார்சி மகான் முதன்முதற் கணக்கிட்டுக் கூறினர். 1882-ல் பொக்கிஷ மந்திரியாகவிருந்த ஸர் டேவிட் பார்பூர் (Sir David Barbour) என்ற ஆங்கில நிபுணர் அவ்வருஷத்தில் அவ்வருமானம் ரூ 27 ஆக உயர்ந்திருந்ததெனக் கூறினர். இதன்பின்னர் வைஸ்ராயாகவிருந்த கர்ஸான் பிரபு (Lord Curzon) இந்தியரின் வருமானத்தை மிகத்திட்டமாய் அறுதியிட விரும்பிக் கணக்கிட்டுப் பார்த்து, 1901-ல் அது தலைக்கு ரூ 30-க்கு அதிகமாக இருக்கவேண்டுமே யன்றிக் குறைந் திருக்காது எனக் கூறினர். 1921-ம் வருட ஜன சங்கியைக் கணக்கின்படி பம்பாய் மாகாணத்தில்

நகரவாசிகளின் வீதாசார வருமானம் தலைக்கு ரூ 100 ஆகவும், கிராம வாசிகளின் வீதாசார வருமானம் தலைக்கு ரூ 75 ஆகவும் இருக்கலாம் என ஆசிரியர் ஷிராஸ் (Mr. Findlay Shirras) கூறியுள்ளார். 1921-ல் இந்தியரின் வருமானம் உயர்ந்து காணப்படுவதன் காரணம் அவ்வருடத்தில் விளைபொருள்களின் விலையும் செய்பொருள்களின் விலையும் ஏற்றமாக இருந்ததேயாகும்.

### வருவாய் குறைந்திருப்பதன் காரணம்.

2. ஆயினும் இந்தியரின் வீதாசார வருமானம் மிகக் குறைவு என்பதும், பிறதேச மக்களின் வீதாசார வருமானத்துடன் ஒப்பிட்டுநோக்குமிடத்து மிகத் தாழ்வுடையதென்பதும், எவரும் மறுக்கக்கூடாத உண்மைகள். இவற்றின் காரணம் யாதெனின் நமது தேசவாசிகளில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் பயிர்த்தொழிலாளராயிருந்து வருவதுதான்.

3. பயிர்த்தொழிலின் வருமானம் இயல்பாய் எல்லாத் தேசங்களிலும் மிகக் குறைவே. அதற்கு முக்கிய காரணங்கள்:—(1) இயற்கைவளம் நிரம்பிய பூமி குறைவாயிருத்தலும், நிரம்பாத பூமி மிகுதியாயிருத்தலும், (2) வளங்குன்றியுள்ள நிலங்களுக்குப் போதிய நீர்ப்பாசன வசதியில்லாதிருத்

தலும், (3) மீண்டும் மீண்டும் எருவிட்டுக்கொண்டு வந்தாலன்றி, நிலங்களின் வளம் இயல்பாய்க் குன்றிக்கொண்டே போவதும் (the operation of the Law of Diminishing Returns), (4) நிலத்தைப் பயிரிடுவாரிற் பெரும்பாலாருக்கு நிலத்திற் சாசுவத உரிமையில்லாதிருத்தலும், (5) பயிர்த்தொழிலாளர் பொதுவாகத் திறமையும், ஊக்கமும் குன்றியவராயிருத்தலும்; (6) உழுதல், எருவிடுதல், விதைத்தல், நீர்பாய்ச்சல் போன்ற அவ்வக்காலத்திற் செய்யப்படவேண்டிய ஒவ்வொரு வேலைக்கும் வேண்டிய தொகையை அவர்கள் கைப்பணமாக உடையராயில்லாதிருத்தலும், அன்றி, மிகக் குறைந்த வட்டியிற் பிறரிடத்தில் அதைக்கடனாகப் பெற்றுக்கொள்ள இயலாதிருத்தலும் ஆம். மேலும் இங்குக் கூறிய காரணங்களையன்றி, மக்கள் முயற்சியால் மாற்றக்கூடாத சில எதிர்பாராத இயற்கை விளைவுகளால் (புயல், அதிகமழை, மழையின்மை, தீ, புழு, பக்ஷி, விலங்கினம், விலைக் குறைவு முதலியவை.) பயன் கைவரப்பெறாது பயிர்த்தொழிலாளர் சில சமயங்களிற் பெருநஷ்டமடைவதுமுண்டு.

4. நாம் மேற்காட்டியவற்றால் நமது தேசப் பயிர்த்தொழிலாளரின் வருவாய் எப்பொழுதும் மிகக் குறைவாயிருக்குமென்பது விளங்கும். இவ்

வுண்மையைப் பின்வரும் ஆராய்ச்சிக்குறிப்புக் களாலும் விளக்கலாம்.

சில ஆராய்ச்சி விவரங்கள்.

5. பம்பாய் மாகாணத்துப் பயிர்த்தொழில் இலாக்கா நிர்வாக அதிகாரியான (Director of Agriculture) ஹரால்ட் மேன் (Harold Mann) அம் மாகாணத்தில் 1910-ல் சில கிராம வாசிகளின் வருமானம் தலைக்கு ரூ 34 ஆகவும், வேறு சில கிராமவாசிகளின் வருமானம் தலைக்கு ரூ 34 ஆகவும் இருந்ததாகக் கணக்கிட்டுக்கூறியுள்ளார். சென்னை மாகாணத்தின் பொருள்நிலையைத் தமது மாணவர்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்த சர்வகலாசாலைப் பொருளாதார ஆசிரியர் டாக்டர் சிலேட்டர் (Dr. Slater) நம் மாகாணப் பயிர்த் தொழிலாளரின் வீதாசார வருமானம் (விலைவாசி கள் உயர்ந்திருந்த வருடமாகிய 1917-ல்) ரூ 70 ஆக இருந்ததெனக் கூறுகிறார். வங்காள மாகா ணத்துப் பரிதிப்பூர் (Fardipur) ஜில்லாக் கலெக் டர் ஜாக் (Mr. J. C. Jack, I. C. S.) என்பவரின் கணக்குப்படி அந்த ஜில்லாக் கிராமவாசிகளின் சராசரி வருமானம் தலைக்கு ரூ 50 தான். பஞ் சாப் மாகாணக் கிராமவாசிகளின் வாழ்க்கையை ஆராய்ச்சிசெய்த லாகூர்க் கலாசாலைத் தலைவர் டாக்டர் லூக்காஸ் (Principal Dr. Lucas)

அம்மாகாண மக்களிற் பெரும்பாலாருக்கு அவர்களின் வருவாய் அவர்களுக்கு வேண்டும் உணவு, ஆடை முதலான இன்றியமையாத வாழ்க்கைச் செலவுக்குக்கூடப் போதியதாயிராததால் அவர்களுக்கு வருடந்தோறும் தலைக்கு ரூ 2 நஷ்டமேற்படுகிறது எனக் கூறுகிறார்.

### வேறு ஆராய்ச்சி வேண்டாம்.

6. நமது தேச முழுவதற்கேனும், மாகாணவாரியாகவேனும், ஜில்லாவாரியாகவேனும், கிராமவாரியாகவேனும் எம்முறையிற் கணக்கிட்டாலும் நமது பயிர்த்தொழிலாளரின் வருவாய் மிகக் குறைவென்பது, வெள்ளிடை மலைபோல் விளக்கம். இனிப் பன்முறையும் பற்பல நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவைக்கொண்டு இந்தியரின் வருமானம் எவ்வளவென அறியவிரும்புவது வீண் முயற்சியாம். இவ்வளவு குறைந்த வருவாயுள்ளவர்களின் வாழ்க்கைநிலையை எவ்விதம் மேன்மையுறச் செய்வது ? இவர்களின் கல்வியறிவைப் பெருக்குவதெங்ஙனம்? சீர்குலைந்துபோன கிராம வாழ்க்கையை எங்ஙனம் திருத்தியமைப்பது? என்பனபோன்ற செய்கருமங்களையே அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும். அவற்றை நாம் எடுத்துக் காட்டுமுன் இனிவரும் கட்டுரைகளில் நமது பயிர்த்தொழிலாளரின் குறைபாடுகளுக்குரிய காரணங்களைத் தெளிவுற ஆராய்வாம்.

---

# 6

## நிலவரித் திட்டங்கள்.

## (Land Revenue Settlements.)

---

சுமார் முப்பதாண்டுகளுக்குமுன்னர் இந்திய ஸிவில் சர்விஸினின்றும் ஒழிவுபெற்றிருந்த ராமேச சந்திர தத்தர் (Romesh Chandra Dutt, I. C. S., Retired) என்னும் வங்காளத் தேசாபிமானியும் வேறு பலரும் நம் தேச வியவசாயிகளின் நிலவரி மிகப் பாரமானதென்றும், அதிற் பல குறைபாடுகள் உள்ளனவென்றும் எடுத்துக் காட்டி, அச்சமயம் ராஜப்பிரதிநிதியாகவிருந்த கர்ஸான் பிரபுவுக்கு ஓர் விஞ்ஞாபனத்தைச் (memorial) சமர்ப்பித்து, நிலவரியைக் குறைக்குமாறு வேண்டினர். கர்ஸான் பிரபு இவ்விஷயத்தை நன்காராய்ந்து, இந்திய வியவசாயிகளின் நிலவரி பாரமானதல்லதென நிரூபித்து, அத்துடன் நிலவரியைப்பற்றிய அரசாங்கத்தின் முடிவான தீர்மானம் (The Resolution of 1902) ஒன்றையும் வெளியிட்டார்.

## அதிகவரியின் அம்சங்கள்.

2. அதிகவரி (over-taxation) என்னும் சொற்றொடருக்கு இடத்திற்கேற்றவாறு பொருள் கொள்ளல் வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்துக்கு இந்திய வியவசாயிகள் நான்கு ரூபாயும், ஆங்கிலேய வியவசாயிகள் பன்னிரண்டு ரூபாயும், அமெரிக்க வியவசாயிகள் இருபத்துநான்கு ரூபாயும் வரியாகச் செலுத்திவந்தால் இந்தியாவின் நிலவரியைக்காட்டிலும் இங்கிலாந்தின் நிலவரி மும்மடங்கும், அமெரிக்காவின் நிலவரி அறுமடங்கும் பாரமானதென்று கொள்ளக்கூடாது. ஏக்கர் வீதாசார விளைவு இந்தியாவைக்காட்டிலும் இங்கிலாந்தில் மும்மடங்காகவும், அமெரிக்காவில் அறுமடங்காகவும் இருக்குமாயின் இம்மூன்று தேசங்களிலுமுள்ள வரிப்பாரம் (burden of taxation) சமமேயாம். மேலும் ஒரு தேச வியவசாயிகளின் விளைபொருள்களின் விலை இருமடங்காகக் குறைந்துவிட்டால் அவர்களுடைய வரிப்பாரம் இருமடங்காக உயரும். எனவே வியவசாயிகளின் நிலவரிப் பாரத்தைக் கணக்கிடுங்கால் ஒருதேசத்தின் ஏக்கர் வீதாசார விளைவையும், விலைநிலையையும் இன்னும் இவைபோன்ற பிற காரணங்களையும், உதாரணமாக நிலவரித் திட்டங்களையும், ஆராய்ந்துகொள்ளவேண்டும்.

## ஜமீந்தாரி நிலவரித் திட்டம்

3. நமது தேசத்தின் ஐந்திலொரு பாகத்தில் (வங்காளத்திலும் சென்னை மாகாணத்தின் சிற்சில பாகங்களிலும் வேறு சில மாகாணங்களிலும்) ஏற்படுத்தப்பட்டுள்ள நிலவரித்திட்டம் ஜமீந்தாரி நிலவரித்திட்டம் (Zamindari Settlement) எனப்படும். ஏனெனில் இத்திட்டத்துக்குட்பட்ட நிலங்களின் உரிமை ஜமீந்தார்களைச் சார்ந்தது. தம் அதீனத்திற்குட்பட்ட இந் நிலங்களை ஜமீந்தார்கள் பயிரிடுங் குடியானவர்களுக்கு ஒப்படைத்துவிட்டு அக்குடிகளிடமிருந்து வாரம் அல்லது வரியைப் பெற்றுவருகின்றனர். இவ்வரிவிகிதத்தைத் திட்டஞ்செய்து கொள்ளவும் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அதை ஒரு ரூபாய்க்கு இரண்டணு வீதம் உயர்த்திக்கொள்ளவும் ஜமீந்தார்களுக்கு அதிகாரம் உண்டு. பயிரிடுங் குடியானவர்களிடமிருந்து தாம் பெறும்வரியின் ஒரு சிறு பாகத்தையே ஜமீந்தார்கள் அரசாங்கத்துக்கு இறையாகச் செலுத்தி வருகின்றனர். இவ்விறைப்பணம் 1792-ம் வருடத்தில் கார்ன்வாலிஸ் பிரபுவால் (Lord Cornwallis) எந்த அளவில் நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அந்த அளவிலேயே இன்றைக்கும் இருந்து வருகிறது. ஏனெனில் ஜமீந்தார்கள் அரசாங்

கத்துக்குச் செலுத்தவேண்டிய இறையை கார்ன் வாலிஸ் பிரபு சாஸ்வதமாக (permanent revenue settlement) நிர்ணயித்துவிட்டார். *

## குடியானவன் நிலவரித்திட்டம்.

4. பம்பாய் மாகாணத்திலும் சென்னை மாகாணத்திற் பெருபான்மையான பாகத்திலும் சிந்து, பர்மா, அஸாம் மாகாணங்களிலுமாக இந்தியாவில் மொத்தத்தில் பாதிக்குமேற்பட்ட பாகத்தில் நிறுவப்பட்டுள்ள நிலவரித்திட்டமோ குடியானவன் நிலவரித்திட்டம் (Ryotwari Settlement) எனப்படும். இத்திட்டம் வழங்குமிடங்களில் நிலத்தைப் பயிரிடுங் குடியானவனுக்கே நிலவுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நிலங்களுக்குரியவரியையும் அரசாங்கத்தாரே அவனிடமிருந்து நேரே பெற்

* இயற்கை வளத்திலும் ஜனசமூக வளர்ச்சியிலும் முயற்சியின்றிப் பெறும் இவ்வாரத்தைக்கொண்டு ஜமீந்தார்கள் பொதுஜன நன்மைக்காக ஏரி குளங்களை வெட்டி, நீர்வளத்தைப் பெருக்கியும், கலாசாலைகளை நிறுவி அறிவைப் பரப்பியும் வருவார்களாயின் அவர்களால் நாட்டுக்கு நலனுண்டு. இவ்வாறு செய்து தம் புகழை நிலைநாட்டிய ஜமீந்தார்கள் சிலர் உளர். வேறு பெரும்பகுதியினர் குடிகளிடமிருந்து அதிக வரியைப் பெற்று அப்பொருளை நகர வாசத்திலும், குதிரைப் பந்தயங்களிலும், அயல்நாடு காணச்செல்வதிலும், சட்டசபைத் தேர்தலிலும் விரயமாக்கிவருகின்றனர். புல்லுருவிகள்போன்ற இம்மக்கள் இருப்பதால் யாது பயன்?

றுக்கொள்ளுகின்றனர். அவ்வரி விகிதமானது அந்நிலங்களின் விலை, விளைவு முதலிய காரணங்களின் ஏற்றத்தாழ்வுக்கேற்பப் பத்துமுதல் முப்பது வருடங்களுக்கு ஒருமுறை கூட்ட அல்லது குறைக்கப்படுகிறது. விளைவு குன்றித் தீவு ஏற்படும் வருடங்களில் வரிக்கழிவும் (kist remission) அளிக்கப்படுகிறது.

### கிராம நிலவரித் திட்டம்.

5. பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் (U. P.) 1883-ம் வருடத்தில் பென்றிக் (William Bentick) பிரபுவினால் ஏற்படுத்தப்பட்ட நிலவரித்திட்டமோ நாம் முற்கூறிய இரண்டுக்கும் மாறானது. இத்திட்டத்தின்படி ஒரு கிராமத்திலுள்ள நிலங்களுக்குரிய மொத்தத் தீர்வையையுஞ் செலுத்துவது அக்கிராமத்தார் அனைவருடைய கடமையாம். அவருள் எவனொருவன் தனக்குச் சொந்தமான தன் நிலத்திற்குரிய பாகமாகிய வரியைச் செலுத்தத் தவறினும் அவ்வரியை அக்கிராமக்குடிகளுள் வேறெவனிடமிருந்தாவது மற்றெல்லோரிடமிருந்தாவது வசூலித்துக்கொள்ளும் உரிமை அரசாங்கத்துக்கு உண்டு. இதைக் கிராம நிலவரித்திட்டம் (Village Settlement) என வழங்குவர். கிராம ஒற்றுமையை வளர்ப்பதற்கு இத்திட்டம் ஒருவாறு அநுகூலமாயிருக்கிற

தென்று சொல்லலாம். வேறெந்த மாகாணத்தை யும்விடப் பஞ்சாபில் கூட்டுறவு இயக்கமானது Co-operative Movement) தலைசிறந்து விளங்கு வதற்கு இந்நிலவரித்திட்டமும் ஒருகாரணமாயிருக் கலாம். ஆயினும் இத்திட்டம் வழங்கப்படும் இடங் களிலும் முப்பது வருடத்திற் கொருமுறை அர சாங்கத்தார் மறுபடியும் நிலங்களை அளந்து அவற் றின் வரியை உயர்த்தி வருகின்றார்களாகையால் குடிகளுக்குச் சிரமமும் வரிப்பாரமும் அதிகரித்து வருகின்றன எனச் சிலர் கூறுவர்.

## நிலவரிப் பாரம்.

6. சென்னை மாகாணத்தின் நிலவரியே பிற மாகாணங்களின் நிலவரியைக் காட்டிலும் மிகப் பாரமானதாயிருப்பினும் அவ்வரி அம் மாகாணக்குடிகளின் மொத்த நிலவருமானத்தில் நூற்றுக்கு நான்குவிகிதந்தான் (4%) எனச் சென்னைச் சருவகலாசாலைப் பொருளாதார ஆசிரியராகவிருந்த டாக்டர் சிலேட்டர் 1923-ல் கிழக்கிந்திய சங்கத்தினர் (East India Association) முன்பு நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிற் கூறியுள் ளார். ஒரு மாகாணத்தின் மொத்த நிலவருமா னத்துக்கும் மொத்த வரிக்கும் உள்ள சம்பந்தத் தை மாத்திரம் கணக்கிட்டு வரிப்பாரத்தை நிர்ண யிப்பது மிகச் சிறந்த முறையல்ல. மேலும் விளை

பொருள்களின் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு வரிச்சுமையைக் குறைவாக அல்லது உயர்வாகக் காட்டுமாதலால் சிலேட்டரின் ஆராய்ச்சியை முடிந்த முடிவாகக் கொள்ளல்கூடாது.

7. 1927-ல் பஞ்சாப் மாகாண நிலவரிப் பாரத்தை ஆராய்ச்சிசெய்த டார்லிங் என்பார் அம்மாகாணக் குடிகளின் நிகர நிலவருமானத்தில்(net agricultural income)ஐந்திலொருபங்கையே அரசாங்கத்தார் நிலவரியாகப் பெறுகின்றனர் எனக் கணக்கிட்டுள்ளார். இவ்வாறு கணக்கிடுவது சிலேட்டரின் முறையைக்காட்டிலும் சீரியதே. ஆயினும் விளைபொருள்களின் விலைக்கும் வரிப்பாரத்துக்கும் உள்ள தொடர்பும் இக்கணக்கில் விளக்கப்படவில்லை.

8. 1928-ல் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட வரி விசாரணைச் சபையார் (Indian Taxation Enquiry Committee) வேறொருமுறையால் வரிப்பாரத்தைக் கணக்கிட்டிருக்கின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் குடியானவர்கள் நில முதலாளிகளுக்குச் செலுத்தும் வாரத்துக்கும் (rent) அதே அளவுள்ள நிலங்களுக்கு அரசாங்கத்தார் குடிகளிடமிருந்து பெறும் நிலவரிக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவெனக் கணக்கிட்டு மாகாணவாரியாக நிலவரிப்பாரம் பின்வருமாறு

இருக்கலாம் எனத் தம் அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

| மாகாணம் | வரிப்பாரம் |
|---|---|
| வங்காளம் | 21 |
| பஞ்சாப் | 25 |
| பம்பாய் | 17முதல் 50வரை |
| சென்னை | 10முதல் 29வரை |

9. மேலும் 1904-க்கும் 1924-க்கும் இடையில் விலைநிலை நூற்றுக்கு 117 விகிதம் உயர்ந்திருக்க நிலவரியோ நூற்றுக்கு 20 விகிதமாகவே உயர்த்தப்பட்டிருக்கிறது எனவும் அவ்வறிக்கையிற் குறிக்கப்பட்டுள்ளது. இம்முடிவுகளை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். எனினும் நிலவரிப் பாரத்தைப் புள்ளிக்கணக்கு முறையில் (statistically) மிகத் திட்டமாகக் கணக்கிடல் அரிது.

10. பொதுவாகக் கூறினல், கடந்த அறுபதாண்டுகளுக்கிடையினும் பொருள்களின் விலையில் ஏற்பட்ட உயர்வினலும் பிற காரணங்களினலும் வரிச் சுமை சிறிதுசிறிதாகக் குறைந்து வந்துள்ளது. ஆனல் 1929-க்குப்பின் ஏற்பட்ட விலைத்தாழ்ச்சியினல் அது அதிகமாக உயர்ந்துவிட்டது என்பதற்கு ஐயமில்லை. ஆதலின் நில

வரித்திட்டங்களிற் பின்வருமாறு பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுவது அவசியமாம்.

### ஜமீந்தாரி நிலவரிச் சீர்திருத்தம்.

11. ஜமீந்தாரி நிலவரித்திட்டத்திலுள்ள குறைகளைக் களைவதற்குப் பற்பல உபாயங்கள் கூறப்படுகின்றன. அரசாங்கத்தாரே ஜமீந்தார்களுடைய நிலங்களை விலைக்கு வாங்கி அவற்றைப் பயிரிடுங் குடியானவர்களுக்கு விற்கவேண்டுமென்பர் ஒரு சிலர். வேறு சிலர் அரசாங்கத்தார் ஜமீந்தார்களிடமிருந்து ஒரு புதிய நில வருமான வரியை (Agricultural Income Tax) வாங்கவேண்டுமென்பர். எவ்வாற்றாலும், வியவசாயிகளின் நிலையைச் சீர்திருத்தவேண்டுமாயின் ஜமீந்தாரி நிலவரித்திட்டத்திலுள்ள குறைகளை இனிவரும் அரசாங்கமேனும் நீக்க முயலவேண்டும்.

### பிற நிலவரிச் சீர்திருத்தங்கள்.

12. குடியானவன் நிலவரித்திட்டமும் கிராம நிலவரித்திட்டமும் வழங்கப்படும் இடங்களில் பத்துமுதல் முப்பதுவருடத்துக்கொருமுறை நிலங்களை அளந்து புதிதாக வரி விகிதத்தைத் திட்டஞ்செய்யும் முறையை (resettlement) நீக்கிவிடவேண்டும் என்றும், ஒருமுறை திட்டஞ்செய்த விகிதத்தை

ஆதாரமாக வைத்துக்கொண்டு விலை நிலையின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப வீதாசாரப்படி வரியைக் கூட்டியும் குறைத்தும் வரவேண்டுமென்றும், மாகாண அரசாங்கத்தார் இப்பொழுது பெறும் நிலவரியிற் கால் பாகத்தைக் கிராம முன்னேற்றத்திற்காக உழைத்துவரும் ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களுக்கு (Local Self-government) அளித்துவிடவேண்டுமென்றும், இவ்விதிகள் அடங்கிய புதிய நிலவரிச் சட்டத்தை ஒவ்வொரு மாகாணத்திலும் இயற்றிவைக்கவேண்டும் என்றும் இந்திய வரி விசாரணைச் சபையார் 1928-ம் வருடத்திலேயே ஆலோசனை கூறினர். இன்னும் இம்முடிவுகளை அரசாங்கத்தார் கவனிக்கவில்லை; இனியேனும் அரசாங்கத்தார் இவற்றை விரைவில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவார்களாயின் நமது நிலவரித்திட்டங்களிலுள்ள குறைகள் நீங்கும்.

# 7

## புலங்களின் அமைப்பும் அளவும்—1.

## (The Form and Size of Holdings.)

நமது தேசத்தில் உள்ள மூன்றுவித நில வரித்திட்டங்களிலும் வரிச்சுமை அதிகமில்லை யென்றும் பயிரிடுங் குடியானவனுக்கு நிலவுரிமை அளிக்கப்பட்டிருக்கிறதென்றும் முந்தின கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. இது மிகவும் திருப்தியே. ஆயினும், ஒரு குடியானவன் தான் பயிரிடும் நிலத்தினின்று தன்னுடைய குடும்ப வாழ்க்கைக்குரிய வருவாயேனும் கிடைக்கப்பெருமயின் அந்நிலவுரிமையால் அவன் பெறும் பயன் யாது? அன்றியும், குடிசைக் கைத்தொழில்கள் (cottage industries) சிதைவுற்றும் அழிந்தும்போய் விட்ட இக்காலத்தில் ஒரு குடியானவனுடைய ஆட்களுக்கும் எருதுகளுக்கும் அவனது நிலத்திற் போதுமான வேலையிராவிட்டால் அந்நிலத்திலிருந்து அவன் என்ன ஊதியம் அடையக்கூடும்? ஆதலால் ஜமீந்தாரிக் குடியானவனுக்கும் மிராசுக் குடியானவனுக்கும் (peasant proprietor)

நிலவுரிமையிருப்பதுடன் அவன் பயிரிடும் நிலமும் போதிய அளவில் அமைந்திருக்கவேண்டுமெனப் பெறப்படும். நம்தேசப் பயிர்த்தொழிலாளிகளின் நிலத்தின் அளவு எந்நிலையில் உள்ளது ?

### சில கணக்கு விவரங்கள்.

2. பம்பாய் மாகாணத்தில் ஒரு கிராமத்தி லுள்ள வியவசாயிகளுடைய புலங்களின் (holdings) வீதாசார அளவு 1771-ம் வருஷத்தில் ஒருவனுக்கு 40 ஏக்கராக இருந்தது. அவ்வீதாசார அளவு 1818-ம் வருஷத்தில் $17\frac{1}{2}$ ஏக்கராகவும், 1840-ம் வருஷத்தில் 17 ஏக்கராகவும், 1915-ம் வருஷத் திலோ 7 ஏக்கராகவுங் குறைந்து வந்திருப்பதாக ஹாரல்ட் மேன் வெளியிட்டிருக்கிறூர். மேலும் 1915-ம் வருடத்தில் அந்தக் கிராமத்தில் நூற் றுக்கு அறுபது வியவசாயிகளுக்கு ஐந்து ஏக்க ருக்குக் குறைந்த புலங்களே யிருந்தனவாம்.* நமது தேசத்திற் பெரும்பான்மையான பாகங் களில் இந்த அளவுக்குக் குறைந்த புலங்களே யன்றி மிக்கவை காணக்கிடையா. பஞ்சாப் மாகா ணத்தில் நூற்றுக்குப் பதினெட்டு வீதம் உள்ள

---

* பம்பாய் மாகாணத்தில் 5 ஏக்கர் அளவுள்ள புலங்கள் பயனற்ற சிறுபுலங்களாம். " Inthe Deccan a 5 acreholding is not economic " (Anstey, *The Economic Development of India*, P. 100).

வியவசாயிகளுடைய புலங்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்தவை. *மலையாளம் ஜில்லாவில் (Malabar District) உள்ள ஒரு கிராமத்தில் நூற்றுக்கு முப்பத்து நான்கு பேருடைய புலங்கள் ஒரு ஏக்கருக்குங் குறைந்தவை! இவ்வளவு குறைந்த அளவுள்ள புலங்களிலிருந்து ஒருவன் தன் குடும்ப வாழ்க்கைக்கு வேண்டும் வருவாயை அடைவது எங்ஙனம்?

### புலங்கள் சிதறிக்கிடத்தல்.

3. அரை வயிறுண்டு பயிர்த்தொழிலைச் செய்துவரும் நம் தேசமக்களின் புலங்கள் மிகச் சிறியனவாயிருப்பதோடு, அவை ஒரேயிடத்தில் ஒரே தொகுதியாயிராதனவாய்ப் பலவிடங்களிற் சிதறியும் (scattered) கிடக்கின்றன. எனவே ஒவ்வோரிடத்திலுமுள்ள புலங்கள் மிகச் சிறிய துண்டு துணுக்குகளாக (fragments) ஆகிவிடுகின்றன. பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஒரு கிராமக் குடியானவனுடைய ஒரு சிறுபுலம் அந்தக் கிராமத்தின் நாலுதிசைகளிலும் இருநூறுபாகங்களாகச் சிதறிக்கிடக்கிறதாம். எல்லோருடைய அநுபவத்திலும் காணக்கிடக்கும் இவ்வுண்மையை விளக்க வேறு பல உதாரணங்கள் வேண்டா.

---

* S. Subbarama Iyer, ***The Economics of a Malabar Village.***

## சிறுபுலங்களாய்ச் சிதறிக்கிடத்தலாலுண்டாங் கேடுகள்.

4. புலங்கள் சிறியனவாயிருத்தலில் சில அநுகூலங்கள் உண்டு *; ஆயினும் அவை மிகச் சிறியனவாகப் போய்விடின் ஊதியமளிக்கா. இவற்றை இலாபமற்ற புலங்கள் (uneconomic holdings) என்னலாம். ஏனெனில் இத்தகைய புலங்களில் ஏதேனும் ஒருபயிரை மிகுந்த அளவில் விளைவித்துப் பெருத்தலாபத்தைப் பெறமுடியாது. மேலும் சுருக்கமான செலவில் நீரிறைக்கவும், ஏர் உழவும், போரடிக்கவும் மேனாட்டார் உபயோகித்துவரும் இயந்திரக் கருவிகளைக் கையாளவும் இயலாது. ஆதலால் மிகச்சிறிய புலங்கள் பெரும்பாலும் இலாபந்தரத்தக்கனவல்ல.

5. மேலும் இச்சிறு புலங்களும் பலவிடங்களிற் சிதறிக்கிடத்தலால் பயிர்த்தொழிலாளரால் இலாபகரமான எவ்வித வேளாண்மையுஞ் செய்யவியலாதென்பது திண்ணம். இக்காரணத்தாற்றான் நமது வியவசாயிகள் வயிற்றுணவுக்கு மட்டுமே உழைத்துவரும் வறியராயிருக்கின்றனர்

---

* பூ, காய், பழம், முதலியன விளைவிக்கும் நிலங்களிலுள்ள வேலை மிகத்திறமை வாய்ந்தவர்களாலேயே அதிசாக்கிரதையுடன் செய்யப்படவேண்டுமாதலால் சிறிய புலங்களே இவ் வேளாண்மைக்கேற்றவை.

என ஓர் ஆசிரியர் கூறுகிறார்.* மேலும் வியவசாயிகளின் புலங்கள் பலவிடங்களிலும் சிதறிக் கிடத்தலால் புலத்திற்குப் புலம் ஆடுமாடுகளை ஓட்டிச் செல்வதிலும், கலப்பையைத் தூக்கிச் செல்வதிலும் பல மணி நேரங்கள் வீணாய்க் கழிகின்றன. துண்டுதுணுக்கான ஒவ்வொரு புலத்துக்கும் வரப்புக்கள் அமைப்பதனாலும், வேலிகள் போடுவதனாலும் பயிரிடக்கூடிய நிலத்தின் அளவும் குறைகிறது. அன்றியும், இப்புலங்களின் எல்லையையும் வரப்புக்களையும்பற்றி அடிக்கடி கிராமவாசிகளுக்குட் சண்டையேற்பட்டு நீதிஸ்தலங்களிற் பொருளும் விரயமாக்கப்படுகிறது. இங்ஙனமாக ஆராயுங்கால் புலங்கள் இலாபமற்றவையாக விருப்பதும் துண்டு துணுக்குகளாகச் சிதறிக்கிடப்பதுமே நமது தேசவியவசாயத் துறையிற் பெருங்குறையென விளங்கும். இதற்குக் காரணங்கள் யாவை?

### சிறிய புலங்களாவதற்கும் அவை சிதறிக்கிடத்தலுக்கும் காரணங்கள்.

6. மக்கட்பெருக்கால் நம் தேசத்திற் பயிரிடும் நிலத்தின் வீதாசார அளவு குறைகின்றது.

---

* The result is that a large part of the land in India is cultivated by poverty-stricken peasants living on the margin of subsistence' (Anstey, *The Economic Development of India* P. 101).

ஆயினும் அப்புலங்கள் மிகச்சிறியனவாக அமைவதற்குக் காரணம் நிலத்தை எல்லா ஆண்மக்களுக்கும் சமமாகப் பங்கிடும் முறையேயாம். முகமதியர்களுக்குள் பெண்களுக்கும் மூன்றிலொரு பாக நிலம் பங்காகக் கொடுக்கப்படுகிறது. பர்மாவில் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் சமபாகங் கொடுக்கப்படுகிறது. பத்து ஏக்கர் நிலமுள்ள வியவசாயி ஒருவனுக்குப் பத்து ஆண்மக்கள் இருந்து அவர்கள் ஒவ்வொருவனுக்கும் ஐந்தைந்து ஆண்மக்கள் இருந்தால் இரண்டாந் தலைமுறையில் அவர்கள் ஒவ்வொருவனுடைய புலத்தின் அளவும் $\frac{1}{50}$ ஏக்கராகப் போய்விடுமன்றோ? நிலத்தைப் பரம்பரையாய் அநுபவிக்கும் சட்டங்கள் (laws of inheritance) இவ்வாறாயின் புலங்கள் நாளுக்கு நாள் மிகச்சிறியனவாகவும் பயனற்றவைகளாகவும் மாறுவதில் என்ன விந்தை?

7. புலங்கள் சிறியனவா யிருத்தலினும், அவை துண்டுதுணுக்குகளாகச் சிதறிக்கிடத்தலே பெருங்குறையென நாம் முன் விளக்கியுள்ளோம். இதற்குக் காரணம் என்னையெனின் நிலத்தைப் பங்கிடும் ஒவ்வொருவரும் தங்கள் பிதாக்களின் புலங்கள் ஒவ்வொன்றிலும் ஒருசிறு பங்கை எடுத்துக்கொள்ளலாம். நான்கு தொகுதிகளாய

20 ஏக்கர் நிலம் ஒன்றை ஒரு பிதாவின் நான்கு மக்கள் பாகஞ்செய்துகொள்ளும்போது ஒவ்வொருவனும் ஆளுக்கொரு தொகுதியை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒவ்வொருவனுடைய ஐந்தேக்கர் புலமும் சிறிதாக அமையுமே யன்றிச் சிதறிச் சிதைவுறாது. ஆனால் அவர்கள் ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு பாகம் வேண்டுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டால்* அவர்கள் ஒவ்வொருவனுடைய ஐந்தேக்கர் புலமும் ஒரே தொகுதியாய் அமையாது வெவ்வேறான நான்கிடங்களிற் சிதறிப்போமன்றோ? பயிர்த்தொழிலாளரின்தொகை மிக்கிருத்தல், பரம்பரை அநுபவச்சட்டம், புலங்களை மேலும் மேலும் பகுத்தல் (subdivision of holdings) ஆகிய இம் மூன்று முக்கிய காரணங்களினாலும் புலங்கள் இலாபமற்றவைகளாக அமைகின்றன.

---

* இம்முறையினால் எல்லாச் சகோதரர்களுக்கும் வளம் நிரம்பிய நிலங்களிலும் வளம் குன்றிய நிலங்களிலும் சமபாகங் கிடைப்பதனால் சில அநுகூலங்கள் விளையுமென்பது உண்மை. ஆயினும் மிகச் சிறிய புலங்களாயுள்ள நிலங்களுக்கு இந்நியாயம் முற்றும் பொருந்தாது.

# 8

## புலங்களின் அமைப்பும் அளவும்—II.

## (The Form and Size of Holdings.)

துண்டுதுணுக்குகளாகச் சிதறிக்கிடக்கும் ஊதியமற்ற சிறு புலங்களைத் தொகுத்து அவற்றைப் பெரிய புலங்களாக அமைத்தாலன்றி நம் பயிர்த்தொழில் முன்னேற்றமடையாது. இவ்வுண்மையை நம் தேசமக்களுக்குப் பன்முறையும் வலியுறுத்தல் அவசியம். ஆதலாற் சிறு புலங்களைத் தொகுக்கும் முறைகளைக் (consolidation of holdings) கீழே விவரிப்பாம்.

கூட்டுறவு முறையிற் புலங்களைத் தொகுத்தல்.

2. சிதறிக்கிடக்கும் சிறுபுலங்களை ஒருவருக்கொருவர் ஒத்தமனத்தினராய்ப் பரிவர்த்தனை செய்துகொண்டால் (mutual exchange) அவற்றைப் பெரிய புலங்களாகத் திருத்தி அமைத்துவிடலாம். வியவசாயிகளே இவ்வுண்மையை அறிந்து புலங்களைத் தொகுத்துத் திருத்தியமைக்கும் ஆற்றல் அற்றனராய் இருப்பதனல் இப்பணியைச் செய்

யத்தக்க தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை (Co-operative Consolidation Societies) நிறுவலாம். பஞ்சாப் மாகாணத்தில் 1923-ல் 154 கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வேலையை ஆரம்பித்தன. 1927-ல் அவை 314 கிராமங்களில் பல இடங்களில் சிதறிக்கிடந்த 98,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள புலங்களை ஒருங்கு சேர்த்திருக்கின்றன. இதனால் 70 செண்டுகள் வீதமே தனித்தனியாய்ச் சிதறிக் கிடந்த ஊதியமற்ற சிறு புலங்கள் 3 ஏக்கர் 8 செண்டுகளடங்கிய ஒரே தொகுதிப் புலங்களாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

3. இவ்வாறு கூட்டுறவு முறையிற் குடிகளே தாமாய்ச் செய்துகொள்ளும் வேலை மிகவும் மெச்சத்தக்கதே. ஆயினும் பஞ்சாபைத் தவிர வேறெந்த மாகாணங்களிலும் இம்முன்றயைக் கைக்கொள்வாரில்லை; இம்முறை வெற்றியளிக்காது என்ற ஐயமே காரணம் போலும். மேலும் நாடெங்கும் பெருமிதமாகப் பரவியிருக்கும் இக்குறையை ஒழிக்கக் கூட்டுறவு முறை விரைவிற் பயன்தரத்தக்கது மன்று.

### சட்டமியற்றிப் புலங்களைத் தொகுத்தல்.

4. ஆதலால் ஒவ்வொரு மாகாணத்திலும் தகுந்த சட்டங்களை யியற்றிக் கட்டாயமாகப்

புலங்களை ஒன்றுகூட்டல் அவசியமெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பம்பாய் மாகாணச் சட்ட சபையில் 1916-ல் இதற்கென்று மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை! இச்சட்டம் பரம்பரையாக நிலங்களை அநுபவிப்பதற்குரிய சட்டத்திற்கு மாறானதாகையால் சட்டசபை அங்கத்தினர் அதை நிறைவேற்றிவைக்க மறுத்துவிட்டனராம்!

5. ஆனால் மத்திய மாகாணத்தில் (Ctrenal Provinces) 'புலங்களை ஒன்றுகூட்டும் சட்டம்' (Consolidation of Holdings Act) ஒன்று 1928-ல் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி எந்தக் கிராமத்திலேனும் மூன்றில் இரண்டுபங்கு வியவசாயிகள் நிலங்களை ஒன்றுகூட்ட இசைந்து அரசாங்கத்தாருக்கு விண்ணப்பஞ் செய்வார்களாயின் அந்தக் கிராமத்திலுள்ள ஏனையவர்களும் அத்திட்டத்தை ஒப்புக்கொள்ளக் கட்டுப்பட்டவர்களாவர். பின்னர் இவ்வேலைக்கென்று நியமிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அந்தக் கிராமத்திற்குச் சென்று ஒன்றுகூட்ட வேண்டும் புலங்களைத் தனித்தனியே மதிப்பிட்டு, அவை ஒவ்வொன்றின் மதிப்புப்படி அவற்றைப் பரிவர்த்தனைசெய்துகொடுத்து, ஒவ்வொருவருக்கும் ஒரே தொகுதிப் புலங்களை அமைத்துக்கொடுப்பார்கள்,

பரிவர்த்தனைசெய்ய " விருப்பமில்லாதார் தங்கள் புலங்களை விற்றுக்கொள்ளலாம். இம்முறையினால் ஒரு கிராமத்திலுள்ள எல்லாப் புலங்களும் ஒரே தொகுதிப் புலங்களாக விரைவில் அமைக்கப்பட்டு விடுவதைக் காண்க.*

6. ஆயினும் கூட்டுறவுமுறையினாலும் கட்டாயமான சட்ட முறையினாலும் புலங்களை ஒன்றுகூட்டி அமைத்துவிடுவதனால்மட்டும் நமது குறை நீங்கிவிடாது; ஏனெனில் ஆண்மக்களுக்கெல்லாம் சமபாகம் அளிக்கும் சட்டம் இருக்கும்வரை நாளுக்குநாள் புலங்கள் சிறியனவாகியும் ஒன்றுகூட்டப்பட்ட புலங்கள் மீண்டும் மீண்டும் சிதைந்து துண்டுதுணுக்குகளாகியும் போய்விடும். இவ்வாறுவதைத் தடுக்காவிடில் பயனற்ற சிறு புலங்

---

* இங்கிலாந்து தேசத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம்வரை ஒரு கிராமக் குடியானவனது புலங்களின் வீதாசார அளவு தலைக்கு 20 ஏக்கருக்குக் குறையாமலிருந்த போதிலும் அப்புலங்கள் அந்தக் கிராமத்தின் நாலுவிடங்களிலும் அரை ஏக்கர் ஒரு ஏக்கர் அளவில் சிறுசிறு பகுதிகளாகச் சிதறியே கிடந்தன. இப்பெருங்குறை சட்டத்தாலேதான் நீக்கப்பெற்றது. இச்சட்டத்தை யொட்டியே ஐக்கிய மாகாண அரசாங்கத்தாரும் தங்கள் சட்டத்தை அமைத்திருக்கிறார்கள். எனவே இங்கிலாந்திற் பயன்பெற்ற இச்சட்டத்தைத் தழுவி எல்லா மாகாணங்களிலும் சட்டமியற்றிப் புலங்களை ஒருங்கு கூட்டலாம்.

களை ஒன்றுகூட்டி ஒரே தொகுதிப் புலங்களாகத் திருத்தியமைப்பதில் யாது பயன்?

### தொகுத்த புலங்களை நிலைபெறச்செய்தல்.

7. ஆதலால் தொகுக்கப்பெற்ற புலங்கள் மீண்டுஞ் சிதைவுறுவண்ணம் நாம் சில முறைகளைக் கையாளல்வேண்டும். பம்பாய் மாகாணத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அதிகாரியான கீடிஞ்ச் என்பவர் இதற்குக் கூறும் உபாயமாவது இப்பொழுது பயனற்றவையாய்ச் சிதறிக் கிடக்கும் சிறு புலங்களை ஒவ்வோரிடத்திலும் அதன் இயற்கையமைப்புக்கும் செயற்கையமைப்புக்குந் தக்கவாறு பயிர்த்தொழிலை இலாபகரமாக நடத்துவதற்குப் போதிய அளவுள்ள புலங்களாகத் * (economic holdings) தொகுத்தபின்னர் அவ்வாறு தொகுக்கப்பெற்றவற்றை ஒருவரும் பங்கிட்டுக்கொள்ளக்கூடாதென்று ஒரு சட்டம் இயற்றவேண்டுமென்பதாம். இத்தகைய புலங்

* இந்த அளவைத் திட்டஞ்செய்தல் மிக அரிது. சிலவிடங்களில் ஒரு ஏக்கர்ப் புலம் இலாபந்தரத்தக்க புலமாக (economic holding) இருக்கலாம்; வேரோரிடத்தில் இருபது ஏக்கர் புலமும் இலாபந்தராததாயிருக்கலாம். இலாபந்தரத்தக்க புலங்களாக அமைக்கும்போது இயற்கைவளம், செயற்கை அநுகூலங்கள் முதலிய பல விஷயங்களையும் ஆராய்ந்துகொள்ளல் வேண்டும்.

களை ஒரே தொகுதியாக எவரும் விற்கவும் வாங்கவுஞ்செய்யலாம். ஆனால் அவற்றை எவரும் பங்கிட்டுக்கொள்ளக்கூடாது.

பரம்பரை யநுபவச் சட்டத்தை மாற்றல்.

8. கீடிஞ்ச் முதலானோர் சொல்லும் முறையினால் தொகுக்கப்பெற்ற புலங்கள் சிறியனவாக இருக்குமே யன்றிப் பெரியனவாக மாறிவிடா; ஆதலால் பெரிய புலங்களாக அமைக்கவேண்டுமானால் எல்லா ஆண் மக்களுக்கும் நிலத்தைச் சமமாகப் பங்கிட்டுக்கொடுக்கும் சட்டத்தை மாற்றவேண்டும் என வேறொரு சாரார் அபிப்பிராயப்படுகிறார்கள். அநேக ஐரோப்பிய நாடுகளில் மூத்த ஆண்பிள்ளைக்கே நிலச்சொத்து அளிக்கப்படுவதுபோல நமது தேசத்திலும் அவ்வாறான சட்டம் (law of primogeniture) வேண்டும் என்கிறார்கள். இக்கோட்பாட்டைச் சிலர் பின் வருமாறு ஆக்ஷேபிக்கின்றனர்.

9. மூத்த ஆண் மகனுக்கே நிலச்சொத்தை அளித்து ஒரு சிலரை மட்டும் நிலமுதலாளிகளாக்கிவிடுவது அதர்மம் எனக் கூறுவர் சிலர். வேறு சிலர் இச்சட்டத்தினால் நிலங்களைப் பெறுவார் அவற்றைத் தாமே பயிரிடாது, வாரத்திற்கும் குத்தகைக்கும் குடியானவர்களுக்கும்

ஒப்படைப்பார்களாகையால் பயிர்த்தொழில் சிறு புலங்களில் இப்பொழுது நடைபெறுமாறே இனியும் நடைபெறும் என்பர். மற்றுஞ் சிலர் குடும்பத்து நிலச்சொத்திற் பாகங் கிடைக்கப்பெறாத இளைய சகோதரர் வேலையில்லாதிருப்பதுடன் திருட்டு, கொலை முதலிய தீமைகளையும் விளைவிப்பர் எனவுங் கூறுவர்.

10. மூத்த ஆண்மகனுக்கே நிலவுரிமையை அளிக்கவேண்டுமென்பார் மேற்காட்டிய ஆக்ஷேபங்களுக்கு அளிக்கும் நியாயமாவது:—வீணே பயிர்த்தொழிலை நம்பி இப்பொழுது பட்டினி கிடக்கும் சிறு குடியானவர்களிற் பலர் தங்கள் நிலங்களை இழக்க நேரிடுவது உண்மையே; ஆயினும் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்படுங் காலத்திற்றான் மக்கள் புதிய தொழில்களையும் பிழைக்கும் வழிகளையும் கண்டுகொள்ளுவார்கள். இச்சட்டத்தினாலேயே பிறநாட்டார் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். ஆதலின் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கும் ஏனைக் கைத்தொழில் வளர்ச்சிக்கும் இச்சட்டம் அநுகூலமாயிருக்குமானால் அதைக் கையாளுதல் அவசியமாகும்.

11. நாம் கூறும் முடிவு என்னையெனின், புலங்களை ஒன்றுகூட்டுவதால் வியவசாயம் இப்பொழுதிருப்பதைவிட இனிச் சற்று மேம்பாடடையலாம். ஆனால் பயிர்த்தொழிலாளர்தொகை மிகுந்துகொண்டே போவதால் இம்முறை மிகப் பெரிய பயனை விளைவிக்காது. ஆதலால் மக்கட் பெருக்கைக் குறைக்கும் வழிகளையும், கைத்தொழில்களை விருத்திசெய்து அவற்றிற் பெரும்பாலாரை ஈடுபடச்செய்யும் உபாயங்களையும் தேடவேண்டும் என்பதாம்.

# 9

## ஆடுமாடுகள்.

## (The Cattle Problem.)

நிலத்திற்குப்பின் வியவசாயிகளுக்கு மிக அவசியமாக வேண்டுவன ஆடுமாடுகளாம். நிலத்தை 'அசையாமுதல்' (fixed capital) எனவும், ஆடுமாடுகளை 'அசையும் முதல்' (movable capital) எனவும் பொருள்நூல் ஆசிரியர் வகுத்துக்கூறுவர். மாடுகளும் நிலமுமின்றிப் பயிர்த்தொழிலை நடத்த முடியாதென்பது யாவரு மறிந்த பொது உண்மை.

### ஆடுமாடுகளினால் விளையும் பயன்.

2. நூற்றுக்கு எழுபத்தொன்பதுபேர் வீதம் பயிர்த்தொழிலாளராக உள்ள இப்பெருந் தேசத்தில் ஆடுமாடுகளின் உபயோகத்தையும் அவசியத்தையும் விவரித்துக் கூறவேண்டியதில்லை. பெரும்பாலும் வியவசாயிகளான நமது ஏழைமக்கள் எல்லாவித வேலைகளுக்கும் மாடுகளையே உபயோகிக்கின்றனர். ஏர் உழுதல்,

தண்ணீர் இறைத்தல், போரடித்தல், விளைபொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோதல் ஆகிய பல வேலைகளுக்கும் எருதுகளே உபயோகிக்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னரெல்லாம் நெடுந்தூரப் பயணங்களுக்கும் வண்டிகளும் மாடுகளுமே உபயோகிக்கப்பட்டுவந்தன. வேறெந்தத் தேசத்திலும் மாடுகள் இவ்வளவு மிகுதியான வேலைகளைச் செய்வதில்லை. மேல்நாடுகளில் ஆடுமாடுகளை வளர்ப்பது பாலுக்காகவும் இறைச்சிக்காகவுமேயன்றி வியவசாய வேலைக்கன்று. நமது நாட்டில் எருமைகளும் பசுக்களும் பாலுக்காக வளர்க்கப்படுகின்றன; ஆயினும் ஆஸ்திரேலியா, கானடா, அயர்லாந்து முதலிய தேச மக்களைப் போல நமது தேசத்தினர், பால், பாற்கட்டி, இறைச்சி முதலானவைகளை மிகுந்த அளவில் உற்பத்திசெய்வதும் உண்பதும் ஏற்றுமதிசெய்வதும் இல்லை; எனவே நமது தேசத்தில் மாடுகளை வளர்ப்பதன் முக்கிய நோக்கமும் பயனும் வியவசாய வேலையேயாம்.

### ஆடுமாடுகளின் தொகை.

3. அப்படியானால் நமது தேசத்தில் மாடுகளின் தொகை போதிய அளவில் உள்ளதா என்னுங் கேள்வியெழுகின்றது. 1925-ல் எடுத்த

ஐந்து-வருஷ மிருகசங்கியைப்படி (quinquennial census of livestock) இந்தியாவின் எருமைகள், பசுக்கள், எருதுகளின் தொகை 18-கோடியே 70-லக்ஷம். இத்தொகை அதற்கு ஐந்து வருடங்கட்குமுன்னர் இருந்ததைவிட 50-லக்ஷம் அதிகம். மக்களின் தொகைக்கும் மாடுகளின் தொகைக்கும் உள்ள வீதாசாரம் நூற்றுக்கு 61 ஆகும். பண்படும் நிலத்துக்கும் மாடுகளுக்கும் உள்ள வீதாசாரம் நூறு ஏக்கர் நிலத்துக்கு 53 எருதுகளும் பசுக்களும், 14 எருமைகளும்ஆம். எனவே நமது தேசத்தில் மாடுகள் போதிய அளவில் உள்ளன. கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்தும் இவ்வுண்மை நன்கு புலனாகும்.

| தேசங்கள் | | மக்கள்தொகைக்கும் மாடுகளின் தொகைக்கும் வீதாசாரம் | | |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து ... | ·3 | நூறுபேருக்கு | ·3 | மாடுகள் |
| ஜெர்மனி ... | ·2 | ,, | ·2 | ,, |
| ஜப்பான் ... | ·026 | ,, | 2·6 | ,, |
| சைனா ... | ·02 | ,, | 2 | ,, |
| அமெரிக்கா (U.S.A.) ... | ·95 | ,, | 95 | ,, |
| டென்மார்க் ... | ·89 | ,, | 89 | ,, |
| கானடா .. | ·97 | ,, | 97 | ,, |
| இந்தியா ... | ·61 | ,, | 61 | ,, |

4. கீழ்நாட்டு வியவசாய தேசங்களாகிய சைனா, கொரியா, மஞ்சூரியா, இவைகளுடன் ஒப்

பிடும்போது நமது தேசத்திலுள்ள மாடுகளின் தொகை அளவுக்கு மிஞ்சினதாகக் காணப்படு கின்றது. மேல்நாட்டு வியவசாயநாடுகளான அமெரிக்கா, டென்மார்க், கானடா இவைகளுடன் ஒப்பிடும்போதுதான் அத்தொகை சற்றுக்குறை வாகத் தோன்றுகிறது. ஆனால் நாம் முற்கூறிய வாறு, மேனாடுகளில் ஆடுமாடுகளைப் பெரும்பா லும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவுமே வளர்க் கின்றார்களாகையால் நமது தேசத்தில் உள்ள ஆடுமாடுகளின் தொகையில் குறைவில்லை.

### நமது மாடுகளின் கேவல நிலை.

5. ஆனால் நமது மாடுகள் வேறெவ்விதத்தி லும் பிறநாட்டு மாடுகளின் நிலையோடு ஒப்பிடத் தக்கனவல்ல. நம் மாடுகளில் வலிவுகுன்றிக் கிழப் பருவமுற்று வேலைசெய்யவியலாதுகிடப்பன பல; தக்கவாறு மேய்ச்சல் வசதிகள் இன்மையால் அரைவயிறுண்டு துன்புறுவன பல. எருமை களும் பசுக்களும் கொடுக்கும் பாலின் அளவும் மிகக் குறைவு. நமது தேசத்தில் மிக அதிக அளவிற் பால் கொடுக்கும் மாடுகளைவிடப் பத்து மடங்கு அதிகமாய்ப் பிறதேச மாடுகள் பால் கொடுக்கின்றன. கீழ்க்கண்ட அட்டவணையில் ஒவ்வொரு தேசத்திலும் ஒரு பசு கொடுக்கும்

வருட சராசரிப் பாலின் அளவு குறிப்பிடப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஹாலந்து ... | 128500 பவுண்டுகள் (lbs.) |
| சுவிட்ஸர்லாந்து ... | 69800 ,, |
| டென்மார்க்கு ... | 65600 ,, |
| அமெரிக்கா ஐக்கியநாடுகள் | 40880 ,, |
| சென்னை மாகாணத்து உயர்தர ஜாதியாகிய 'ஒங்கோல்' மாடு ... | 8030 ,, |

6. இத்துணை வித்தியாசத்துக்கு நமது வியவசாயிகளின் நிலையே காரணமாகும். தமக்கு வேண்டும் உணவுப்பொருள்களை விளைவிக்கவே போதிய நிலமில்லாத ஏழைக்குடியானவர்கள் எங்ஙனம் மாடுகளின் உணவுக்குரிய நாற்று, புல் முதலியனவற்றை விளைவிப்பர்? கைத்தீனியாய் (stall-feeding) ஊட்டவேண்டுமென்று கூறுவர் சிலர்; குடும்ப வாழ்க்கைக்கு வேண்டும் வருவாயற்றவர்கள் பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு முதலிய சிறந்த தீனிகளை எங்ஙனம் தங்கள் மாடுகளுக்கு அளிக்கக்கூடும்? தாங்களும் பெண்டு பிள்ளைகளும் குச்சிலிற் குடியிருக்கும்போது ஆடு மாடுகள் தங்கி நிற்கத்தக்க நல்ல ஸ்தலவசதிகளை அவர்கள் எங்ஙனம் அமைத்துக் கொடுப்பர்? அன்றி, உயர்ந்த விலையுள்ள (ஆனல் மிகுந்த

அளவான பால்தரக்கூடிய) பசுக்களையும் எருமைகளையும் எவ்வாறு வாங்கிப் பரிபாலித்துவருவர்? எனவே, நமது தேசக் குடியானவர்களுடைய வறுமையே ஆடுமாடுகளின் கேவலநிலைக்குக் காரணம் என்பது பெறப்படுகின்றது.

## உயர்ந்த ஜாதி மாடுகள்.

7. நமது தேசத்தின் சில பாகங்களில் உழவுக்கும் வண்டிக்கும் ஏற்ற சிறந்தஜாதி எருதுகளும், பாலுக்கேற்ற எருமைகளும், பசுக்களும் வளர்க்கப்படுகின்றன. மைசூர் இராஜ்யத்திலுள்ள 'அமிர்த மஹால்' ஜாதி எருதுகள் குதிரைகளைப்போன்ற வேகமுடையன. பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஹரியானா (Hariana), சஹியால் (Sahiwal), மான்ட்கமரி (Montgomery) முதலான ஜாதிமாடுகள் வேலைசெய்வதிலும் பால் கொடுப்பதிலும் மிகச் சிறந்தவை. சென்னை மாகாணத்திலுள்ள 'ஒங்கோல்' 'காங்கேயம்' ஜாதிமாடுகளும் அவ்வாறானவையாம். இவற்றை மற்றெந்தத் தேசத்திலுள்ள உயர்ந்தஜாதி மாடுகளோடும் ஒப்பிடலாம். ஆயினும் இத்தகைய உயர்ந்தஜாதி மாடுகள் மிகச் சிலவே உள்ளன. உள்நாட்டில் உயர்ந்த விலைகொடுத்து அவற்றை வாங்குவார் இல்லாமையால் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாக்கப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுமதி

யாக்கப்படுவதைத் தடுத்தலும் இப்பிரபலமான ஜாதி எருதுகளையும் பசுக்களையும் எருமைகளையும் பரிபாலித்து அபிவிருத்திசெய்யலும் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். ஏனெனில், அயல் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு இப்பொழுது பெரிதும் காணப்படுகிற சில ஜாதிப் பசுக்கள் அதிகமான பாலைக் கொடுப்பினும், அவைகளின் கன்றுகள் ஒரு வேலைக்கும் உதவாது போய்விடுகின்றன.

## பாலுக்குவந்த கேடு.

8. இனி, நகரங்களிலும் கிராமங்களிலும் ஜனங்களுக்கு வேண்டிய உயர்ந்த உணவாகிய பாலைப்பற்றிச் சிறிது கூறுவோம். நமது தேசத்தில் குறைந்தவிலையில் நல்ல பால் கிடைப்பது அரிது. நமது நகரவாசிகள் நீர்கலந்த பாலுக்குக் கொடுக்கும் விலை அமெரிக்காவின் பெரிய நகரங்களில் மிகச் சுத்தமானதும் சத்துள்ளதுமான பாலுக்குக் கொடுக்கப்படும் விலையைக்காட்டிலும் அதிக மென்கிறார்கள். மேலும், மாடுகளைப் போஷிப்பதிலும், பாலைக்கறப்பதிலும் வியாதிகளைப் பரவச்செய்யும் பல முறைகளும் பல்கியிருக்கின்றன. மாடுகள் நிற்கத்தக்க வசதியான தொழுக்கள் கிடையா; உண்ணத்தக்க கொழுமையான உணவுகள் இல்லை; சுத்தமான பாத்திரங்

களிற் பால் கறக்கப்படுவதில்லை; கன்றுகளுக்குச் சரியானபடி பாலை ஊட்டாததனால் அவை சிறிது நாட்களில் இறந்துவிடுகின்றன. நகரங்களில் இவ்வாறான குறைகளும் அதர்மங்களும் அதிகம். ஆயினும் இவற்றைக் களைவதிற் பொதுஜன உணர்ச்சியும் முயற்சியும் சிறிதும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது.

## என்ன செய்யவேண்டும்?

9. கூட்டுறவு முறையிலோ அல்லது பெருத்த மூலதனமிட்டோ உயர்ந்த ஜாதிப்பசுக்களையும் எருமைகளையும் வாங்கி, அவற்றிற்குக் கொழுத்த உணவுகளை ஊட்டவேண்டும். மேலும் சுகாதார முறைப்படி பாலைக்கறந்து விற்கும்படியான ஏற்பாடுகளும் செய்யவேண்டும். இத்தகைய முயற்சிகளை நகரபரிபாலன சபையாரும் அரசாங்கத்தாரும் விரைவிற்செய்ய முன்வருதல் அவசியம். பெருநகரங்களின் மத்தியில் தொழுவங்களும் பிற வசதிகளும் அமைப்பது அரிதாயினும் அவற்றிற்கருகிலுள்ள கிராமங்களில் அவைகளை அமைத்துக்கொள்ளுதல் எளிதாக இருக்கலாம்.

## சில பசுப்பண்ணைகள்.

10. அலிகார், பம்பாய், டார்ஜிலீங், நாகபுரி, காசி முதலான இடங்களில் மிகச் சிறந்த பசுப்

பண்ணைகள் (dairy farms) அமைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாவற்றுள்ளும் மத்திய மாகாணத்து வியவசாய இலாக்காவின் ஆதரவில் நாகபுரியில் நடைபெற்றுவருவது மிகச் சிறந்தது. அப்பசுப்பண்ணைக்கு ரூ. 30,000 மூலதனமாகச் சர்க்கார் கொடுத்துதவினர். அத்தொகையிலிருந்து ரூ. 20,000 பெறும் நிலத்தை வாங்கி அதில் ரூ. 10,000 செலவிட்டுத் தொழுவங்களை நிறுவினார்கள். கூட்டுறவுமுறைப்படி நடக்க விரும்பிய இடையர்கள் அதில் அங்கத்தினர்கள் ஆயினர். அவர்கள் பால்கறக்கும் பசுவொன்றிற்கு ரூபாய் ஆறும் கறக்காததற்கு ரூபாய் மூன்றுமாகக் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள்; அத்தொகையிலிருந்து உணவுப்பொருள்கள் மொத்தமாக வாங்கப்படுகின்றன; பசுக்கள் சாஸ்திர முறையிற் போஷிக்கப்படுகின்றன. வியவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்முன் பசுவுக்குச் சொந்தக்காரர் பாலைக்கறந்து ரூபாய்க்கு எட்டுச் சேர் வீதம் விற்கிறார்கள். வியவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்கள் குத்தகைதார்கள் மூலமாக அப்பாலை மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

### சட்டம் வேண்டும்.

11. இவ்வித முறைகள் நமது தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவவேண்டுமானால்

அதற்குரிய சட்டதிட்டங்கள் வேண்டும். பாலில் நீரைக் கலப்பவர்களையும், சுகாதாரமற்ற முறையில் தொழுவங்களை அமைத்திருப்பவர்களையும் தண்டித்தாலொழியப் புதிய முறைகள் பலிதப்படா.

### வறுமை போகவேண்டும்.

12. ஆயினும் பால் மிகுதியாக வாங்கப்படாவிட்டால் நாம் முற்கூறிய முறைகளால் யாது பயன் விளையும்? நமது தேசத்தில் பெரும் பணக்காரர்களும், மத்தியஸ்திதியிலுள்ளவர்களுமே (middle classes) பாலுணவை அருந்துகின்றனரேயன்றிச் சாதாரண ஜனங்கள் எவ்வளவு குறைந்தவிலைக்குப் பால் விற்றாலும் அதை வாங்கியுண்ணப் பொருள்வருவாய் அற்றிருக்கின்றனர். பொதுஜனங்களின் பொருளாதாரநிலைமை உயர்ந்தாலன்றிப் பசுப்பண்ணைகள் இலாபத்துடன் நடத்தப்படமுடியா.*

---

* ஆங்கிலேய [illegible]டுகளின் உயர்நிலைக்குக் காரணம் அத்தேசத்தினர் பாலையும் இறைச்சியையும் மிகுதியாக உண்பதே என ஆசிரியர் கிளாப்ஹாம் தமது நூலில் (Clapham, *The Economic History of Modern Britain,* Vol. ii.) எடுத்துக்காட்டியிருக்கும் உண்மை இங்கு உற்றுநோக்கத்தக்கது.

## 10

## வியவசாயிகளின் கடன்கள்—1.

## (Agricultural Indebtedness.)

---

நமது தேச வியவசாயிகளின் புலங்களின் அளவு மிகக்குறைவானதென்றும், அவை துண்டு துணுக்குகளாகச் சிதறிக்கிடக்கின்றனவென்றும்; அவர்களுடைய ஆடுமாடுகளின் தொகைதான் அதிகமேயொழிய அவை பயனற்றவை என்றும்; இக்காரணங்களினால் அவர்கள் குறைந்த வருவாயுடையவர்களாயிருப்பதுமன்றி எவ்வித முன்னேற்றமுமடைய இயலாதவர்களாகவும் விளங்குகின்றனரென்றும் முந்தின கட்டுரைகளில் காட்டப்பட்டுள்ளது. அந்தோ! இத்துணை இடர்ப்பாடுகள் போதாவா? குருவியின் தலையிற் பனங்காயை வைத்தாற்போல இவ்வேழைக் குடியானவர்களுக்குத் தாங்கக்கூடாத கடன் சுமையும் இருந்துவருகிறது. இந்நிலையில் தேசத்தின் வியவசாயம் எங்ஙனம் முன்னேற்றமடையும்?

## கடன் சுமையின் அளவு.

2. நமது தேச வியவசாயிகளின் கடன் தகுதிக்கு மிஞ்சினதும் பயங்கரமுமானது. பஞ்சாப் மாகாணத்தில் உள்ள குடிகளின் மொத்தக் கடன் அம்மாகாண நிலத்தீர்வையைக் காட்டிலும் எண்மடங்கு அதிகமாம். ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தரான நிக்கல்சன் என்பவர் 1891-ம் வருஷத்தில் எடுத்த கணக்கின்படி சென்னை இராசதானியில் உள்ள வியவசாயிகளின் கடன் ஆறுகோடியாம்; சுமார் நாற்பது வருடங்களுக்குள் அக்கடன்தொகை எண்மடங்குக்கு அதிகமாக உயர்ந்திருக்கிறதென்று சென்னை பாங்கி விசாரணைச் சபையார் (Madras Provincial Banking Enquiry Committee) வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் உள்ள வியவசாயிகளின் கடன் (1929-ம் வருஷத்தில்) 900 கோடி ரூபாய்க்குக் குறையாதிருக்கும் என இந்திய பாங்கி விசாரணைச் சபையார் (The Central Banking Enquiry Committee) கூறுகின்றனர்.

## வீண் கடன்.

3. நில அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம் முதலியவற்றிற்காக இக்கடன்கள் வாங்கப்பட்டிருப்பின் அவை மூலதனமாகக் (capital investment) கருதப்படும். ஆனால் நமது தேசக்

கிராமவாசிகளின் கடன்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பாகம் அனுவசியமாகவே ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு மிகுதியான அளவில் வீண்கடனுக்குட்பட்டுழலும் குடிகளின் வாழ்க்கை என்னும்? இக்கடன்களுக்குக் காரணங்கள் யாவை?

## காரணங்கள்.

4. வியவசாயிகளின் கடன் தொல்லைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவர்கள் புலங்கள் சிறியன; மாடுகள் பலமற்றன; வருவாய் குறைந்தது; குடும்பமோ பெருத்தது. இவையனைத்தும் பொருளாதார நிலையில் முன்னேற்றமடையாத எல்லாத் தேசங்களிலும் இயல்பாய்க் காணப்படுவனவே. ஆயினும் நமது குடியானவர்கள் மேற்காட்டிய குறைபாடுகளுடன் கல்விப்பயிற்சியற்றவர்களாயும் இருக்கின்றனராதலால் மிகுதியும் கடனுக்குள்ளாகின்றனர். இவ்வுண்மையை விளக்கச் சில உதாரணங்கள் தருவோம்

## எல்லாவற்றிற்கும் கடன்.

5. வீட்டில் சாப்பாட்டுக்கு இல்லாவிட்டால் உடனே கடன்வாங்க ஓடுவார்கள்; மாடு இறந்துபட்டால் உடனே கடன்; விதைப்பதற்கும், களைபிடுங்குவதற்கும், உழுவதற்கும் கடன்; வீட்டில்

இழவானாலும் கடன்; சுபகருமமாயினுங் கடன். இவையெல்லாம் அவசியமான செலவுகளே; ஆயினும், ஏற்கனவே சேமித்துவைத்திருக்கும் பொருளிலிருந்து இச்செலவுகளைச் செய்யவேண்டுமே யன்றிக் கடன்பட்டுச் செய்யலாகாது. இச் சிறிய உண்மையை அறியாததனாலன்றோ இவ் வேழைக்குடிகள் இப்பெருந் துயருக்கு ஆளாகின்றனர்? கடனில்லாச் சோறு கால்வயிறு போது மென்று இவர்கள் அறியும் நாள் எந்நாளோ? வயலில் இருக்கிற நெற்கதிரை நம்பிக் குதிரில் இருக்கும் நெல்லை விற்று ஆடம்பரமாகச் செலவு செய்யும் நிர்விசாரிகள் தீர்க்கயோசனை செய்யும் நாளே நாட்டுக்கு நன்னாள்! அண்மையிலுள்ள பெருஞ்சந்தையில் மளிகைச் சாமான்களை மொத்தமாக மிகக் குறைந்தவிலையில் வாங்கலா மென்றறிந்திருந்தும் அறிவிலிகள் அவற்றைக் கிராமக் கடைகளிற் சில்லரையாக அதிகவிலை கொடுத்துக் கடன்கள் வாங்கி வருகின்றனர். இம்மடமைத்தனம் என்று ஒழியுமோ? இங்ஙனமாக எல்லாவற்றிற்கும் கடன்படும் கெட்ட வழக்கம் அடியோடு நீங்கினாலொழியக் கடன் நீங்காதென்பது திண்ணம்.

## மண் ஆசை.

6. வியவசாயிகளின் கடன்களுக்கு வேறொரு காரணம் மண் ஆசை. எல்லாத் தேசங்களிலும் கிராமவாசிகளுக்கு மண்ணாசை மிகவும் அதிகம்; நிலம் என்றால் உயிரையும் விட்டுவிடுவர்; ஓரடி நிலத்திற்காக ஓராயிரம் ரூபாயானாலும் நியாயஸ்தலத்தில் செலவழிப்பர். செழித்த வருடத்தில் சிறிது பொருள் கையிற் கிடைத்தால் அதை உடனே நிலத்திற் போட்டுவிடுவர்; அத்துடன் பெரிய நிலச்சுவான் என்ற பெயரும் புகழும் தமக்குக் கிடைத்துவிடுமென்று எண்ணுகின்றனர். கைம்முதல் காணாவிட்டால் கடன் பட்டும் நிலத்தை வாங்குகின்றனர். நிலம் அந்த வருடம் விளையாவிட்டால் 'அடுத்த வருடம் விளையும், அதற்கடுத்த வருடம் விளையும், இன்னும் அதற்கடுத்தவருடம் விளையும்' என்று முடிவில்லாக் கணக்கிட்டு இலவுகாத்த கிளிபோல என்றும் ஏமாறுகின்றனர். இதற்கிடையில் வட்டி வளர்ந்து கொண்டே போகிறது. கடைசியில் முதலுக்கும் மோசமாகும் வேளை வருகிறது. அப்பொழுதாயினும் 'சுட்டிசுட்டது கைவிட்டது' என்று போகாது, 'பெரியோர்கள் சம்பாத்தியம்' என்ற மனப்பேய் பிடித்தாட்டுவதனால் உடும்பு பிடித்தாற்போல நிலத்தைச் சதமெனப் பிடித்துக்கொண்டிருந்து

10

கடைசியில் எல்லாவற்றையும் இழந்து, கெட்டுப் போகின்றனர். இக்கேடுகள் அனைத்திற்குங் காரணம் நிலப் பைத்தியம் அல்லவா? இம்மடமை ஒழியும் நாளே கடன் ஒழியும் நாள் ஆம்.

## வேறு காரணங்கள்.

7. நாம் மேற்காட்டிய இரண்டு குறைகளும் கிராமவாசிகளிற் பெரும்பாலாருடைய கடன்களுக்குக் காரணங்களாம். ஆனால் அவற்றினும் வருந்தத்தக்க மற்றொரு குறையால் வேறு ஒரு சிலருடைய கடன்கள் எழுகின்றன. சில கிராமங்களில், விசேஷமாக நகரங்களை அண்மியவற்றில், வீண் ஆடம்பரங்களிலும், சிற்றின்பங்களிலும், நவீனநாகரிகப்பழக்கங்களிலும் தங்கள் பொருளைப் பொருட்படுத்தாது விரயஞ்செய்து நாட்கழிக்கும் வாலிபர் சிலர் உளர். வேறு சிலர் சோம்பியிருப்பதையே விரதமாகக் கொண்டு வீண்விளையாட்டுக்களில் நாட்கழிக்கின்றனர். மற்றுஞ் சிலர், ஊர்மடங்களையே தமதிருப்பிடமாக நினைத்துத் தூங்கித்தூங்கி எழுந்து நிர்விசாரிகளாக அலைகின்றனர். மற்றுஞ் சிலர் அற்பக்காரியங்களுக்கும் நீதி ஸ்தலங்களுக்குச் சென்று, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் வக்கீல்களுக்கும் பணத்தை இறைத்துவருகின்றனர். கிராமவாழ்க்கை மேன்மையுற வேண்டு

மானல் இத்தகைய கேடுகளும் நீங்கவேண்டு மன்றோ? அந்தோ! நம் கிராமவாழ்க்கை கெட்டழியவும், வியவசாயம் க்ஷீணதசையடையவும் காரணமாகவுள்ள இக்களைகளைக் களைந்தாலல்லவோ நாடு நலம்பெறும்?

8. இங்ஙனங் கூறுவதனல் எல்லா வியவசாயிகளின் கடன்களும் மடமையால் எழுந்தனவென்னும் ஒரே பிடிவாதக்கொள்கையையேயுடையோம் என்று எண்ணிவிடவேண்டாம். நாம் இங்கு இடித்துக் கூறியவை மூலகாரணங்கள்; அவற்றைச் செவ்வனே ஆராய்ந்து அவற்றால் எழும் கேடுகளைப் போக்குவதே நமது முதற் கடமையாகும்.

### அநியாய வட்டி.

9. கடன் வளர்ச்சிக்கு வேறொரு காரணம் அநியாய வட்டி வாங்குவதாம். கிராமாந்தரங்களிலெல்லாம் அநியாயவட்டிவாங்கும் சிலர் உளர். உதாரணமாக, சந்தை வட்டி என்பதாகச் சந்தைக்குச் சாமான்கள் வாங்கப்போகும் ஜனங்களுக்கு ஒரு ரூபாயைக் கடனைக் கொடுத்து அதை மறுநாள் திரும்பப் பெறும்போது ஓரணை அல்லது இரண்டணை வட்டி வாங்கும் வழக்கம் தென் ஜில்லாக்களில் இருந்துவருகிறது.

10. இத்தகைய குறைகளுக்கும் முக்கிய காரணம் கிராம மக்களின் மடமையேயாம். இங்கிலாந்திலுங்கூட ஏழைமக்களை ஏமாற்றி நூற்றுக்கு முந்நூறு விகிதம் (300%) வட்டிவாங்கிப்பிழைத்து வரும் சாவகாரிகள் சிலர் உளராம்.* ஆதலால் இப்பொழுது இயற்றப்பெற்றுள்ள அநியாய வட்டிச் சட்டம் (Usurious Loans Act) சாவ்காரிகள் சட்டம் (The Money Lenders' Act) ஆகிய இவற்றால் பெரும் பயன் விளையும் என நாம் கருதிவிட வேண்டாம்.

### கடன் வளர்ச்சிக்கு ஆங்கில ஆட்சி காரணமா ?

11. நாம் இதுகாறும் கூறிவந்தவைகளே வியவசாயிகளின் கடன்களுக்கு முக்கிய காரணங்களெனப் பலரும் ஒப்புக்கொள்ளுவர். ஆயினும் இக்கடன்களெல்லாம் நம் நாடு ஆங்கில ஆட்சிக்குட்பட்டபின் எழுந்தவைகளே யென வாதிக்கும் ஒருசிலரும் உண்டு.

12. அரசாங்கத்தார் குடியானவர்களுக்கு நிலவுரிமையை அளித்ததனால் அவர்கள் தம் நிலத்தை அடமானமாக வைத்துக் கடன்பெறு

---

* *The New Statesman and Nation,* quoted by Dr. P. J. Thomas, *The Problem of Rural Indebtedness.*

கிறார்கள் என்றும்; நிலவரி அதிகமாயிருப்பது பற்றி அதைச் செலுத்தவியலாதும் பலமுறைகளில் அவர்கள் கடனுக்குள்ளாகின்றனர் என்றும்; கடன் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கும் (The Registration of Documents Act, 1864), நிலவுரிமையை விற்பதற்கும் (The Transfer of Property Act, 1882) அநுகூலமான சட்டங்களை அரசாங்கத்தார் இயற்றியிருப்பதால் வியவசாயிகள் சுலபமாகக் கடன்வாங்குகின்றனர் என்றும்; நீதிஸ்தலங்களில் வழங்கப்பட்டுவரும் சட்டங்கள் (The Indian Contract Act and the Indian Civil Procedure Code) கடன்பட்டவனது உடைமைகளை ஏலத்தில் விற்பதற்கும், அவனைச் சிறையிலிடுவதற்கும் அநுகூலங்கள் அளிக்கின்றமையால் சாவகாரிகள் அச்சமின்றிக் குடியானவர்களுக்குக் கடன்கொடுத்துவருகின்றனர் என்றும் சில ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.*

13. மேலும் ஆங்கில ஆட்சியினால் நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்பட்டமையால்

---

* 'The introduction of British rule has tended to increase both the demand and facilities for borrowing so that increasing indebtedness has accompanied improvements in agricultural methods and organisation' (Vera Anstey, *The Economic Development of India*, P. 185).

மக்கள் தொகையும், விசேஷமாக வியவசாயிகளின் தொகையும், அதிகமாகப் பெருகிவருவதனாலேயே கடன்சுமை உயர்ந்துவருகின்றதெனவும்; அன்றியும், வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலமாய் விளைபொருள்களுக்கு உயர்ந்த விலை கிடைப்பதால் வியவசாயிகளிற் பலர் தங்கள் நிலத்தை விருத்திபண்ணுவதற்கும் இதைப் போன்ற பிறவற்றுக்கும் கடன்வாங்கத் தூண்டப்படுகின்றனர் எனவும் சிலர் கூறுகின்றனர்.

14. மேலே காட்டிய விவாதங்கள் பொருத்தமானவைகள் அல்ல. நாட்டுக்கு அமைதியளித்ததும், சட்டங்களை இயற்றியதும், நீதிஸ்தலங்களை நிறுவியதும், குடியானவனுக்கு நில உரிமையை வழங்கியதும் கடன் வளர்ச்சிக்குக் காரணங்கள் ஆகா. இவையனைத்தும் நாகரிகமடைந்த எல்லாத் தேசங்களிலும் காணப்படவேண்டிய ஒழுங்குகள். ஊன்றக்கொடுத்த கோலினால் ஒருவன் தன் தலையை உடைத்துக்கொண்டு கோல் கொடுத்தவனைக் குறைகூறுவதிற் பயன் என்ன? எய்தவன் தன்மருங்கிருக்க அம்பை நோவது அறிவுடைய செயலில் வைத்தெண்ணப்படுமோ?*

* 'The secure right to property is a blessing, but in the hands of the average Indian ryot it is often a curse'. (P. J. Thomas, *The Problem of Rural Indebtedness*, P. 8).

### வியவசாயிகளுக்குச் சர்க்கார் கடன்கொடுத்தல்.

15. தம் ஆட்சிக்குட்பட்ட குடிகளின் கடன் பெருக்கைக்கண்டு வருந்திய அரசாங்கத்தார் அதை நீக்குமாறு பல முயற்சிகள் செய்தனர். 1883-ல் 'நில அபிவிருத்திக் கடன் சட்டம்' (The Land Improvement Loans Act) ஒன்றையும் 1884-ல் 'வியவசாயிகளின் கடன் சட்டம்' (The Agriculturists Loans Act) ஒன்றையும் இயற்றி மிகக்குறைந்த வட்டியில் (ரூபாய் நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ $6\frac{1}{4}$ வீதம்) நிலத்தை விருத்தி செய்வதற்கும் வேறு வியவசாய வேலைகளை நடத்துவதற்கும் அரசாங்கத்தார் குடிகளுக்குக் கடன் கொடுத்துதவ முன்வந்தனர். இச்சட்டங்களிலுள்ள விதிகளை எல்லாக் குடிகளும் அறிந்துகொள்ள இயலாதாராயிருப்பதனாலும், கடனைத் திரும்பப்பெறுங்கால் அரசாங்கத்தார் கடுமையான முறைகளைக் கையாண்டமையாலும் மிகச் சிலரே இவற்றாற் பயனெய்தினர்.

### சாவகாரிகளைக் கட்டுப்படுத்தல்.

16. தாம் நேரே கடன் கொடுத்துதவுவதாற் பயன் விளையாமையைக் கண்ட அரசாங்கத்தார் இனிச் சாவகாரிகளுடைய கொடுமைகளை நீக்கிவிட்டாற் குடிகளின் கடன்சுமை நீங்கிவிடா

தோவென எண்ணினர். ஆதலால் அதற்கென்று 1879-ல் 'தக்ஷிண வியவசாயிகள் கடன் நிவர்த்திச் சட்டம்' (The Deccan Agriculturists' Relief Act) ஒன்றை இயற்றினர். இதில் சாவகாரிகள் வாங்கிய அநியாய வட்டியைக் குறைப்பதற்கும், வட்டியையும் முதலையும் சிறு சிறுபாகங்களாகக் கடன்பட்டார் திருப்பிச் செலுத்துவதற்கும் நீதிஸ்தலங்கள் அனுமதியளிக்க விதிகள் அமைக்கப்பெற்றுள்ளன. ஆயினும் சாவகாரிகள் தம் உபாயத்தால் இவ்விதிகளையும் மேற்கொண்டுவருகின்றனர். இவ்வாறே சாவகாரிகள் கடன்பட்டவர்களுடைய நிலத்தை விற்றெடுத்துக்கொள்வதைத் தடுக்க 1901-ம் வருடத்தில் பஞ்சாபில் ஏற்படுத்தப்பட்ட சட்டமும் (The Punjab Land Alienation Act, 1901) பயன்படாதொழிந்தது. இங்ஙனமாகவே 1918-ல் இயற்றப்பெற்ற 'கடுவட்டிச் சட்ட'மும் (The Usurious Loans Act) அநுபவசாத்தியமாகாது ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்து வருகிறது. தம் அறியாமையினாற் குடிகள் கடனுக்குட்பட நேரும்போது சாவகாரிகளின் கொடுமைகளை மட்டும் சட்டத்தால் தடுப்பதால் யாது பயன் விளையும்?

# 11

## கூட்டுறவு இயக்கம்.

## (The Co-operative Movement.)

---

சாவகாரிகளால் விளையுந் தீமைகளைத் தடுப்பதால்மட்டும் வியவசாயிகளுக்குப் பெரும்பயன் விளையாமையைக் கண்ட அரசாங்கத்தார் கடன் நிவாரணத்திற்குரிய வேறு முறைகளை ஆராயுமாறு 1895-ல் ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தரான நிக்கல்சன் என்பவரை நியமித்தனர். அன்னவர் மூன்று வருட ஆராய்ச்சிக்குப்பின் இரண்டு சொற்களாலமைந்த ஒரு தொடர்மொழியில் தமது முடிபை மிக அழகாகக் கூறிமுடித்தார். அம்முடிபு 'ரய்பீசனைத்* தேடுக! (Find Raiffeisen) என்பதாம்.

---

*இவர் ஜெர்மன்தேச வியவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிப்பதற்குக் "கூட்டுறவு முறையை" முதன்முதற் கண்டுபிடித்து அதைப் பரப்பி வெற்றிபெறச் செய்தவர். ஆதலின் இவ்வியக்கத்தைக் குறிப்பதற்கு இவரது பெயரையே ஆகுபெயராக இட்டுக்கூறுதலுமுண்டு. 'ரய்பீசனைத்தேடுக' என்ற சொற்றொடரின் கருத்து கூட்டுறவு இயக்கத்தை இந்தியாவிலும் நாட்டுக என்பதாம்.

## கூட்டுறவுச் சட்டங்கள்.

2. ரய்பீசனால் ஆரம்பிக்கப்பட்ட 'கூட்டுறவு இயக்கத்தை இந்தியாவிலும் நிறுவுக' என நிக்கல்சன் கூறிய முடிபை இந்திய அரசாங்கத்தார் ஆதரித்து, உடனே பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணங்களிலும், வங்காளத்திலும் சிற்சில கூட்டுறவுச் சங்கங்களை (Co-operative Societies) ஏற்படுத்தினர். ஆனால் அக்காலத்து இராஜப்பிரதிநிதியான கர்ஸான் பிரபு இந்தியா முழுவதிலும் இத்தகைய சங்கங்கள் நிறுவப்பட வேண்டுமெனத் தீர்மானித்து அதற்கென்று 1904-ல் ஒரு தனிச் சட்டத்தை (The Co-operative Credit Societies Act) இயற்றினர். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு நிர்வாக அதிகாரியும் (Registrar of Co-operative Societies) நியமிக்கப்பட்டார். 1904-ல் இயற்றிய சட்டம் 1912-ல் மறுபடியும் திருத்தியமைக்கப்பெற்றது. இச்சட்டத்தின்படி பல கூட்டுறவுச்சங்கங்கள் சேர்ந்த ஒரு தொகுதியை மேற்பார்ப்பதற்கான 'சூப்பர்வைசிங் யூனியன்' களும் (supervising unions), பல தொகுதிகள்சேர்ந்த 'யூனியன்'களை மேற்பார்ப்பதற்கான 'ஜில்லா யூனியன்'களும், எல்லாச் சங்கங்களுக்கும் கடன் வழங்குவதற்கான 'மத்திய பாங்கி'களும் (central banks) நிறுவப்பெற்றன.

மேலும், இதுகாறும் கொடுக்கல்வாங்கல் செய்யும் ஸ்தாபனங்களாகவே அமைக்கப்பட்டிருந்தகிராம சங்கங்களும் (rural societies) நகர சங்கங்களும் (urban societies) கடன் கொடுப்பதல்லாத வேறு கூட்டுறவு வேலைகளையும் (non-credit) சேர்த்து நடத்திக்கொள்ளவும் அநுமதியளிக்கப்பட்டன.

### கூட்டுறவு இயக்க வளர்ச்சி.

3, வியவசாயிகளின் கடன் நிவாரணத்திற்காக அரசாங்கத்தார் கைக்கொண்ட முறைகளிற் கூட்டுறவு இயக்கமே தலைசிறந்து விளங்குகிறது. இவ்வியக்கத்தின் வளர்ச்சியொன்றே இதற்குத் தக்க சான்றாகும். 1905-ம் வருடத்தில் இந்தியா முழுவதிலும் 41 சங்கங்களே அமைக்கப்பட்டிருந்தன; ஆனால் மறுவருடத்தில் அத்தொகை 8177 ஆகவும், 1925-ம் வருடத்தில் 89,081 ஆகவும், 1931-ல் 1 லக்ஷம் ஆகவும் உயர்ந்தது. கடைசியாகக் காட்டிய ஆண்டில் அங்கத்தினர்களின் (members) தொகை 43 லக்ஷம். கூட்டுறவு இயக்கத்தைச்சார்ந்த எல்லாச் சங்கங்களின் மூலதனம் (working capital) சுமார் 50 கோடி ரூபாய்; கிராமச் சங்கங்களுக்குக் கடன் கொடுத்து வழங்கும் மத்திய பாங்கிகளின் தொகை 600. இக்கணக்கு விவரங்களிலிருந்து நம் தேசத்தில் கூட்டுறவு

இயக்கம் பெரிதும் வெற்றியடைந்திருக்கிறதெனத் துணிவுடன் கூறிவிடலாம்.

### கிராமச் சங்கங்களின் நிர்வாகம்.

4. ஆயினும் கூட்டுறவு இயக்கத்துக்கு அடிப்படையான ஸ்தாபனங்கள் பிரதம சங்கங்கள் (primary societies) என வழங்கப்படும் கிராமச் சங்கங்களேயாம். இச்சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப்படாதது (unlimited liability); அதாவது சங்கங்ளுக்கு ஏற்படும் நஷ்டத்தை அங்கத்தினர்கள் அனைவரும் தங்கள் இதர சொத்துக்களிலிருந்தும் ஈடுசெய்யக் கட்டுப்பட்டவர்களாவர். மேலும் ஒருவர் வாங்கிய கடனுக்கு எல்லா அங்கத்தினர்களும் கூட்டாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகின்றனர் (joint responsibility). அன்றியும், அங்கத்தினர்களே தங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான பஞ்சாயத்தார் மூலமாகச் சங்கத்தை நிர்வகித்து வருகிறார்கள். இவ்வொழுங்குகள் கிராமங்களிற் கூட்டுறவு உணர்ச்சியையும் நிர்வாகத் திறமையையும் அளிப்பதற்குச் சிறந்த சாதனங்களாக விளங்குகின்றன.

## கிராமச் சங்கங்களின் வேலை.

5. இப்பொழுது நிறுவப்பட்டுள்ள கிராமச் சங்கங்களின் மொத்தஎண் சுமார் 90,000. ஆனால் அவற்றுட்பெரும்பாலன (சுமார் 75,000) கொடுக்கல் வாங்கல் செய்யும்சங்கங்களேயாம் (credit societies). கூட்டுறவுஇலாக்கா அதிகாரியாற்பதிவுசெய்யப்பட்டபின் ஸ்தாபிக்கப்படும் ஒவ்வொரு சங்கமும் தனது அங்கத்தினர்களின் கடன்விண்ணப்பங்களை மகாசபையில் (general body) வைத்துப் பரிசீலனைசெய்து, அவர்கள் ஒவ்வொருவரும் வாங்கக் கூடிய மொத்தக்கடன்களுக்கு மேற்போகாத தொகையை (individual maximum borrowing power) வெண்ணிலைக்கடன் பத்திரங்கள் அல்லது அடமானக் கடன் பத்திரங்களின் ஆதாரத்தின் மேற் கொடுக்கத் தீர்மானித்து, அவ்விண்ணப்பங்களை மேற்பார்வை யூனியன் (supervising union) சங்கத்தார் ஒப்புக்கொண்டபின் மத்தியபாங்கியிலிருந்து பணத்தைக் கடனாகப்பெற்று, அதை அங்கத்தினர்களுக்கு வழங்கிக் குறிக்கப்பட்ட தவணையில் அவர்களிடமிருந்து அசலையும் வட்டியையும் திரும்பப் பெற்று, மத்திய பாங்கிக்குச் செலுத்தி, இங்ஙனமாகக் கொடுக்கல் வாங்கலை நடத்தி வருகிறது.

6. ஆனால் இச்சங்கங்களிலுள்ள பஞ்சாயத்தார்கள் கொடுக்கல் வாங்கலைத் திறமையுடன்

நடத்தாமையினால் ஒருவர் பெயரால் மற்றொருவர் அதிகக்கடன்களை வாங்கிக்கொள்ளலும் (binami loans), குறிப்பிட்ட தவணைப்படி அசலையும் வட்டியையும் திருப்பிச்செலுத்தாதிருத்தலும் (over-dues) ஆகிய பெருங்குறைகள் காணப்படுகின்றன. மேலும், வாங்கப்படும் கடன்களும் பெரும்பாலும் பொருளாக்கத்திற் பயன்படுந் துறைகளில் செலவிடப்படுவதில்லை. அன்றியும், சங்கங்கள் மிகக்குறைந்த கடன்களே கொடுக்கின்றமையால் கூட்டுறவாளர் சாவகாரிகளிடமிருந்து கடன் வாங்கும் வழக்கத்தையும் ஒழித்தபாடில்லை. இறுதியாக இச்சங்கங்கள் மூலமாகக் கடன்களைப் பெறுவதிற் காலதாமதமும் எற்படுகிறதுமன்றி வட்டியும் நூற்றுக்குச் சுமார் 9 விகிதத்துக்குக் குறையாமல் பொறுத்து வருகிறது. அஸாம் மாகாணத்தில் $15\frac{5}{8}$ முதல் $18\frac{3}{4}$ விகிதம் வரை வட்டி வாங்கப்படுகிறது.

7. கூட்டுறவுத் தத்துவங்களைப் பரவச்செய்தல், சங்கங்களைத் திறமையுடன் நடத்துவதற்குரிய ஆட்களை நியமித்தல், அரசாங்கத்தார் மேற்பார்வையை அதிகப்படுத்தல், வட்டி விகிதத்தைக் குறைத்தல், ஆகிய இவைபோன்ற முறைகளைக் கையாடினால் நாம் மேற்காட்டிய குறைகள் ஒழியும் என்பதற்கு ஐயமில்லை. மேலும், பிறநாடு

களைப்போலவே நம் நாட்டிலும் இவ்வியக்கம் அரசாங்கத்தார் உதவியின்றிக் கூட்டுறவாளர்களாலேயே தம் சொந்தச் செலவில் நடத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.*

8. கொடுக்கல் வாங்கலுக்குமட்டுமே பயன்படுவதாயிருக்குமாயின் அரசாங்கத்தார் கூட்டுறவு இயக்கத்தை இத்துணை செலவில் நடத்திவரார். இவ்வியக்கம் கிராமவாசிகள் எல்லாத் துறைகளிலும் ஒருங்கே முன்னேற்றமடைவதற்கு மிகச் சிறந்த கருவியாக நின்றிலங்குகின்றது. இவ்வியக்கத்தாலேயே கிராமவாசிகளுக்கு வேண்டும் உணவுப்பொருள்கள், ஆடை, விதை, எரு முதலியனவற்றைக் கூட்டாக வாங்குவதற்கும் விற்பதற்குமான வர்த்தகசங்கங்களும் **(co-operative purchase and sale societies)**, பால்,நெய், முட்டை முதலிய பொருள்களை உற்பத்தி செய்யவும் விற்பதற்குமாகிய சங்கங்களும் **(co-operative dairies and poultries)**, 'மலேரியா' எனப்படும் குளிர்சுரத்தைப் போக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சுகாதாரச் சங்கங்களும், சமூகவாழ்வைச் சீர்திருத்துவதற்

---

* "The (co-operative) movement requires steadying its pace, holding its body erect, and walking without stays" (L. Harkishen Lal in the *Indian Central Banking Enquiry Committee Report*, P. 601).

கான நல்வாழ்க்கைச் சங்கங்களும், கிராமச் சீரமைப்புச் சங்கங்களும் (rural reconstruction societies), ஆங்காங்கே அமைக்கப்பட்டு நல்ல வேலைசெய்துவருகின்றன.

9. இவ்வாற்றால் கிராம மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடையலாம் என்ற உண்மை புலனாகின்றது. ஆயினும் இத்தகைய சங்கங்கள் சிறந்த பயனளிக்க வேண்டுமாயின் கிராமமக்களே அவற்றை உயரிய முறையில் நடத்தும் ஆற்றலும் ஆர்வமும் உடையராயிருக்க வேண்டும். ஆனால் கூட்டுறவு இயக்கம் இப்பொழுது வெற்றியடைவதற்குத் தடையாயிருப்பன கிராமவாசிகளின் கல்வியின்மையும், தாழ்ந்த பொருளாதாரநிலையுமேயாம்.

---

# 12

## வியவசாயிகளின் கடன்கள்—II.

## (Agricultural Indebtedness.)

அரசாங்கத்தாரால் நிறுவப்பட்ட கூட்டுறவு இயக்கமானது விரைவில் வளர்ந்து, கிராமவாசிகளுக்குப் பலதுறைகளிலும் பெரும்பயன் விளைவிப்பதாகக் காணப்படினும் அவ்வியக்கத்தால் வியவசாயிகளின் கடன்சுமைகள் ஒருசிறிதும் குறைந்தில என்பது வெள்ளிடைமலை. பணத்தைக் குறைந்த வட்டிக்குக் கடனகக் கொடுப்பதனல்மட்டும் கடன்கள் நீங்கிவிடா; அதனற் கிராமவாசிகளிற் பலர் மேன்மேலும் கடனுக்குள்ளாகித் தம் வாழ்க்கையைப் பாழாக்கி, அழிவுறுகின்றனரேயன்றிப் பயனடைகின்றிலர். 'தூக்கிவிடப்பட்டவன் கழுத்திலுள்ள கயிறு எவ்வாறு அவனை (உயிர் இழப்பதற்குக் காரணமாகத்) தாங்குகிறதோ அவ்வாறே கடன்கொடுத்தலும் வியவசாயியை (பொருள் இழப்பதற்குக் காரணமாகத்) தாங்கும்' என ஓர் பொருள்நூல் ஆசிரியர்

கூறுகிறார்.* கூட்டுறவுச் சங்கங்களிற் கடனைப் பெற்று, அதைத் திருப்பிச் செலுத்த இயலாது வீட்டையும் நிலத்தையும் விற்றுத் தேயிலைத் தோட்டங்களுக்குக் கூலியாட்களாகச் சென்றுள்ளோர் நம் நாட்டிலும் பலர் உண்டு. ஆதலால் கூட்டுறவு இயக்கத்தால் வியவசாயிகளின் கடன் சுமையை ஒழித்துவிடலாம் என்ற கொள்கை பிழைபாடுடையது எனக் கண்டுகொள்க.

### கடன்களை ஒழிப்பதன் அவசியம்.

2. ஆயினும், இப்பொழுதுள்ள கடன்களை ஒழிப்பது அவசியம். சென்ற சில ஆண்டுகளாக எழுந்துள்ள விலைத்தாழ்ச்சியினால் வியவசாயிகள் வேறு பல துறைகளிலும் துயருறுவது மன்றிக் கடன்சுமையையுந் தாங்கவியலாது தவிக்கின்றனர். விளைபொருள்களின் விலை குறைந்தால் கடன்சுமை அதிகரிக்குமன்றோ? உதாரணமாக, கலம் நான்கு ரூபாயாக விற்றபோழ்து 25 கலம் நெல்லை விற்றால் 100 ரூபாய்க் கடனைத் தீர்க்கலாம்; ஆனால் கலம் இரண்டு ரூபாயாக விற்றால் அக்கடனைத் தீர்க்க 50 கலம் நெல் வேண்டும். எனவே, இப்பொழுது நமது கிராமவாசிகளின்

* "Credit holds up the landowner as the rope holds up the hanged man", *Gide*.

கடன் தொகை சுமார் 900 கோடி ரூபாயாகவே இருப்பினும், அதன் சுமை உண்மையில் 1500 கோடி ரூபாய்க் கடன்களுக்குச் சமமாயிருக்கலாம். ஆதலால், இப்பொழுது வியவசாயிகளிற் பெரும்பாலார் தமது கடன்களுக்குரிய வட்டியைச் செலுத்தவும் வழியில்லாதிருக்கின்றனர். பலர் தம்மிடமுள்ள நகைகளை எல்லாம் விற்றிருக்கின்றனர். சிலர் தங்கள் நிலங்களையும் இழந்துவருகின்றனர். நிலங்களை யிழந்தவர்கள் மலைப்பெய்தி நிற்றலும், நகரங்களுக் கேகலும், அன்றி வாரத்திற்கும் கூலிக்கும் பயிரிடும் பண்ணையாட்களாக மாறுவதும், நமது தேசத்தின் பற்பல பாகங்களிலும் நாம் காணும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. இக் குறைகளை நீக்கும் வழிகள் யாவை?

### பிறநாட்டார் எடுத்துக்கொள்ளும் உபாயங்கள்.

3. இச்சந்தர்ப்பத்தில் பிறநாடுகளிலுள்ள வியவசாயிகளின் கடன்களை அரசாங்கத்தார் எவ்வாறு ஒழித்துவருகின்றனரென ஆராய்வது நலம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (U. S. A.) தலைவரான ரூஸ்வெல்ட் (Roosevelt) என்பார் அரசாங்கத்திலிருந்து குடிகளுக்கு 200 கோடி டாலர்கள் (சுமார் 600 கோடி ரூபாய்) நூற்றுக்கு 5 விகிதத்திற் கடனுக வழங்கியுள்ளார். இவ்வாறு

குறைந்த விகிதத்திற்பெற்ற பணத்தைக்கொண்டு அதிகவட்டிக் கடன்களை யெல்லாம் குடிகள் மீட்டி வருகின்றனர். மேலும், விளைபொருள்களின் விலையை உயர்நிலைக்குக் கொண்டுவருவதற்காகவும் அவர் பலவாறு முயன்றுவருகிறார்.

4. இத்தாலியா தேசத்துச் சர்வாதிகாரியான முசோலினி (Mussolini) என்பார் அநியாய வட்டி வாங்கிப் பிழைத்துவந்தவர்களை யெல்லாம் தேசத்தைவிட்டுத் துரத்திவிட்டனராம். மேலும், வியவசாயிகளுக்குக் கடன்கொடுத்தவர்கள் வட்டி விகிதத்தை $7\frac{1}{2}$ ஆகக் குறைத்து, எல்லாக் கடன்களையும் 25 வருட அடமானக்கடன்களாக மாற்றி எழுதிக்கொள்ளவேண்டுமென்றும் அவர் சட்டம் இயற்றியிருக்கிறார்.

5. ஹாலந்து தேசத்தில் வியவசாயிகளுக்குக் கடன்கொடுத்தவர்கள் யாவரும், குறைந்தவிகித வட்டி பெற்றுக்கொள்ளவேண்டியதோடுமட்டும் அன்றி, அவசியம்நேரிடில் வட்டி நீக்கி அசலை மட்டும் பெற்றுக்கொள்ளவும் வேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

### பவநகர் அரசரின் முயற்சி.

6. பிறநாட்டு வியவசாயிகளைக் காட்டிலும் நம் நாட்டு வியவசாயிகளே பரம ஏழைகளாகவும்

கட்டணிழவாற் பெரிதும் துன்புறுகின்றவர்களாக வும் விளங்குகின்றனர். ஆயினும், அவர்கள் குறையைப் போக்குமாறு அரசாங்கத்தார் இன்னும் எவ்விதத் தீவிர முயற்சியையும் எடுத்துக் கொள்ள முன்வரவில்லை. வட இந்தியாவில் பவநகர் (Bhavnagar) என்னப்பட்ட ஒரு சிறுநாட்டை ஆண்டுவரும் சிற்றரசர் ஒருவர் மட்டுமே தனது குடிகளின் கடன்களை அறவே ஒழித்து, அழியாப் புகழைப் பெற்றிருக்கிறார். அவ்வரசர், கடன் தீர்க்கும் கழகம்' (Debt Liquidation Committee) என்ற ஒன்றை நிறுவி, அக்கழகத்தார்முன்பு கடன்கொடுத்தவர்களும் கடன் வாங்கியவர்களும் சமரஸமாகக் கடன்தொகையைக் குறைத்து முடிப்புக்கட்டுமாறு சட்டமியற்றி, இவ்வாறு முடிப்புக்கட்டிய ஒவ்வொரு வியவசாயியின் கடன்தொகையையும் அவ்வரசரே சாவகாரிகளுக்குக் கொடுத்துத் தீர்த்துப் பின்னர் குடிகளிடமிருந்து அத்தொகையைச் சிறிது சிறிதாக நிலவரியுடன் திரும்பப் பெற்றுவருகிறார்.

### மேத்தா என்பவரின் ஆலோசனை.

7. இந்தியா முழுவதிலும் இத்தகைய முறை கையாளப்படவேண்டும் எனப் பம்பாய் நகரப் பெரியார் ஜாம்னதாஸ் மேத்தா கூறுகிறார். சாவகாரிகளுடைய கடன்களை அரசாங்கத்தாரே

ஏற்றுக்கொண்டு, நூற்றுக்கு நான்குவீதம் (4%) வட்டிகொண்ட அரசாங்கக் கடன்பத்திரங்களை (bonds) அவர்களுக்கு அளித்து, வியவசாயிகளிட மிருந்து அக்கடன்களையும் அவற்றிற்குரிய வட்டியையும் நூற்றுக்கு ஐந்து விகிதம் நிலவரியுடன் பெற்றுவரவேண்டும் என்பது அவரது கோட்பாடு. ஒரு பெருந்தேசமுழுவதிலும் இத்திட்டத்தைக் கைக்கொள்ளமுடியுமோ எனச் சிலர் ஐயுறுகின்றனர். வேறு சிலர், வியவசாயிகளிற் பெரும்பாலார் கடனைத் திருப்பிச்செலுத்தமுடியாத நிலைமையிலிருப்பதால் அவர்களது கடன் பொறுப்பை அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டாற் பெருநஷ்டம் விளையும் என்பர். மிகச் சுலபமாகத் தோன்றும் இம்முறையில் மேற்காட்டியன போன்ற இடர்ப்பாடுகள் பல நிரம்பியிருத்தலால் இவ்வாலோசனை நடைமுறையில் வரத்தகாதது என்பது பலருடைய முடிபு.

### பஞ்சாப் மாகாணச் சட்டம்.

8. ஆயினும், நமது தேச வியவசாயிகளின் கடன்சுமையைக் குறைக்க அரசாங்கத்தார் சிற்சில முறைகளைக் கையாண்டுவருகிறார்கள். சில மாகாணங்களில் நிலவரியின் ஒருபகுதி ஒத்திப் போடப்பட்டுள்ளது; அன்றிச் சில மாகாணங்களில் அது குறைக்கப்பட்டும் உள்ளது. ஆனல்

பஞ்சாபில்மட்டும் வியவசாயிகளின் கடன்களைத் தீர்க்கப் பெருமுயற்சி ஒன்று செய்யப்பட்டுவருகிறது. இவ்வாண்டில் (1934) அம்மாகாண அரசாங்கத்தார் 'வியவசாயிகளின் கஷ்ட நிவர்த்திச் சட்டம்' (The Agriculturists' Relief Act) என்ற ஒன்றை இயற்றியிருக்கின்றனர். இச்சட்டத்தின்படி கடன் வாங்கியவனுக்கு அதைத் திருப்பிச் செலுத்த நான்குமுதல் இருபது ஆண்டுகள்வரை தவணைகள் கொடுக்கப்படவேண்டுமென்றும் (அதிகாரம் 2, பிரிவு 1-3), ஈடாக வைக்கப்பட்ட நிலத்தைக் கடன்கொடுத்தவன் ஏலத்துக்குக் கொண்டுவந்தால் அந்நிலம் ஈடுவைக்கப்பட்ட காலத்தில் என்ன விலை பெறுமானதாயிருந்ததோ அவ்விலைக்கே அதை அவன் ஏலத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### கடன் சமரசச் சட்டம்.

9. மத்திய மாகாண அரசாங்கத்தாரும் (Central Provinces) இவ்வாண்டில் 'கடன் சமரசச் சட்டம்' (Debt Conciliation Act) என்ற ஒன்றை இயற்றியிருக்கின்றனர். இச்சட்டத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் அல்லது தாலுகாவிலும் 'கடன் சமரசச் சபை' (Debt Conciliation Committee) என்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்சபையார் கடன்கொடுத்தவர்கள், வாங்கியவர்கள் ஆகிய இருதிறத்தாரையும் நேரிற் கூட்டுவித்து, சமரசமாகக் கடன்களைக் குறைத்து, முடிப்புக்கட்டிப் பின்னர் அதைப் பதிவுசெய்து கொடுக்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர் (பிரிவு 3-12). அவ்வாறு முடிப்புக்கட்டிய தொகையைக் கடனாளி செலுத்தத் தவறினால் அது நிலவரியுடன் சேர்த்து அவனிடமிருந்து அரசாங்கத்தாராலே வசூலிக்கப்படும் (பிரிவு 13).

## நில அடமான பாங்கிகள்.

10. ஆனால் வேறு சில முக்கிய மாகாணங்களில் வியவசாயிகளின் கடன்களைத் தீர்க்க நில அடமான பாங்கிகளும் (Land Mortgage Banks) அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டுள்ளன. கிராமச் சங்கங்கள் முன்கடனைத் தீர்ப்பதற்காக அதிகத் தொகையை நீண்டகாலக் கடனாகக் கொடுக்க முடியாதாகையால் அதற்கென்று தனிப்பட்ட நில அடமான பாங்கிகளை நிறுவவேண்டும் என 1926-ம் வருடத்திற் கூடிய கூட்டுறவு இலாக்கா நிர்வாக அதிகாரிகளின் மகாநாட்டில் (Registrars' Conference) தீர்மானிக்கப்பட்டது. 1928-ம் ஆண்டில் கூடிய இம்மகாநாட்டிலும் இத்தீர்மானம் வலியுறுத்தப்பட்டது. இத்தீர்மானத்தையொட்டி இப்பொழுது சென்னை, பம்பாய், பஞ்சாப்,

வங்காளம், அஸாம் மாகாணங்களில் நில அடமான பாங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், பஞ்சாபிலும் சென்னையிலும் நிறுவப்பட்டிருப்பவை குறிப்பிடத்தக்கன.

11. பஞ்சாபில் பன்னிரண்டு நில அடமான பாங்கிகள் உள; மாகாண அரசாங்கத்தார் அவற்றிற்கு $14\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வட்டியின்றிக் கடன்கொடுத்திருக்கின்றனர். மேலும், அவை பொதுஜனங்களிடத்திலிருந்து தம் கடன்பத்திரங்களின் (debentures) ஆதாரத்தின்மேற் பெற்றுள்ள கடனுக்குரிய வட்டிக்கு உத்தரவாதஞ் செய்யவும் (guaranteeing of interest) அரசாங்கத்தார் உடன்பட்டிருக்கின்றனர். சென்னை மாகாணத்தில் மத்திய நில அடமான பாங்கி (Central Land Mortgage Bank) ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அது வெளியிடும் 50 லக்ஷம் ரூபாய்க் கடன் பத்திரங்களுக்குரிய வட்டிக்கு அரசாங்கத்தார் உத்தரவாதஞ்செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். மேலும், கூட்டுறவு இலாக்கா டிப்டி ரிஜிஸ்திரார்கள் இருவரையும், சப்-டிப்டி ரிஜிஸ்திரார்கள் பதின்மரையும் இப் பாங்கிகளுக்கு உதவிசெய்யுமாறும் அரசாங்கத்தார் நியமித்திருக்கின்றனர்.

12. அரசாங்கத்தார் ஆதரவில் இப்பெருஞ் செலவுடன் ஆரம்பிக்கப்படும் நில அடமான பாங்கிகள் கடன்வழங்குதலையே தம் முடிவான சேவையாகவும் நோக்கமாகவும் கருதி வேலை செய்துவருமாயின் கிராமச்சங்கங்களுக்கு விளைந்த கேடுகளே இவற்றிற்கும் விளையும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. குறைந்த வட்டியிற் கடனை வழங்குவது எளிது; ஆனால் அதன்மூலம் கடன் வாங்கியவனின் வருவாயைப் பெருக்கி அவன் ஈட்டும் பொருளைக்கொண்டு அவன் அக்கடனைத் திருப்பிச்செலுத்துமாறு செய்வதே அரிது. ஆதலால் கடன் கொடுப்பதற்குமட்டும் ஏற்படுத்தப் பட்டுள்ள இப்பாங்கிகளால் வியவசாயிகளின் கடன்சுமைகள் நீங்குமென எண்ணுவது முடியாத வீண் ஆசையாம்.

### ஆசிரியர் தாமஸ் அவர்களின் ஆலோசனை.

13. சென்னைச் சருவகலாசாலைப் பொருளாதார ஆசிரியராக விளங்கும் திரு. பி. ஜே. தாமஸ் அவர்கள் தாம் வெளியிட்டுள்ள "கிராமக் கடன்கள்" (Rural Indebtedness) என்ற நூலில் வியவசாயிகளின் கடன்களைத் தீர்ப்பதற்குப் பின்வரும் ஆலோசனைகளைக் கூறுகின்றார். (1) ஒவ்வொரு மாகாணத்திலும் கடன் சமரசக் கழகங்களை அமைத்துக் கடன் தொகைகளைக் குறைக்க

வேண்டும். (2) அவ்வாறு குறைத்து முடிப்புக் கட்டிய தொகையை நில அடமான பாங்கிகள் மூலமாகக் கொடுத்துத் தீர்க்கவேண்டும். (3) நில அடமான பாங்கிகளிற் பங்குகள் எடுத்து அங்கத்தினர்களாய்ச் சேரும் வியவசாயிகள் தங்கள் நிலங்களைப் பிறருக்கு அடமானம் வைக்க இயலாதபடி பல நிபந்தனைகளும் இயற்றப்படவேண்டும். (4) இப்பாங்கிகள் மூலமாக அவர்கள் பெறும் வட்டி குறைவாகவும் செலுத்தவேண்டிய தவணைகள் இருபதுமுதல் முப்பதுவருடம்வரையும் இருக்கவேண்டும். (5) இறுதியாக, சிக்கன உணர்ச்சியைப் பரப்புதல், சுபாசுப கருமங்களிற் செலவிடப்படும் செலவுகளைக் குறைத்தல், பயிர்த்தொழிலில் ஊதியந்தரத்தக்கதான சாதனங்களை அமைத்துக்கொடுத்தல், ஆகிய இவற்றையும் அரசாங்கத்தார் விரைவில் இயற்றி, வியவசாயிகள் இனிக் கடன்வாய்ப்படாதபடி பார்க்கவேண்டும். இவ்வாற்றால் வியவசாயிகளின் கடன்களை விரைவில் நீக்கிவிடலாம் என்பது இவ்வாசிரியரின் முடிபு.

# 13

## புதிய பயிர்த்தொழில் முறைகள்.

## (Improved Methods of Agriculture.)

---

முந்தின கட்டுரைகளில் நமது தேசப் பயிர்த்தொழிலின் மிகத் தாழ்ந்த நிலையையும் அதற்கு, (1) வியவசாயிகள் கடன், (2) துண்டுதுணுக்கான புல உரிமை, (3) பெரும்பயனற்ற பல ஆடு மாடுகள் உடைமை ஆகிய இக்குறைகள் எவ்விதத்தில் ஒத்து உதவிபுரிகின்றன என்பதையும் விளக்கியுள்ளோம். இப்பெருங் குறைகளே நமது பயிர்த்தொழில் வளர்ச்சிக்கு என்றும் இடையூறாக நிற்பன. ஆகையால் முதற்கண் இவற்றைக் களைவது மிக அவசியம். ஆயினும், மேனாடுகளிற் கையாளப்படும் புதிய பயிர்த்தொழில் முறைகளை நமது வியவசாயிகள் கைக்கொண்டால் நம் பயிர்த்தொழில் மேம்பாடெய்தும் என ஒரு சிலர் கூறுகின்றனர். ஆதலின், இக்கட்டுரையில் இதுபற்றிச் சிறிது கூறுவாம்.

### நமது பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள புதிய மாறுதல்கள்.

2. ஆங்கில ஆட்சி நிலையாக நிறுவப்படு முன் இத்தேசத்தில் மக்கள்தொகை குறைவாயிருந்ததனுல், பயிர்த்தொழிலாளர் சிலராகவும், கடன்பாரம் அற்றவர்களாகவும், போதிய அளவு நிலமுடையராகவும் விளங்கினர். மேலும், தற்காலத்தில் இருப்பதுபோல விரைவான போக்குவரவு சாதனங்கள் அப்பொழுது இன்மையால் ஒவ்வொரு கிராமவாசிகளும் தத்தமக்குவேண்டும் எல்லா விளைபொருள்களையும் செய்பொருள்களையும் தாமே ஆக்கிக்கொண்டு, பிறவிடங்களைச் சாராது, தம் வாழ்க்கையை நடத்திவந்தனர். ஆனுல் ஆங்கில ஆட்சிக்குட்பட்டபின் நமது தேசப் பொருளாதாரநிலையிற் பல பெரும் மாறுதல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் முக்கியமானவை மக்கட்பெருக்கு மிகுதலும், நம் பண்டைக் கைத்தொழில்கள் அழிந்துபட்டமையும் ஆம். மக்கட்பெருக்கு மிகுந்துவருவதனுல் நாம் நமக்குவேண்டும் உணவுப்பொருள்களை அதிக அளவில் விளைவிக்கவும், கைத்தொழில்கள் இறந்துபட்டமையால் நம் தேசவாசிகளில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் பயிர்த்தொழிலையே மேற்கொள்ளவும், பிறநாட்டாரது இயந்திரத்தொழில்

களுக்கு அடிப்படையான மூலப்பொருள்களை விளைவிக்கவும் நேரிட்டிருக்கிறது. ஆதலின் நம் பயிர்த்தொழில் மிகத்திறமையுடன் நடக்கவேண்டியது மிக அவசியமெனப் பெறப்படும்.

அரசாங்கத்தார் அமைத்துள்ள ஸ்தாபனங்கள்.

3. இக்காரணங்களைக்கொண்டே இந்திய அரசாங்கத்தார் பயிர்த்தொழில் அபிவிருத்திக் கெனப் பல ஆங்கிலேய நிர்வாக அதிகாரிகளையும், நில ரசாயன சாஸ்திரிகளையும் (soil chemists) 1881-ம் வருடத்தில் நியமித்தனர். இந்நிபுணர்கள் தம் தேசத்துப் புதிய பயிர்த்தொழில் இயந்திரக்கருவிகளை உபயோகிப்பதைக் கற்பிப்பதிலும், பிறநாட்டுப் பயிர்வகைகளைப் பயிர் இடுவதிலும் (introduction of exotic varieties), பலவாண்டுகளாகப் பயன் கைவரப்பெருது வீணே உழைத்தனர். பின்னர், 1905-ம் வருடத்தில் இராஜப்பிரதிநிதியான கர்ஸான் பிரபு, பூசா (Pusa) என்னுமிடத்தில் மாதிரிப்பண்ணை, மாட்டுப் பண்ணை (cattle farm), பொருட்காட்சிசாலை, நூல் நிலயம் முதலியன அடங்கிய ஓர் அரிய பயிர்த் தொழில் ஆராய்ச்சிக் கல்லூரியை நிறுவினர்.*

* "Its laboratories, museums, libraries and lecture rooms challenge comparison with those of any similar institution in eastern or western countries" *Report of the Royal Commission on Agriculture*, P. 31.).

இக்கல்லூரி ஆசிரியர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் ஐந்து ஆங்கில நிபுணர்களும் நியமிக்கப்பட்டனர். அத்துடன் ஒவ்வொரு மாகாணத்திலும் பயிர்த்தொழில் ஆராய்ச்சிக்காகவும், பயிர்த்தொழிற் கல்விக்காகவும், பல கல்லூரிகளும் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வித ஆராய்ச்சிகளாற் கண்டறிந்த புதிய முறைகளைப் பரவச் செய்ய மாதிரிப் பண்ணைகளும் (model farms) ஆங்காங்கே அமைக்கப்பட்டன. மேலும், ஒவ்வொரு மாகாணத்திலும் இத்தகைய முயற்சிகளைத் தூண்டவும், நிர்வகிக்கவும், தனிப்பட்ட பயிர்த்தொழில் இலாக்காக்களும் நிர்வாக அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.

4. இஃதன்றி, நம் பயிர்த்தொழிலிலுள்ள குறைபாடுகளை ஆராய்ந்து நிவாரணங்கூற 1926-ம் வருடத்தில் நியமிக்கப்பட்ட இந்திய வியவசாயக் கமிஷன் (Royal Commission on Agriculture) என்பவர்களின் முடிபையொட்டி இப்பொழுது டில்லியில் இந்திய வியவசாய ஆராய்ச்சிக்கழகம் (Imperial Council of Agricultural Research) என்ற ஒரு ஸ்தாபனமும் நிறுவப்பட்டுள்ளது. மாகாண அரசாங்கங்கள், கல்லூரிகள், வர்த்தக சங்கங்கள், சட்டசபை முதலான ஸ்தாபனங்களிலிருந்து அனுப்பப்பெற்ற 43 பிரதி

நிதிகள் அடங்கிய இப்பெருங் கழகம் இந்தியா முழுவதிலும் நடத்தப்படும் பயிர்த்தொழில், அதனையொட்டிய ஆராய்ச்சி, கல்வி, முதலிய பல இயக்கங்களையும் தூண்டல், அபிவிருத்திசெய்யல், ஒருவழிப்படுத்தல் (co-ordination) ஆகிய இச் சேவைகளை நல்லமுறையில் ஆற்றிவருகின்றது.

### புதிய முறைகளின் அவசியமும் பயனும்.

5. கணக்கற்ற பணத்தைச் செலவிட்டுப் பலவாண்டுகளாய் அரசாங்கத்தார் ஆராய்ந்து வெளியிட்ட இப்புதிய முறைகள் நம் பயிர்த் தொழிலாளருக்குப் பயன் விளைவிக்குமா என்னும் கேள்விதான் முதலில் எழுகின்றது. சிதறிச் சிதைவுற்ற சிறுபுலங்களும், பெரும்பயனற்ற ஆடு மாடுகளும், அளவுக்கு மிஞ்சிய கடன் சுமையையு முடைய நம் ஏழைக் குடிகளை இப்புதிய முறை களைக் கையாளச் சொல்லி இடர்ப்படுத்துவது முடவனைக் கொம்புத்தேனை எடுக்கச் சொல்வதை ஒக்கும் என்பர் ஒரு சாரார். பண்டைக்காலந் தொட்டே அநுபவ முதிர்ச்சியால் நம் பயிர்த் தொழிலாளர் எல்லா முறைகளையும் கண்டறிந் துள்ளனராதலால் மேனாட்டார்முறைகள் நம் நாட் டினருக்கு வேண்டா வென்பர் வேறொரு சாரார். இவ்விரு சாரார் நியாயங்களிலும் சிறிது உண்மை யடங்கியுள்ளது. நமது பயிர்த்தொழிலாளர்

இப்பொழுதிருக்கும் தாழ்ந்த நிலையில் மேனாட்டாருடைய முறைகளைக் கைக்கொள்வதால்மட்டும் நம் குறைகள் நீங்கா. ஆயினும் அம்முறைகள் அறவே அவசியமின்று எனவாவது, அவையனைத்தும் பயன் அற்றவை எனவாவது நாம் அவற்றைப் புறக்கணிக்கக்கூடாது. இப்புதிய முறைகளிற் சில அவசியம் கையாளவேண்டுவனவாகவும் பயன்தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. அவற்றுட் சிலவற்றைமட்டும் கீழே குறிப்பிடுகிறோம்.

எருவிடுதல்.

6. 'ஏரினும் நன்றாம் எருவிடுதல்' என்ற சிறந்தவுண்மையை நமது பயிர்த்தொழிலாளர் அனைவரும் அறிவர். அறிந்தும், அவருட் பெரும்பாலார் தம் ஆடுமாடுகளின் சாணத்தையும் சிறுநீரையும் வறிதே அழியவிடுகின்றனர்; அன்றிச் சாணத்தை எருவராட்டியாக்கி நெருப்பெரிக்கின்றனர்.* இக்குறையைப் போக்கிப் பயிர்த்

* நெருப்பு எரிக்கத்தக்க விறகு குறைந்த விலையிற் கிடைக்காவிட்டால் மக்கள் எக்காலத்தும் இப்படியே செய்து வருவர். ஆறுகளிலிருந்து பெருங் கால்வாய்களை வெட்டி, படவுகளில் நிலக்கரியைக் கொணர்ந்து அதைக் குறைந்த விலைக்கு விற்றபிறகே ஆங்கிலேய வியவசாயிகளும் மாட்டுச் சாணத்தை எருவராட்டியாக்கி நெருப்பெரிக்கும் வழக்கத்தை ஒழித்தனர் என ஆசிரியர் கிளாப்ஹாம் எடுத்துக்காட்டுவது (*Economic History of Modern Britain.*) இங்கு உய்த்துணரற்பாலது.

தொழில் இலாக்கா அதிகாரிகள் கூறும் முறைப்படி எருக்குழிகளை (manure pits) அமைத்தல் பெரும்பயனை அளிக்கும். அன்றியும், சீனரும் ஜப்பானியரும் செய்யுமாறு நம் பயிர்த்தொழிலாளர் மக்கள் மலத்தையும் சிறந்த எருவாக்கலாம்.† மேலும், பசுந்தாள் (green manure) பிண்ணாக்கு, எலும்புத்தூள் (bone meal), முதலிய இயற்கை எருவகைகளையும், கனிச்சத்து, உப்புச்சத்து முதலியன அடங்கிய புதிய செயற்கை எருவகைகளையும் (artificial fertilisers) நம் பயிர்த்தொழிலாளர் உபயோகிக்கலாம். இவ்வெருவகைகள் பலவிடங்களில் உபயோகிக்கப்பட்டும் வருகின்றன.

### புதிய பயிர் வகைகளும் வித்துக்களும்.

7. அரசாங்கத்தாருடைய பயிர்த்தொழில் இலாக்காக்களாற் செய்யப்பட்டுவரும் வேறொரு அரிய சேவை புதிய பயிர்வகைகளைப் பரப்புதலாம். இச்சேவையால் தேசத்துக்குப் பெரும் பயன் விளைந்துள்ளது. விரைவில் அதிகப்பலனைத் தரத்தக்க வித்துக்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பயிர்த்தொழிலாளருக்குக் கொடுத்துவரப்

---

† 'Prejudice against the use of night soil has deterred the cultivator in India from utilising to the best advantage a valuable source of combined nitrogen' (*Report of the Royal Commission on Agriculture*, P.83).

பெரும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்புக்கும் இப்புதிய வித்துக்கள் பயிரிடப்படும் நிலப்பரப்புக்கும் உள்ள சம்பந்தம் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

| முக்கிய பயிர் வகைகள். | புதிய வித்துக்கள் பயிரிடப்படும் நிலப்பரப்பு. (Area under improved varieties.) | மொத்த நிலப்பரப்பின் தசாம்சம். (Percentage to estimated total area of crop.) |
|---|---|---|
| பருத்தி | 3587,000 | 22 ... |
| கோதுமை | 2894,000 | 11 |
| நெல் | 882,000 | 1 |
| சணல் | 505,000 | 14 |
| நிலக்கடலை | 380,000 | 10 |
| கரும்பு | 208,000 | 7 |

### பயிர்த்தொழிலில் இயந்திரக்கருவிகளை உபயோகித்தல்.

8. இனி, பயிர்த்தொழில் வேலைக்குரிய இயந்திரக்கருவிகளை உபயோகிப்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள வியவசாயிகள் நீரிறைத்தல், உழுதல், அறுவடைசெய்தல், போரடித்தல் முதலிய பல வேலைகளுக்கும் இயந்திரங்களையே உபயோகிக்கின்றனர். ஆனால் துண்டுதுணுக்குகளாய்ச்சிதறிக்கிடக்கும் சிறுபுலங்களையுடைய நம்

வியவசாயிகளுக்கு இவ்வியந்திரக் கருவிகள் பெரிதும் பயன்படா. மேலும், அவற்றை வாங்குவதற்கு அவர்களிடத்திற் பொருளும் கிடையாது; அவ்வியந்திரங்கள்பழுதுபட்டால் அவற்றை அவர்களால் எளிதிற் செப்பனிடவும் இயலாது. அன்றியும், மக்களுக்கு வேலை கிடைக்கச்செய்வதே நம் கிராம வாழ்க்கையிற் பெருங்கடமையாயிருக்க அவர்களுக்கு இப்பொழுதுள்ள வேலையையும் போக்கி விடத்தக்க புதியஇயந்திரக்கருவிகளை உபயோகிப்பது உய்த்துணர்ந்து துணியவேண்டிய செயலுள் ஒன்றாகும்.

9. எனினும், பழங்காலத்திலிருந்தே நம் பயிர்த்தொழிலாளர் உபயோகித்துவரும் சிறிய கலப்பை, சால், முதலிய கருவிகளைக்காட்டிலும் மேனாட்டாருடைய இயந்திரக்கருவிகள் சிறந்தவைகளும் வியவசாயச் செலவுகளைக் குறைக்கத்தக்கவ்வைகளுமாக இருக்கின்றன.* ஆதலில் பெருங்

* புதிய கலப்பைகள் (improved ploughs) போன்ற சிறிய வியவசாயக் கருவிகள் குறைந்த விலைக்குச் செய்யப்பட்டு விற்கப்பட்டால் நம் ஏழைப் பயிர்த்தொழிலாளர்களிற் பலர் அவற்றை வாங்கியுபயோகிக்கக்கூடும். ஆதலால் பயிர்த்தொழில் இலாக்காவிலுள்ள இயந்திரநிபுணர் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து குறைந்த விலைக்கு விற்கக்கூடிய கருவிகளைக் கண்டு பிடிக்கவேண்டும் என இந்திய வியவசாயக் கமிஷன் அறிக்கை வெளியிடுகின்றது (*Report of the Royal Commission on Agriculture in India*, P. 108-113).

காடாக அல்லது கரடுமுரடாக அமைந்துள்ள நிலங்களைத் திருத்தவும், மிராசுதார்களின் பெரிய புலங்களுக்கு நீரிறைக்கவும், அறுவடை செய்யவும், போரடிக்கவும், சர்க்கரை செய்தல்போன்ற சிறு கைத்தொழில்வேலைகளை ஆற்றுவதற்கும், இக் கருவிகளை உபயோகிக்கலாம். பலவிடங்களில் இவை இவ்வாறு உபயோகிக்கப்பட்டும் வருகின்றன.

## புதிய பயிர்த்தொழில் முறைகள்.

10. நமதுதேசக் குடியானவர்களிற் பலர் மிகத்திறமையுடன் தம் பயிர்தொழிலை நடத்தி வருகின்றார்களாயினும் பயிர்த்தொழில் இலாக்கா ஆராய்ச்சியாளர்களாற் கண்டுபிடிக்கப்பட்ட சில புதியமுறைகளையும் அவர்கள் கைக்கொள்ளல் வேண்டும். ஏற்ற காலத்திலே பயிரிடல், ஒற்றை நாற்றாக நட்டல், பயிர்வகைகளுக்கேற்படும்நோய்களையும் பூச்சிகளையுந் தடுத்தல் ஆகிய இவை போன்ற விஷயங்களில் அரசாங்கத்தார் காட்டும் முறைகளை நம் குடியானவர்கள் கைக்கொள்ள வேண்டும்.

## முடிவுரை.

11. நாம் இதுகாறும் கூறியவற்றால் நமது தேசப் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கத்தாரால் மிகப் பெருஞ் செலவில் அமைக்கப்பட்

டுள்ள சாதனங்களுக்குக் குறைவில்லை என்பது விளங்கும். பயிர்த்தொழில் இலாக்கா அதிகாரிகளும், நிபுணர்களும், ஆராய்ச்சிக் கழகங்களும், பண்ணைகளும் பெருக்கிவைத்திருக்கிற புதிய முறைகளும் அளவிறந்தன. சுவர் வைத்து முடிந்தாயிற்று; சித்திரந்தான் தீட்டப்பெறவில்லை!

12. புதிய சாதனங்களும் புதிய முறைகளும் எதிர்பார்த்த அளவிற் பயன் அளிக்காமைக்குக் காரணம் வியவசாயிகளின் கடன் சுமை, துண்டு துணுக்கான புல உரிமை, பெரும்பயனற்ற ஆடு மாடுகள் உடைமை, கல்வியின்மை என நாம் முற்கூறிய குறைகளே யாம். ஆதலின், இப்பொழுதுள்ளநிலையில் புதிய வியவசாய முறைகள் மிகச் சிறுகிய பயனை அளிக்குமேயன்றி, நம் பயிர்த்தொழில்நிலையை உயர்த்திவிடப் போதிய வலியுடையதாகா. ஆதலின், அரசாங்கத்தார் புதிய முறைகளை மேலும் மேலும் ஆராய்ந்து, அவற்றைப் பெருக்கியும் பரப்பியும் வருதலையே தமது முழுநோக்கமாகக் கருதாது, கிராமப் பொருளாதார நிலையிலுள்ள அடிப்படையான குறைகளை நீக்க முதற்கண் முயலவேண்டும்.

# 14

## விளைபொருள்களை விற்கும் முறைகள்.
## (Marketing of Agricultural Produce.)

---

நம் பயிர்த்தொழிலாளர்கள் இடத்து தம் விளைபொருள்களை விற்கும் முறைகளிற் பெருங் குறைகள் மலிந்துகிடப்பனவாக இந்திய வியவசாயக் கமிஷன் அங்கத்தினர்கள் முதன்முதலாக எடுத்துக்காட்டினர். அதன்பின்னர் வெளியிடப் பட்ட ஒவ்வொரு அரசாங்க அறிக்கையிலும் இக் குறைகள் உண்மை வலியுறுத்தப்பட்டன. ஆதலின் ஒவ்வொரு மாகாணத்திலும் இக்குறைகளை நீக்குமாறு அரசாங்கத்தார் தீவிரமாக முயன்று வருகின்றனர். ஆகையால் நம் வியவசாயிகள் தம் விளைபொருள்களை விற்கும் முறைகளைப்பற்றியும் அவற்றைக் களையும் உபாயங்களைப்பற்றியும் இக்கட்டுரையிற் கூறவேண்டுவது அவசியம்.

### போக்கு வரவு சாதனங்கள்.

2. வியவசாயிகள் தங்கள் பொருள்களை நல்ல விலைக்கு விற்கவேண்டுமானல் போக்குவரவு சாத

னங்கள் ஏற்ற அளவில் அமைக்கப்படல்வேண்டும் அன்றோ? இவ்விஷயத்தில் நமது தேசத்தில் ஒரு குறைவும் இல்லை. முதலாவது அரசாங்கக் கட்டிட இலாக்காவின் (Public Works Department) ஆதரவிலும், பின்னர், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களின் ஆதரவிலும், பல நல்ல பாட்டை சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மிகச் சில சிறு கிராமங்களுக்குமட்டுமே இத்தகைய வசதிகள் இல்லை. அவற்றை விரைவில் அமைத்துக் கொடுக்குமாறு அரசாங்கத்தார் முயன்றும் வருகின்றனர். மேலும், சுமார் 50,000 மைல் நீளமுள்ள இருப்புப்பாதைகளும் நிறுவப்பட்டுள்ளன. தபால், தந்தி ஸ்தாபனங்களும் குறைவின்றி அமைக்கப்பட்டுள்ளன; கட்டணங்கள்தான் அதிகம். மோட்டார்கார்களும், 'லாரி'களும் பல இடங்களிலும் செல்ல ஆரம்பித்திருக்கின்றன. எனவே போக்குவரவு சாதனங்களிற் குறைகள் இல.

### விற்கும் முறைகளிலுள்ள குறைகள்.

3. ஆயினும், விளைபொருள்களை விற்கும் முறைகளிலேயே சில குறைகள் காணக்கிடக்கின்றன. அவை (1) விளைபொருள்களை மகசூல் அறுவடையானவுடனே விற்றுவிடுதல், (2) விற்பதிலும் வாங்குவதிலும் அடங்கிய ஏமாற்றங்கள், (3) பொருள்கள் பலவர்த்தகர்களின் கைகடந்து சேர்தல்,

என்பனவாம். இக்குறைகளைச் சற்று விரிவாய் விளக்கிப் பின் அவற்றை நீக்கும் வழிகளை எடுத்துரைப்பாம்.

### மகசூலை உடனே விற்றல்.

4. நமது வியவசாயிகளிற் பெரும்பாலார் மிகுதியான கடனிலாழ்ந்திருப்பதால் மகசூலை அறுத்த உடன் விற்பதன்றியும் அவர்களது விளைப்பயிர்கள் நிலத்திற் கதிராக நிற்கும்போதும் விற்றுவிடுகின்றனர். விலைகள் ஏறும்வரை காத்திருந்து தம் விளைபொருள்களை அவர்கள் விற்க இயலாதிருக்கின்றனர். விற்பனை முறையிற் காணப்படும் பெருங்குறை இதுவேயாம். இக்குறையைக் களையும் வழி வியவசாயிகளின் கடன் சுமையை ஒழிப்பதும், அவர்களிடம் பணப் பெருக்கம் உண்டாகும்படி செய்வதுமாம். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மகசூல் அடமானத்தின்மேல் கடன்கொடுத்துதவுதலும் வேண்டும்; ஆயினும், நாம் முற்கூறியபடி இவ்வாறு கடன் கொடுத்தலால்மட்டும் இக்குறை நீங்கிவிடாது.

### விற்பதிலும் வாங்குவதிலும் அடங்கிய ஏமாற்றங்கள்.

5. வியவசாயிகள் தங்கள் பொருள்களை விற்குங்கால் மண்ணைக்கலத்தலும், அல்லது பருத்தி முதலிய பொருள்களை நீரில் ஊறவைத்தலும்,

வெவ்வேறான படிக்கல்கள், அளவுகருவிகள் முதலியவற்றை உபயோகித்தலும் போன்ற ஏமாற்றங்களையும், நாம் விரிவாக விளக்க வேண்டியதில்லை. இவற்றைத் தடுப்பதற்தாகச்சில சட்டங்களும் இயற்றப்பெற்றுள்ளன. ஆயினும் இவ்வாறான குறைகள் வர்த்தகத்துறையில் எல்லாத் தேசங்களிலும் எக்காலத்திலும் நிகழ்வனவேயாம். இவற்றை முற்றும் தடுத்தல் அரிது.

மண்டிகளும் மார்க்கட்டுகளும்.

6. ஆயினும், நிலக்கடலை, புகையிலை, பருத்தி சணல், கோதுமை முதலிய பொருள்களை வாங்கவும் விற்கவும் அமைக்கப்பட்டுள்ள பெரிய மண்டிகளிலும் 'மார்க்கட்டு'களிலும் (markets) சில ஏமாற்றங்கள் நிகழ்கின்றனவென வியவசாயக்கமிஷன் அறிக்கை வெளியிடுகின்றது. அவ்விடங்களில் சரியான தராசும், படிக்கல்களும் வழங்கப்படவில்லையென்றும், வர்த்தகர்கள் தரகர்களாக (brokers) நிற்பதனால், விற்போருடைய பொருள்களுக்கு உயர்வான விலை கிடைப்பதில்லையென்றும், விற்கவரும் வியவசாயிகளுக்கு அவ்வப்போதுள்ள விலை நடப்பு விளம்பரஞ்செய்யப்படுவதில்லையென்றும், * துணிக்குள் கையை வைத்துக்

* இக் குறைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து விவரித்தால் இடம் போதாது. சிற்சிலவிடங்களில் இத்தகைய

கொண்டு இரகசியமாக விலைமுடிவு செய்யப்பட்டு விடுவதால் (secret bids) † விற்போர் ஏமாற்றப்படு கின்றனர் என்றும், இங்ஙனமாக விற்றுக்கொடுப் பதற்குரிய தரகு (commission) மிக அதிகமாயிருக் கிறது § என்றும், பொருள்களை வாங்கியபின்னும்,

---

குறைகள் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் வர்த்தகர்களின் தொகை மிகுந்து, அவர்களின் போட்டி அதிகப்பட்டதனாலும், வியவ சாயிகளிற் பெரும்பாலாருக்கு வர்த்தகருடைய தந்திரங்கள், விலைநடப்பு முதலியவற்றிற் போதிய அறிவு ஏற்பட்டிருத்தலா லும் மேற்கூறிய குறைகள் குறைந்துவருகின்றன என்க.

† இரகசியமாய் விலைபேசும் முறை வாங்குவோருக்கல்ல, விற்போருக்கே அநுகூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்னும் உண்மையை யான் எழுதி வெளியிட்ட ஓர் ஆராய்ச்சிக் கட் டுரையில் விளக்கியுள்ளேன் ('Underneath the Cloth,' *The Indian Journal of Economics*, July 1933).

§ சில மார்க்கட்டுகளில் தரகு உயர்ந்திருப்பது உண்மை; ஆனால் ஒவ்வோரிடத்திலும் உள்ள சிறப்பு இயல்புகளை ஆராய்ந் தறியுமுன் இதைப் பொதுவான குறையென மிகைப் படுத்திக் காட்டக்கூடாது. மேலும், மண்டி வர்த்தகர்கள் வியவசாயிகளுக்கு முன்பணம் சடனைக் (advances) கொடுத்து வழங்குகின்றனர்; விலைநடப்பை (market news) அறிவித்தும் வருகின்றனர்; சரக்குகளை இறக்கிவைக்கக் கிடங்குகளும் (godowns, warehouses) அமைத்துக்கொடுக்கின்றனர். இத்தகைய பலதிறப்பட்ட சேவையை அவர்கள் ஆற்றி வருவதனால் அவர்கள் தரகு சற்று உயர்வாகக் காணப்படுகிறது என்க. வியவசாயியின்பொருட்டு இச்சேவையைச்செய்ய வேறு ஸ்தாபனங்கள் இப்பொழுது கிடையா,

வர்த்தகர்கள், அவை தரம் குறைவுள்ளன என்பனபோன்ற காரணங்களைக்கூறி முடிவுசெய்யப்பட்ட விலையையும் குறைக்கின்றனர் என்றும் அவ்வறிக்கையிற் காட்டப்பட்டுள்ளது.

7. இக்குறைகளை நீக்க வியவசாயக் கமிஷன் அறிக்கையில் அடியிற்கண்ட ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. பீரார் மாகாணத்திலுள்ளவாறு அரசாங்க ஆட்சிக்குட்பட்ட மார்க்கட்டுகளை (Regulated Markets) அமைக்கவேண்டும்; இத்தகைய மார்க்கட்டுகளில் அநுமதிபெற்ற தரகர்களே (licensed brokers) இடங்கொடுக்கப்படவேண்டும்; இத்தரகர்கள் சொந்தத்தில் வாங்கும் வர்த்தகர்களாக இருக்கக்கூடாது. இத்தகைய மார்க்கட்டுகளில் அவ்வப்போதுள்ள விலை நடப்பு விளம்பரஞ் செய்யப்படவேண்டும். இக்காரியங்களை மேற்பார்க்கவும், விற்பதிலும் வாங்குவதிலும் ஏற்படக்கூடிய விவாதங்களைத் தீர்க்கவும் வியவசாயிகள், வர்த்தகர்கள், அரசாங்கத்தார் என்ற இம்மூன்று பகுதியினர்களின் பிரதிநிதிகளடங்கிய நிர்வாகசபை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்பனவாம்.

8. இவ்வாலோசனைகளைத் தழுவிப் பம்பாய் மாகாணத்திலும் சென்னை மாகாணத்திலும் இப்பொழுது சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன.

இச்சட்டங்களால் ஒருக்கால் தருமத்துக்காக அல்லது சமுதாய நன்மைக்காக வர்த்தகர்கள் இப்பொழுது பெற்றுவரும் மகமைத் தொகை, தரகுதொகை, ஆகிய இவற்றில் ஒரு பகுதி குறையலாமேயன்றி வேறு ஒரு பெரும் பயனும் விளைந்துவிட முடியாது. இது நிற்க.

பொருள்கள் பலர் கைகடந்து செல்லுதல்.

9. ஒரு வியவசாயி விற்கும் சணலானது முதலில் உள்ளூரிலுள்ள சிறுவர்த்தகன், பின்னர் அவ்வூரிலேயேயுள்ள பெரிய வர்த்தகன், அதன் பின்னர் தரகுமண்டி வர்த்தகன் (commission merchant), மொத்தவர்த்தகன், ஏற்றுமதி வர்த்தகன், ஆக ஒருவர்பின்ஒருவராய் மிகப் பலருடைய கைகடந்த பிறகே இறுதியிற் சணலாலைக்குச் செல்கின்றது. இதனால், வியவசாயி முதலிற்சணலை விற்கும் விலைக்கும் சணலுக்கு இறுதியில் அளிக்கப்படும் விலைக்கும் அதிக வித்தியாசங் காணப்படுகிறது.

10. வியவசாயி முதலில் உள்ளூர் வர்த்தகனிடம் ஒரு மணங்கு சணலை விற்றவிலை இரண்டு ரூபாயானால் அதற்கு ஆலையில் இறுதியாகக் கொடுக்கப்படும் விலை இரண்டரை ரூபாயாகிறது எனக் கணக்கிட்டிருக்கின்றனர். எஞ்சி நிற்கும் எட்டணுவும் இடைப்பட்ட வர்த்தகர்களின் (mid-

dlemen) இலாபமாகும். இந்நியாயத்தை ஏனை விளைபொருள்களுக்கும் பொருத்திக்கொள்ளலாம். ஆதலால் வியவசாயிகளே இடைப்பட்ட வர்த்தகர் உதவியின்றித் தம் பொருள்களைக் கூட்டாகப் பெரிய வர்த்தகர்களுக்கேனும் ஆலைகளுக்கேனும் விற்கவேண்டும் எனப் பலர் ஆலோசனை கூறுகின்றனர். ஆயினும், இவ்வாலோசனை அநுபவ சாத்தியமாகாததுள் ஒன்றாம்.

### கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்.

**11.** ஆனால், இப்பொழுது செய்யப்படும் முயற்சி கூட்டுறவு விற்பனைச்சங்கங்களை* (co-operative sale societies) நிறுவி அவற்றின் மூலமாக வியவசாயிகள் தம் விளைபொருள்களை விற்கச்செய்வதேயாம். இச்சங்கங்கள், விளைபொருள்களின் ஆதரவின்மேல் நூற்றுக்கு எண்பது விகிதம் வரை பணம் கடனாகக்கொடுக்கின்றன. மேலும், அப்பொருள்களை விலை உயரும்வரை வைத்திருந்தும் விற்கின்றன. ஆயினும், இவ்விற்பனைச் சங்கங்கள் பிற தரகுமண்டிகளைப்போலவே வர்த்தகஞ்செய்து வருகின்றமையால் மிகப் பெரும்

---

* இந்தியா முழுவதிலும் சுமார் 400 விற்பனைச் சங்கங்கள் உண்டு. அவற்றில் அங்கத்தினர்களாக இருப்பவர்களின் தொகை 63,000; அவற்றின் மூலதனம் ரூ. 22 லக்ஷம்; அவை கொடுத்துதவிய கடன் தொகை ரூ. 53 லக்ஷம்,

பயன் ஒன்றும் இவற்றால் விளைந்திலது என இந்திய பாங்கி விசாரணைச்சபை அங்கத்தினராகிய ஓர் ஆங்கில நிபுணர் நன்கு எடுத்துக் காட்டுகிறார்.*

12. இப்பொழுதுள்ள குறையைப்போக்க இந்நிபுணர் கூறும் ஆலோசனையோ மிக விபரீதமானது. அவ்வாலோசனை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின்மூலமாக ஒவ்வொரு வியவசாயியும் இப்பொழுது விற்கும் நெல், பருத்தி, எண்ணெய்வித்துக்கள் போன்ற ஒவ்வொரு விளைபொருளையும் பெருந் திரளாகத் திரட்டி (pool), அதன்பின்னர் அப்பொருளைத் தரவாரியாகப் பிரித்து (grading) மொத்தமாக விற்க முயற்சிக்க வேண்டும் என்பதாம். இவ்வாறே அபிப்பிராயப் படும் வேறு பலரும் உளர். ஆனால் கல்விப்பயிற்சியும் கூட்டுறவு உணர்ச்சியும் அற்றுச் சிறிய புலங்களை யுடையராய்ப் பெருங்கடனுள் ஆழ்ந்து தவிக்கும் ஏழை வியவசாயிகள் மூலமாய் இத்தகைய விற்பனை முறையைக் கைகூடிவரச் செய்யலாம் என எண்ணுவது ஊமன் கண்ட கனவே யாம்.

---

* Co-operative Marketing is not worth doing if existing methods cannot be improved on.—A. P. Mc-Dougall, C. B. E. (*Report of the Indian Central Banking Enquiry Committee*, P. 724, 725.).

# 15

## கிராமக் கைத்தொழில்கள்.

## (Rural Industries.)

---

நமது கிராமப் பொருளாதாரத் துறையி லுள்ள குறைகளை நீக்கக் கைத்தொழில்களை அபி விருத்திசெய்யவேண்டும் என முன்னரே காட்டப் பட்டுள்ளது. இத்தகைய கைத்தொழில்கள் யாவை? அவற்றை எங்ஙனம் வளர்ப்பது? என் பனபற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### பழைய நகரக் கைத்தொழில்கள்.

2. பண்டைக்காலத்திற் பெருஞ் சிறப் பெய்தியிருந்து இப்பொழுது அழிந்துகிடக்கும் நமது கைத்தொழில்களிற் பெரும்பாலன நகரக் கைத்தொழில்களேயாம். அவற்றுள் பஞ்சு, பட்டு முதலியவைகளைக் கையால் நூல் நூற்று ஆடைகளை நெய்வதும், கல், மரம், வெண்கலம், வெள்ளி, பொன் முதலியவற்றால் வேலைப்பாட மைந்த பணிகளைச் செய்வதும் ஆகிய இவைகள் தலைசிறந்து நின்றன. இக்கைத்தொழில்கள்

பெரும்பாலும் முக்கிய தலைநகரங்களிலும் பெருங் கோவில்கள் உள்ள இடங்களிலுமே நடைபெற லாயின. இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர் களும் பெரும்பாலும் நகரவாசிகளே ஆவர்.

### பண்டைக் கிராமக் கைத்தொழில்கள்.

3. ஆயினும் கிராமங்களிலும் கையால் நூல் நூற்றல், துப்பட்டி, கம்பளி முதலியன நெய்தல், வியவசாயிக்குரிய சிறிய கருவிகளைச் செய்தல், மனைக்கு வேண்டும் சட்டி, பானை முதலிய பண்டங் களைச் செய்தல், சர்க்கரை, எண்ணெய்போன்ற உணவுப்பொருள்களை ஆக்கல், ஆகிய பல சிறு கைத்தொழில்களும் நடைபெற்றுவந்தன. தம் வாழ்க்கைக்கு இன்றியமையாதன பொருள்களைச் செய்வதற்கே பண்டைக் கிராமமக்கள் இக்கைத் தொழில்களை மேற்கொண்டிருந்தனரே யன்றி இவற்றால் தம் வருவாயைப் பெருக்கிப் பெருத்த ஊதியம் பெற்றார்கள் இல்லை என்ற உண்மையை நாம் இவ்விடத்து நன்கு உணருதல் வேண்டும். இது நிற்க.

### கையால் நூல் நூற்றலும் நெய்தலும்

4. நம் பண்டைக் கைத்தொழில்கள் எல்லா வற்றுள்ளும் தலைசிறந்து விளங்கியது கையால் நூற்றலும் நெய்தலுமேயாம். கைப்பணியாய்ச்

செய்யப்பட்ட பஞ்சியாடைகளும் பட்டாடைகளும் மேல்நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதியாயின. ஆனால் மேனாட்டார் இப்பொழுது இயந்திரக்கருவிகளினால் செய்யப்பட்ட துணிகளை நமது தேசத்திற்குள் இறக்குமதிசெய்து அவற்றை மிகக்குறைந்த விலைக்கு விற்பதனால் இத்தொழில் சிறிது சிறிதாக அழிவுறுகிறது. இக்கைத்தொழிலாளர் பலரும் பிழைப்பற்று நிலத்தைச் சார்ந்து வயிறு வளர்க்கும் பயிர்த்தொழிலாளராக மாறுகின்றனர்.

5. எனினும், கைநெசவுத் தொழிலின் ஒரு பாகம் இன்னும் சிற்சிலவிடங்களில் சில பிரிவினரால் நடத்தப்பட்டுவருகிறது. நமது தேசத்திற் செலவழியும் மொத்தத்துணியில் கைநெசவுத் துணி மூன்றிலொரு பாகமாக விளங்குவதே இத் தொழிலின் இற்றைச் சிறப்பையும் புலப்படுத்தும்; எஞ்சிய இரண்டு பாகங்களில் ஒரு பாகம் நமது தேசத்தில் நிறுவப்பட்டுள்ள நெசவாலைகளிலும், மற்றொரு பாகம் பிறநாட்டாருடைய நெசவாலைகளிலும் உற்பத்தியாக்கப்படுவனவாம். இக்கைத்தொழில் இன்னும் நீடித்து வருவதற்குக் காரணம் பிறநாட்டுத்துணிக்கு இறக்குமதி வரி விதித்திருப்பதும், நமது தேசத்திலுள்ள ஆலைத் தொழில் திறமையுடன் நடைபெறாமையும், நமது

தேசமக்களின் உடைப்பழக்கம் பெரும்பாலும் மாறுதிருப்பதும் ஆகும். இம்மூன்று காரணங்களும் ஒத்துதவிபுரியும்வரை கைநெசவுத் தொழிலுக்குப் பழுதில்லை.

6. கைநெசவுக்குப் பின்வைத்தெண்ணப்படும் வேறொரு முக்கிய கிராமக் கைத்தொழில் கையால் நூற்றலாம். ஒழிந்தநேரங்களில் கிராம வியவசாயிகள் நூல் நூற்றுச் சிறிது பொருள் பெறலாம். அகிலபாரத சர்க்கா சங்கத்தின் ஆதரவின்கீழ் இப்பொழுது 5000 கிராமங்களில் நூற்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக இந்நூல் உற்பத்தி குறைவுபட்டுவருகிறது. இத்தொழில் ஒன்றினால்மட்டும் நமது கிராமப்பொருள்நிலை உயர்ந்துவிடும் என எண்ணுவது கூடாது.*

---

*"Without the other industries Khadi cannot make much progress" M. K. Gandhi (*The Harijan,* Nov. 16, 1934.)

'In England there is a marked revival of hand-spinning and weaving as cottage industries for English farmers. In Devonshire, I saw them trying to perfect a spinning wheel on which one man turning one handle could spin seven threads at one time' (Hatch, '*Up From Poverty*' P. 40.)

## பழைய கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்தல்.

7. அங்ஙனமாகவே, நமது பண்டைக் கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்து, நமது கிராமங்களிலுள்ள குறைகளைப் போக்கிவிடலாம் என்பதும் இயலாத வீண் ஆசையேயாம். நெற்குற்றல், வெல்லம் செய்தல், செக்காட்டல், கயிறு திரித்தல் ஆகிய இத்தகைய பழங் கைத்தொழில்கள் தனிநிலைக் கிராமவாழ்க்கைக்கே (independent village economy) ஏற்றவை. இயந்திரங்களின் போட்டி மிகுந்துவரும் இக்காலத்தில் இத்தகைய கைத்தொழில்களை உயிர்ப்பித்தாலும் இவற்றை இலாபத்துடன் நடத்தமுடியாது. மேலும், இவற்றால் நிலத்தைச் சார்ந்து பிழைப்போரின் தொகையும் குறைந்துவிடாது.* ஆயினும் சிற்சில கிராமங்களில் சுண்ணும்புசெய்தல், விளையாட்டுக்கருவி இயற்றல்போன்றுசிறப்பாகஉள்ள கைத்தொழில்களை விருத்திசெய்தால் அவை அவ்வக்கிராமவாசிகளுக்குச் சிறிதளவில் பயனளிக்கும். இத்தகைய சேவையை ஆற்றப் பல சங்கங்களும் பெருமக்கள் பொருளுதவியும் இருத்தல் நலம்.

---

* "The contribution which rural industries can make in reducing the heavy pressure on land is infinitesimal" (*Report of the Royal Commission on Agriculture*, P. 575).

## புதிய கிராமக் கைத்தொழில்கள்.

8. பண்டைக் கிராமக் கைத்தொழில்களுக்குப் புத்துயிரளித்துப் போற்றுவதுடன், புதிய பொருளாதார மாறுதல்களினல் எழுந்துள்ள புதிய கைத்தொழில்களையுமே நாம் சிறப்பாக ஆதரிக்கவேண்டும். இப்பொழுது நமது தேசத்தின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டுள்ள அரிசியாலை (rice mill), பஞ்சியாலை (cotton ginning factory), சருக்கரையாலை (sugar mill), எலும்புத்தூள் தொழிற்சாலை (bone crushing factory), நெருப்புக்குச்சி, சோப் முதலியனசெய்வதற்கு ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகிய பலவற்ருற் கிராமவாசிகளிற் சிலர் சிலமாதங்களுக்கேனும் வேலை கிடைக்கப்பெற்று வயிறுவளர்த்து வருகின்றனர்.

9. மேலும், காகிதம், பென்சில், கண்ணுடிப் பொருள்கள், விளையாட்டுக் கருவிகள் முதலியன உற்பத்தியாக்கத்தக்க சிறிய இயந்திரத்தொழிற்சாலைகள் பலவற்றையும் நாம் அமைக்கவேண்டும். ஜெர்மனி தேசச்தில் இத்தகைய சிறிய கைத்தொழிற்சாலைகளின் மூலமே அத்தேசமக்களின் ஐந்தில் இரண்டு பகுதியினருக்கு வேலைகிடைத்திருக்கிறதென அறிகிறோம். இத்தகைய சிறிய கைத்தொழிற்சாலைகள் இத்தேசத்தில் நிறுவப்படவும் வளர்ச்சியுறவும் வேண்டுமாயின், ஜெர்மனியி

விருந்தும் ஜப்பானிலிருந்தும், இப்பொழுது இறக்குமதியாக்கப்படும் இச்சிறு கைத்தொழிற் பொருள்களின்மேல் உயர்ந்த காப்புவரிகள் (protective duties) விதிக்கப்படவேண்டும். மேலும், நமது தானியங்கள், பழங்கள், கிழங்குகள், முதலியனவற்றிலிருந்தும், நெடுநாள் வைத்துண்ணக் கூடிய உணவுப்பொருள்களைத் தற்கால முறைப் படி தயாரிக்கத்தக்க சிறிய தொழிற்சாலைகளை அமைக்கலாம்.

### பெரிய தொழிற்சாலைகள்.

10. அன்றியும், பெரிய இயந்திரத்தொழிற் சாலைகளும் நமதுதேசத்திற் பெருகவேண்டும். இப்பொழுது சென்னை, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி, ஆகிய மிகச் சில தலைநகரங்களில் மட்டுமே நூலாலைகளும், நெசவாலைகளும் சருக்கரையாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றால் சுமார் 20 லக்ஷம் மக்களுக்கு வேலைகிடைக்கிறது. இவர்களனைவரும் கிராமவாசிகளே என்ற உண்மையையும் நாம் நன்குணரவேண்டும். ஆலைகளால் நமது கிராமங்களுக்குக் கேடுகளே விளைகின்றன எனக் கூறுவது இழுக்கு. நமது தேசமக்களின் வருவாயும் வாழ்க்கைநிலையும் உயர்ந்து, காகிதம், துணிபோன்ற இப்பொருள்கள் மிகுதியான அளவில் வாங்கப்படுமேல் இத்தகைய தொழிற்சாலைகள் இப்பொழுதுள்ளதைவிடப் பன்மடங்காகப் பெருக வழியேற்படும்.

# 16

## கல்வி.

## (Education.)

கல்வியுடைமை ஒருவருக்கு இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்கு இன்றியமையாதது. கல்வியறிவில்லாத மக்கட்கும் விலங்குகட்கும் இடையே யாதொருவித வேறுபாடும் கிடையாது என்று அறிஞர் கூறுவர். நமது தேசத்தில் இரண்டு எழுத்துக்களைக் கூட்டி வாசிக்க அறிந்தவர்கள் நூற்றுக்குப் பத்துப்பேர்; ஏனையோர் அறியாதார். இன்னும், பரந்த நூற் பயிற்சியைக் குறியாக வைத்துக்கொண்டு கணக்கிட்டால் கற்றவர் எனக் கருதப்படுவோர் தொகை நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு ஆக மிகச் சிறியதாகவே இருக்கும். அந்தோ! இந்தியாவிலுள்ள நம் தேசமக்கள் பிறதேச மக்களைப் போலப் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைவதென்றால் எங்ஙனம் கூடும்? நமது தேசத்திலுள்ள எல்லாக் குறைகளுக்கும் அடிப்படையான மூலகாரணம் கல்வியின்மையேயாகும்

என்பது ஒருவாற்றாலும் மறுக்கமுடியாத உண்மை.

### கல்வியின்மைக்குக் காரணம்.

2. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்தியமக்கள் பிறநாட்டு மக்களைவிடக் கல்வியிற் சிறந்து விளங்கினர். ஆனால் அக்காலத்திற்குப்பின் அரசியலில் எழுந்த குழப்பங்களால் பல அரசாங்கங்களும் சமஸ்தானங்களும் கெட்டழிந்தன. கிழக்கிந்திய வர்த்தகக் குழுவினர் சிறிது சிறிதாக ஆங்கில ஆட்சியை நிறுவுவதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தனராதலின் பண்டைக் கலாசாலைகளெல்லாம் போற்றுவாரற்று இறந்தன. இங்ஙனமாக, சுமார் 200 ஆண்டுகளாகத் தேசக்கல்வி வளர்ப்பாரின்றிக் குறைவுபட்டது.

3. 1813-ம் ஆண்டில்தான் முதன்முதலாகக் கிழக்கிந்திய வர்த்தகக் குழுவினர் கல்வியைப் பரப்ப முயன்றனர். அவ்வருடத்தில் ஒருலக்ஷம் ரூபாய் இதற்கென ஒதுக்கிவைக்கப்பட்டது. ஆனால், இப்பணம் அரபி பாஷையிலும் வடமொழியிலுமுள்ள நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் துறையில் செலவிடப்பட்டதேயன்றிப் பொதுமக்கள் கல்விக்கெனச் செலவிடப்படவில்லை. இதற்கு அறுபதாண்டுகளின் பின்னரே பொது

மக்களின் கல்வியைப்பற்றிச் சிறிது முயற்சி எடுக்கப்பட்டது. இதற்கிடையில் மக்கள்தொகையும் கல்விப்பயற்சியற்றவர் தொகையும் அளவுக்கு மிஞ்சிப் பெருகிவிட்டபடியால் எல்லா மக்களுக்கும் கல்வியைப் புகட்டுவது இயலாத செயலென்றும், மத்தியஸ்திதியிலுள்ள ஒருசிலருக்கு மட்டுமே அதை வழங்கிவிட்டால், அவர்கள் மூலமாக அது எல்லா மக்களிடத்து வழிந்து சுரந்துவிடும் எனவும் அரசாங்கத்தார் தீர்மானித்தனர்.* அங்ஙனம் தீர்மானித்து, ஆங்கிலக் கல்வியை முக்கிய நோக்கமாகக் கொண்ட சருவகலாசாலைகளையும் உயர்தரக் கல்லூரிகளையும் ஆங்காங்கே நிறுவினர்.

## கல்வி வளர்ச்சி.

4. 1880-ம் வருடத்திலிருந்து பொதுமக்கட்குரிய கல்விக்காகச் சற்று அதிகமான பணம் செலவிடப்பட்டது. 1910-ல் அத்தொகை 50 லக்ஷம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது

---

* "Up to this time the East India Company had regarded a direct attact on the problem of mass education as an impossibility. They thought that the only means of reaching the masses was by educating the literary classes who were comparatively few in number and letting education "filter down" through them, a theory generlly known as the filtration theory" (*Hartog Committee Report*, P. 12.)

இந்தியா முழுவதிலும் கல்விக்காகச் செலவிடப் படும் மொத்தத்தொகை சுமார் 15 கோடி ரூபாய். இவ்வளவு செலவிட்டும் நூற்றுக்கு 7 ஆண்களும், 2 பெண்களுமே பள்ளியிற் படிக்கிறார்கள். ஒவ்வொரு வருடத்திலும் கல்வி பயிலும் மாணவர் தொகை நூற்றுக்கு 4 விகிதந்தான் உயருகிறது. செலவிடப்படும் பணமும், கல்விபயிலும் மாணவர் தொகையும் இவ்விகிதப்படியே உயர்ந்துகொண்டு போகுமானாலும் இந்தியமக்கள் அனைவரும் இந்த யுகயிறுதியிலும் கற்றவர்கள் ஆகார். இப்பெருங் குறையை எவ்வாறு போக்க இயலும்?

## கட்டாயக் கல்வி.

5. 1911-ம் வருடத்தில் கோக்கலே என்னும் பெரியார் கட்டாயக் கல்வித்திட்டத்தை (compulsory education) ஆரம்பித்தால் நமது குறை நீங்குமென முதன்முதல் எடுத்துக்கூறினார். இப்பொழுது எல்லாமாகாணங்களிலும் இக்கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டுச் சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. ஆயினும் சுமார் 120 நகரங்களிலும் சில கிராமங்களிலும்மட்டுமே இத்திட்டம் கைக்கொள்ளப்பட்டுள்ளது. பிற இடங்களில் இதற்கு ஆதரவு கிடையாது. ஆதரவு கிடைப்பினும், அதை நிறைவேற்றிவைப்பதிற் பற்பல சங்கடங்கள் நிகழ்கின்றன. இத்திட்டம் நிறை

வேற்றப்படினும், பள்ளிக்கூடஞ் செல்லும் எல்லாச் சிறுவர்களும் நான்காம் வகுப்பு முடியும் வரை கற்காது இடையில்விட்டு நீங்கிப் போவதனலும், நான்காம்வகுப்புக்குக் குறைவாகக் கற்போர் வெகுசீக்கிரத்தில் தாம் கற்றதை முற்றும் மறந்துவிடுவதனலும், (relapse into illiteracy) செலவிடும் பணமெல்லாம் வீண்நஷ்டமாக முடிகிறது என முதலில் வியவசாயக் கமிஷன் அறிக்கையிலும் பின்னர் ஹார்ட்டாக் கமிட்டி அறிக்கையிலும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். * ஆதலால் கட்டாயக் கல்வித் திட்டத்தாலும் இக்குறை நீங்காதெனக் கண்டுகொள்க.

### வேறு முறைகள்.

6. இப்பொழுது வயதுவந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்விகற்பிக்குமாறு தேச முழுவதிலும் சுமார் 12000 இராப்பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றிற் கல்விபயிலும்

---

* "Under present conditions expenditure on primary education is largely wasted" (about 60%) *Hartog Committee Report*, P. 48. The number of those who pass through Class IV is a little more than the normal loss due to death among literate males of twenty years of age and over. In the three provinces of Bengal, Bihar and Burma, the annual loss due to death exceeds the number of pupils in Class IV" (*Agricultural Commission Report*.)

ஆடவர் தொகை சுமார் 3 லக்ஷம்; பெண்கள் தொகை சுமார் 1500. மேலும்,தேசத்தின் பற்பல பாகங்களில் வாசகசாலைகளும், புத்தகாலயங்களும் நிறுவப்பட்டுவருகின்றன. ஆயினும் இவை பெரும்பாலும் சிறுவர்களடங்கியனவாகவும், அதிகப்பயனை விளைவிக்காதனவாகவுமே விளங்குகின்றனவே யன்றிப் பிறநாடுகளிலுள்ளவாறு உயர்தரக் கல்வியை அளிப்பனவாக அமைக்கப்பட்டில. இத்தகைய ஸ்தாபனங்களின் மூலமாக எல்லாமக்களுக்கும் கல்வியறிவை ஊட்டிவிடுவதும் சாத்தியமன்று.

7. 'ஊணுக்குப்பின் கல்வி' என்பது மேனாட்டாருடைய கோட்பாடு; ஆனால் நமது தேசத்தவரோ 'கல்விக்குப்பின் ஊண்' என்ற உயரிய கொள்கையை யுடையார். 'செவிக்குணவு இல்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்பது வள்ளுவனார் இட்டுச்சென்ற சட்டம். ஆதலால், அறங்கள் யாவற்றிலும் தலைசிறந்த இவ்வறத்தைச்செய்யப் பெருநிதி படைத்தவர் பலர்முன்வரல்வேண்டும். இவ்வரியசேவைக்காகப் பலர் நன்கொடைகளும் மானியங்களும் நிதிப் பொதிகளும் (endowments) அளிக்கவேண்டும்.

8. செட்டிநாட்டரசர் எனப் பட்டம்பெற்றுத் திகழும் நாட்டுக்கோட்டை நகரத்தார் குல

திலகர் ராஜா ஸர் அண்ணாமலைசெட்டியார் ஒரு சருவகலாசாலையை நிறுவியுள்ளமை போற்றத் தக்கது. கல்கத்தா சருவகலாசாலையில் ஒரு வருடத்தில் ஆறு சொற்பொழிவுகளைமட்டும் நிகழ்த்துவோருக்கு 9000 ரூபாய் சம்மானம் அளிக்கத் தக்க நிதிப்பொதி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. சென்னைச் சருவகலாசாலையிலும் இத்தகையன உண்டு. கிராமக்கல்விக்கென்று இப்படிப்பட்ட நிதிப்பொதிகள் ஏற்படுத்தப்பட்டாலன்றி நம் குறை விரைவில் நீங்காது. மேலும், கிராமக் கல்வியைப் பரப்புவதற்கென்று பற்பல சங்கங்களும் ஸ்தாபனங்களும் பொதுஜன ஆதரவிலும், சிறப்பாக இளைஞர்கள் ஆதரவிலும், ஆரம்பிக்கப்பட வேண்டும். கல்வியைக் கற்பிப்பது அரசாங்கத்தார் கடமை; அதற்குரிய நிதி வரிப்பணத்திலிருந்தே செலவிடப்படவேண்டும் என நாம் எண்ணியிருந்தால் நம்குறை என்றும் ஒழியாது.

# 17

## கிராமச் சீரமைப்பு.

## (Rural Reconstruction.)

இதுகாறும் நமது கிராமங்களின் பொருளாதாரநிலையும், அந்நிலையில் ஆங்காங்கே காணப்படும் குறைகளும், அவற்றைப் போக்கும் வழிகளும் ஆராய்ச்சி செய்யப்பட்டன. இவ்வாராய்ச்சியினல் நாம் முடிவாகக் கண்ட உண்மை நமது பொருளாதாரத் துறைகள் எல்லாவற்றுள்ளும் பல குறைகள் நிரம்பிக்கிடக்கின்றன என்பதேயாம். ஆதலால் இக்குறைகளைப் போக்குமாறு தேசத்தின் பற்பல பாகங்களில் சிற்சில ஸ்தாபனங்களும் சங்கங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சேவையைக் கிராமச் சீரமைப்பு (rural reconstruction) என்பர். இதுபற்றி இக்கட்டுரையிற் சிறிது கூறுவாம்.

### சுய முயர்ச்சி

2. தம்கையே தமக்குதவி எனக் கிராமமக்கள் எண்ணித் தம் முயற்சியிைலேயே தம் குறை

களைப் போக்குவார்களாயின் அதுவே பெருஞ் சிறப்புடையதாகும். வீடுகளையும், தொழுவங் களையும், தண்ணீர் எடுக்கும் நீர்நிலைகளையும், குப் பை கொட்டிவைக்கும் இடங்களையும் ஒவ்வொரு கிராமவாசிகளும் சுத்தமாக வைத்துக்கொண் டால் நோயணுகாமல் தடுக்கலாமன்றோ? காய்ச் சலினால்மட்டும் நம் தேசத்தில் வருடத்திற்குச் சுமார் 5 கோடி மக்கள் நோய்வாய்ப்படுகின்றன ரென்றும், அவர்களுள் 40 லக்ஷம் பேர் இறக் கின்றனர் என்றும் அறிகிறோம். இந்நோயை முழுவதும் நீக்கல்கூடும் என மருத்துவ ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர். மேலும், கிராமமக்கள் ஒத்துழைத்தால் சிறுசிறு பாட்டைகள், சாலைகள், பாடசாலைகள், குடி தண்ணீர் எடுக்கத்தக்க கிணறுகள், முதலியன அமைத்துக்கொள்ளலாம். இவ்வாறான பல கருமங்களையும் கிராமவாசிகளே தம் சொந்த முயற்சியாற் செய்துவந்தால் இப் பொழுதுள்ள குறைகளிற் பெரும்பாலன எளி தில் நீங்குமன்றோ? இம்முறையில் ஒவ்வொரு வேலைக்கும் தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொண்டாலும் அரும்பெருங்காரியங் கள் எளிதிற் கைகூடிவரச் செய்யலாம்.*

---

* வங்காளத்தில் குளிர்சுரத்தைத் தடுப்பதற்காக சுமார் 950 சங்கங்கள் (anti-malarial co-operative societies) நிறுவப்பட்டுச் சிறந்த சேவை செய்துவருகின்றன என வியவ

பிறர் முயற்சி.

3. இனி, கிராமவாசிகளின் முன்னேற்றத்திற்காகப் பரோபகார சிந்தையுடன் பிறமக்கள் செய்துவரும் முயற்சிகள் சிலவற்றைப்பற்றிச் சிறிது காண்போம். ஸர் டேனியல் ஹாமில்டன் (**Hamilton**) என்னும் ஸ்காட்லாந்து தேசவாசி கல்கத்தாவுக்குச் சமீபத்தில் தனக்குச் சொந்தமான சுமார் 18,000 ஏக்கர் பரப்புள்ள தனது பெரும்பண்ணையில், பயிரிடும் ஒவ்வொரு குடியானவனுக்கும் ஆறு ஏக்கர் அளவுள்ளதும் இலாபந்தரத்தக்கதுமான ஒரே தொகுதிப் புலங்களை அமைத்துக் கொடுத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே, குடியானவர்கள் கடன் பெறுதல், குடும்ப வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை வாங்கல், விளைபொருள்களை விற்றல், ஆகிய எல்லாவற்றையும் செய்துவரும்படியாக அப்பண்ணையை நடத்திவருகிறார். சாவகாரிகள் ஒருவரையும் அவர் அங்கு உட்புகவிடுவதில்லை. பெரிய ஜமீந்தார்களும், மிட்டாதார்களும் ஹாமில்டன் செய்யுமாறு செய்தால் குடிகள் இன்புற்று வாழ்வரென்பதில் ஐயமென்ன?

---

சாயக் கமிஷன் அறிக்கையிற் காட்டப்பட்டுள்ளது (பக்கம் 489). பஞ்சாபில் கிராமச் சீரமைப்புச் சங்கங்களால் பாடசாலைகளும், வைத்திய சிகிச்சை வசதிகளும், வேறுபல அரிய தொண்டுகளும் ஆற்றப்பட்டுவருகின்றன. (*Indian Central Banking Enquiry Committee Report*, P. 716-719.)

4. இந்திய சேவா சங்கம் (Servants of India Society), இராமகிருஷ்ண மிஷன், பூனு சேவா சதன சங்கம் (Poona Seva Sadan Society), இந்திய கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (Y. M. C. A.) ஆகிய இத்தகைய பல பரோபகார சங்கங்களின் ஆதரவில் கிராமச் சீரமைப்பு வேலை பலவிடங்களில் நடைபெற்றுவருகிறது. கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தார் தென்னிந்தியாவிலுள்ள ஆறு கிராமங்களில் இவ்வேலையை ஆரம்பித்திருக்கின்றனர். திருவாங்கூர் இராஜ்யத்திலுள்ள மார்த்தாண்டம் என்னும் கிராமத்தில் நடப்பிக்கப்படும் வேலை பலராலும் மெச்சப்படுகிறது. சுமார் 50 மைல் சுற்றளவிலுள்ள எல்லாக் கிராமங்களிலுள்ளவர்களுக்குள்ளும் கூட்டுறவு முறையைப் பரப்பியும், தேனீக்களை வளர்த்துத் தேன் எடுத்தல் (bee keeping), கோழி வளர்த்தல் (poultry), கைத்தறியில் துணி நெய்தல் முதலிய பல கிராமக் கைத்தொழில்களை வளர்த்தும், நன்முறையிற் கல்வியைப் புகட்டியும் இவ்வாறான பல அரிய சேவைகளை அச்சங்கத்தார் ஆற்றிவருகின்றனர்.

### அரசாங்கத்தார் முயற்சி.

5. இறுதியாக, கலெக்டர் உத்தியோகஸ்தரான பிரேய்ன் (Brayne) என்பாரும் அவரது மனைவியும் பஞ்சாபிலுள்ள கூர்ஹான் (Gurguon)

என்னும் ஜில்லாவில் தொடங்கிய கிராமச் சீரமைப்புவேலையும் போற்றத்தக்கது. இப்பெரியார் சர்க்கார் இலாக்கா அதிகாரிகளையும், பொதுமக்களுக்குள் தலைவர்களாக விளங்குபவர்களையும், ஒன்றுகூட்டிக் கிராமங்களிலுள்ள எல்லாக் குறைகளையும் ஒருங்கே களையுமாறு அரிய முயற்சிகள் செய்துவந்தனர். இவருடைய இயக்கத்தின் சிறப்பியல்பு கிராமங்களுக்கு உதவிசெய்யத்தக்க தொண்டர்களைப் (village guides) பயிற்றுவிப்பதாம். *

## திட்டம் வேண்டும்.

6. நாம் மேற்காட்டியனபோன்ற முயற்சிகள் போற்றத்தக்கனவாம். ஆயினும், சென்னையில் ஒரு சங்கமும், பஞ்சாபில் இரு சங்கங்களும், பம்பாயில் ஒருவரும், வங்காளத்தில் இருவருமாக மிகச்சில ஸ்தாபனங்களின் மூலமாக மிகச்சிலர் மட்டும் உழைத்துவருவார்களானல் நமது குறைகளை நாம் எப்படி நீக்கக்கூடும்? ஆதலால் கிராமச் சீரமைப்பு முயற்சியில் இதுவரை நடந்திருக்கும் வேலையாற் கிடைக்கப்பெற்ற அநுபவங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நாம் மேலே

* 'இந்திய கிராமத்தில் சாக்ரடீஸ்' (Socrates in an Indian Village) என்னும் பெயருடன் இப்பெரியார் வெளியிட்ட நூல் எல்லோராலும் படித்து இன்புறத்தக்கது.

காட்டியவாறு, கிராமமக்களின் சுயமுயற்சியும், பரோபகார நோக்குடைய பிறர் முயற்சியும், அரசாங்கத்தார் முயற்சியும் ஒருங்குசேர்ந்த ஒரு பெருந்திட்டத்தை வகுத்துக்கொண்டு தேசமுழுவதிலும் கிராமச் சீரமைப்பு இயக்கத்தை உடனே தொடங்கித் தீவிரமாக முயலவேண்டும். அவ்வாறு முயன்றால், இப்பொழுது பல்கிக்கிடக்கின்ற நம் குறைகளிற் பெரும்பாலன விரைவில் நீங்கும்.

## இவ்வியக்கத்தைத் தொடங்குவது யார்?

7. தேசமுழுவதற்கும் வழங்கவேண்டிய திட்டத்தை வகுப்பது யார்? அத்திட்டத்தையொட்டிய இயக்கத்தைத் தொடங்குவது யார்? எல்லாச் சேவையும் அரசாங்கத்தார் கடன் எனப் பொறுப்பை அவர்கள்பாற் போட்டுவிட்டு வாளா விருப்பது நமது மக்களிற் பெரும்பாலாருடைய குறையாக இருக்கின்றது. இங்ஙனம் இருப்பது நமக்குக் கேடு விளைவிக்கும் என நாம் நன்குணர வேண்டும். நமது மக்களின் பெருங்குறையாகிய கல்வியின்மை ஒன்றையே அரசாங்கத்தாரால் நீக்க இயலாதென்றும் அதற்குரிய நிதிமுழுவதையும் வரிப்பணத்திலிருந்து கொள்ளமுடியாதென்றும் நாம் முன்னரே விளக்கிக் காட்டினேமன்றோ?

8. ஆதலால் புதிய அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கப்படும் இக்காலத்தில் கிராமச் சீரமைப்பு இயக்கத்தைத் தொடங்கவேண்டியது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் (political parties) முதற் கடமையாகும். பொருளாதார நிபுணர்கள் அடங்கிய கிராமச் சீரமைப்புக் கழகம் (Economic Council of Rural Reconstruction) என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவுவது நலம். இக்கழகத்தார்களின் ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் பரிசீலனை செய்வதற்கு ஒரு நிர்வாகக் கழகமும், அத்தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதற்கு மாகாணங்களிலும் ஜில்லாக்களிலும் பிற தொகுதிகளிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களும் வேண்டும்.

## நமது கிராமவாழ்க்கையின் சிறப்பியல்பு.

9. இறுதியாக நாம் எடுத்துக்காட்ட வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. நாம் இந்நூலில் ஆங்காங்கே சுட்டியபடி நமது தேசத்தில் மக்கட் பெருக்கு மிக்கிருப்பதனாலும், பயிரிடத்தகுதிவாய்ந்த நிலம்முழுவதும் பயிரிடப்பட்டிருப்பதனாலும், நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கல்விப் பயிற்சியற்றவர்களாய் இருக்கின்றமையாலும், கைத்தொழில்கள் விரைவில் விருத்தியடையப் பல இடர்ப்பாடுகள் நிரம்பியுள்ளமையாலும் அதிர்ஷ்டவசத்தினால் இவற்றுள் அநுகூலமான பெரும்

மாறுதல்கள் விளைந்தாலன்றி நமது கிராம மக்களின் குறைகள் அனைத்தும் காலப்போக்கிற்றான் நீங்கல்கூடும். அங்ஙனம் நீங்கினும், நம் கிராம மக்கள் மேல் நாட்டுமக்கள்போல மிக்கப் பொருட் பெருக்கை அடைந்துவிடுவரெனத் துணிந்து கூறவும் முடியாது.

10. ஆயினும், இதுபற்றி நாம் வருந்த வேண்டியதில்லை. பொருளீட்டுவதுமட்டும் நம் வாழ்க்கையின் நோக்கம் அன்று. ஈட்டும் பொருள் நல்வழியில் வரல் வேண்டும் என்பதும், அது அறத்துக்கும் இன்பத்துக்கும் பயன்படவேண்டும் என்பதும் நம் முன்னோர் கண்டுதெளிந்த உண்மைகள். இவ்வுண்மைகளை வாழ்க்கையிற் பெறுதற்கு ஏற்ற இடங்கள் கிராமங்களே. ஆதலால் நமது கிராமச் சீரமைப்புத் திட்டத்தின் முடிந்த நோக்கம் வறுமையை நீக்க வருவாயைப் பெருக்குதல் மாத்திரமன்றி மக்களது புனித வாழ்க்கையையும் இணைப்பதாக இருத்தல் வேண்டும். இந்நெறியில் முனைந்துநின்று நாம் வெற்றிபெற்றால், நமது தேசத்துக் கிராம வாழ்க்கையானது பிறதேசத்துக் கிராமவாழ்க்கைக்கு ஓர் சிறந்த முன்மாதிரியாக நின்றிலங்கும்.

PRINTED AT
THE HARISAMAYA DIVAKARAM PRESS,
MADURA.